# புதிய ஜனநாயகம்

ஜனவரி 2017
ரூ. 15.00



# அ.தி.மு.க.வை அழிக்காவிடில் தமிழகமே அழியும்!

# போராட்டங்கள் இருட்டடிப்பு:
# அன்று இந்திரா... இன்று மோடி...!

**பண மதிப்பு நீக்க நடவடிக்கைகளுக்கு எதிரான பொதுமக்கள், புரட்சிகர அமைப்புகள், ஜனநாயக சக்திகளின் போராட்டங்களை மோடியும் தனியார் ஊடகங்களும் கூட்டுச் சேர்ந்து இருட்டடிப்பு செய்து வருவது, இந்திராவின் ‘‘நெருக்கடிநிலை’’ காலத்தை நினைவூட்டுகிறது.**

‘‘பணத் தட்டுப்பாடு தொடர்ந்து நிலவுமானால் கலகம் ஏற்படும்’’ என உச்சநீதி மன்ற நீதிபதிகள் போகிறபோக்கில் குறிப்பிட்ட பொழுது, ‘‘மக்கள் கூடும் கோவில் திருவிழாக்கள் உள்ளிட்டுப் பல இடங்களில் நெரிசல் ஏற்பட்டு தள்ளுமுள்ளுகள் நடந்திருக்கின்றன. அடிதடிகள், வன்முறைகள் வெடித்திருக்கின்றன. ஆனால், வங்கி, ஏ.டி.எம். வாசல்களில் நிற்கும் மக்கள் அமைதியாக இருந்து பணத்தைப் பெற்றுச் செல்கின்றனர். பணம் கிடைக்காதபோதும் கலகத்தில் இறங்கவில்லை’’ என ஏளனமாக எழுதி உச்சநீதி மன்றத்திற்குப் பதில் அளித்தது, மோடியின் கூலிப்படையான தினமணி.

மோடியோ, ஸ்மார்ட் போனும், ஆஃப்ஸுமாகத் திரியும் கையளவேயான ஒரு சிறு கூட்டத்திடம் கருத்துக் கணிப்பு என்ற மோசடியை நடத்தி, இந்திய மக்களுள் ஆகப் பெரும்பான்மையோர் தனது பண மதிப்பு நீக்க நடவடிக்கையை ஆதரிப்பதாக விளம்பரப் படுத்திக் கொண்டார்.

‘‘நெருக்கடி நிலை காலத்திலும்கூட இது போன்ற அமைதி தான் இருந்தது. ஆனால், அதன் பின் நடந்த பொதுத் தேர்தலில் காங்கிரசு தோற்கடிக்கப்பட்டது. எனவே, மக்களின் அமைதியை அங்கீகாரமாக எடுத்துக் கொள்ளக்கூடாது’’ என பழைய வரலாற்றை நினைவுபடுத்தி மோடியின் தம்பட்டத்திற்குப் பதிலடி கொடுத்திருக்கிறார், முன்னாள் நிதியமைச்சரான ப.சிதம்பரம்.

இந்தப் பழைய வரலாறு கிடக்கட்டும். மக்கள் அசந்து தூங்கும் நேரத்தில் வீட்டிற்குள் புகும் திருடன் போல, பண மதிப்பை நீக்குவதாக நவம்பர் 8 இரவில் அறிவித்தார், மோடி. மறுநாள் விடியலிலே அந்நடவடிக்கையின் மக்கள் விரோதத் தன்மையைப் புரட்சிகர அமைப்புகளும், நாணயமாகச் சிந்திக்கக்கூடிய அறிவுத் துறையினரும் அம்பலப்படுத்தினர்.

குறிப்பாக, மக்கள் அதிகாரம் அமைப்பினர், ‘‘இது கருப்புப் பண ஒழிப்பு நடவடிக்கை அல்ல, மக்கள் பணத்தை வங்கிகளில் குவித்து கார்ப்பரேட்களுக்கு தாரைவார்க்கும் நடவடிக்கையே!’’ என மறுநாளே மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்ததோடு, பத்திரிக்கைச் செய்தியும் வெளியிட்டனர். நவம்பர் 10 அன்று ம.க.இ.க., பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு., பெ.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகளின் ஆதரவோடு, சென்னை, தி.நகரில் உள்ள பா.ஜ.க. தலைமை அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

எதிர்க்கட்சிகள் மட்டுமின்றி, சாதாரண பொதுமக்களும்கூட மோடியின் நடவடிக்கையை நேரடியாகவும், அந்நடவடிக்கையின் ‘நல்ல’ நோக்கத்தை முன்னிறுத்தியும் ஆதரித்துக் கொண்டிருந்த போது, பண மதிப்பு நீக்க நடவடிக்கையின் பின்னுள்ள மக்கள் விரோதத் தன்மையை விளக்கிப் பிரச்சாரத்தையும், போராட்டங்களையும் மக்கள் அதிகாரம் முன்னெடுத்தது.

புதுவை முத்தியால்பேட்டையில் அமைந்துள்ள இந்தியன் வங்கிக் கிளை அதிகாரிகள் தினந்தோறும் பணமில்லை என்ற பாட்டைப் பாடியே பொதுமக்களைத் திருப்பி அனுப்பிக் கொண்டிருந்த நிலையில், மக்கள் அதிகாரம் அமைப்பினர் பணத்தை மாற்றுவதற்காக வங்கி வாசலில் காத்துக்கிடந்த மக்களைத் திரட்டி, வங்கிக்குள்ளேயே புகுந்து ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். இந்த எதிர்த்தாக்குதல் போராட்டத்தால், அடுத்த ஒன்றரை மணி நேரத்திலேயே 20 இலட்ச ரூபாய் புதிய நோட்டுக்களுக்கு ஏற்பாடு செய்து, மக்களின் கைகளில் இருந்த செல்லாத நோட்டுக்களை மாற்றித் தந்தனர், வங்கி அதிகாரிகள். அரசும், அதிகாரிகளும் சொல்லும் காரணங்களை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தால், நமது இன்னல்கள் தீராது என்பதை உணர்த்துவதாக அமைந்தது, இப்போராட்டம்.

மோடியின் 50 நாட்கள் கெடு முடிந்த பிறகும் மக்களின் துயரம் தீராத நிலையைக் கண்டித்துப் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணியின் தலைமையில் சென்னை-அண்ணா சாலையில் அமைந்துள்ள ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியாவின் மையக் கருவூலக் கிளையை முற்றுகையிட்டு நடந்த போராட்டம்.



நவம்பர் 8 அன்று 1,000 மற்றும் 500 ரூபாய் நோட்டுக்கள் செல்லாது என்று அறிவித்த மோடி, ‘‘அடுத்த மூன்று தினங்களில் புது நோட்டுக்கள் மக்களுக்குக் கிடைத்து விடும்’’ என உதார் விட்டார். பிறகு, ‘‘ஐம்பது நாட்களுக்கு கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்ளுங்கள்’’ என மக்களுக்கு அறிவுரை செய்தார். ஆனாலும், பொதுமக்கள் கடந்த ஐம்பது நாட்களில் வெளியான மோடி அரசின் விதவிதமான அறிவிப்புகளைக் கேட்டுக்கொண்டு அமைதியாக இருந்துவிடவில்லை. தமிழகத்தில் பல வங்கிக் கிளைகள் வாயிலின் முன்பாக முற்றுகைப் போராட்டங்கள் நடந்திருக்கின்றன. வெள்ளையன் தலைமையிலான தமிழ்நாடு வணிகர் சங்கப் பேரவை பிளாஸ்டிக் பண அட்டைகளை எரிக்கும் போராட்டத்தை நடத்தியது. பீகார்,

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்

# அதிகாரத்தில் உழவனின் எதிரிகள் ! எழவு வீடானது தமிழகம் !!

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 32 இதழ்: 3
ஜனவரி 2017

தனி இதழ்: ரூ. 15.00
ஆண்டு சந்தா: ரூ.180.00

வடிவமைப்பு : மு.துரை

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண் : 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com
தொலைபேசி: 94446 32561

தண்ணீரின்றிப் பயிர்கள் வாடுகின்றன, கால்நடைகள் தவிக்கின்றன, வாடி மடிந்து கொண்டிருக்கும் நெற்பயிரை மேய்கின்றன ஆடுகள். இந்தக் காட்சியே நஞ்சாகி விவசாயியின் நெஞ்சை அடைத்து மரணத்திற்குத் தள்ளுகிறது. காவிரி டெல்டாவில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் இதுதான் நிலைமை. அரசுக் கணக்கீட்டின்படியே கடந்த சில நாட்களுக்குள் தமிழகத்தில் விவசாயிகளின் மரணம் நூறைத் தாண்டிவிட்டது. குடிநீரின்றி மரிக்கும் கால்நடைகளின் மரணத்துக்குக் கணக்கில்லை. காவிரியில் தண்ணீர் வந்திருந்தால், பருவமழை பொய்க்காதிருந்தால் இந்த மரணங்களைத் தவிர்த்திருக்கலாமோ என்று அங்கலாய்ப்பது அறிவீனம்.

காவிரியில் எப்படித் தண்ணீர் வரும்? ‘‘இது எங்கள் ஆறு, எங்களுக்குப் போக நாங்கள் விரும்பினால்தான் உங்களுக்குத் தண்ணீர் தருவோம்’’ என்கின்றன கர்நாடகத்தின் காங்கிரசு, பா.ஜ.க. அரசுகள். இந்த இரு கட்சிகளும்தான் மாறி மாறி டில்லியிலும் ஆட்சியிலிருந்து வருகின்றன. இருந்த போதிலும், தேசிய ஒருமைப்பாட்டுக்கும், நடுவர் மன்றத் தீர்ப்புக்கும், சர்வதேச நதிநீர்ப் பங்கீட்டு முறைமைக்கும் எதிரான தங்கள் கட்சியினரின் நடவடிக்கையை அவர்கள் தடுப்பதில்லை. மாறாக, கர்நாடக மக்கள் மத்தியில் தமிழகத்துக்கு எதிரான வெறுப்பைத்தான் தூண்டுகிறார்கள். காவிரி நீரைத் தமிழகத்துக்கு மறுப்பதற்கு சூதும் சூழ்ச்சியும் செய்துவரும் மோடி அரசு, உழவர்கள் செத்துக் கிடக்கும் மண்ணில் சல்லிக்கட்டு நடத்தி தமிழர் பண்பாட்டைத் தூக்கி நிறுத்தப்போவதாகப் பேசுகிறதே, இதைவிட நமக்கு வேறு என்ன இழிவு வேண்டும்?

சொத்துக் குவிப்பு வழக்கில் பெங்களூரு நீதிமன்றத்தில் தண்டனை பெற்ற ஜெயலலிதாவின் மேல்முறையீட்டு வழக்கை மூன்றே மாதத்தில் முடிக்க வேண்டுமென்று உயர்நீதிமன்றத்துக்கு உத்தரவிட்ட உச்சநீதிமன்றம்தான் கர்நாடக அரசின் இழுத்தடிப்பையும், அவமதிப்பையும் கண்டுகொள்ளாமல் விடுகிறது. இந்த உச்ச நீதிமன்றத்திடமா நீதியை எதிர்பார்க்கிறோம்?

நடுவர் மன்ற தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டதைத் தன்னுடைய தனிப்பட்ட சாதனையாகக் காட்டி, காவிரித்தாய் என்று பட்டம் சூட்டிக்கொண்ட ஜெயலலிதா படுக்கையில் விழுந்தவுடன் அமைச்சர்களும் அதிகாரிகளும் அப்போலோவில் தவமிருந்தார்களேயின்றி, நீரின்றித் தவிக்கும் விவசாயியை நினைத்துப் பார்க்கக்கூட அவர்களுக்கு நேரமில்லை. அதே நேரத்தில், கர்நாடகத்தில் கலவரம் நடந்து கொண்டிருந்த சூழலிலும், லாரி லாரியாக காவிரி மணல் கர்நாடகத்துக்குச் சென்று கொண்டிருந்தது. ஆறுகளைச் சூறையாடி விற்ற பணத்தைத்தான் ரெட்டி, ராவ் கும்பலின் மூலம் வெளி மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் கடத்தி வைத்திருக்கிறது, ஜெயா-சசி கும்பல்.

விவசாயத்தை அழிப்பதென்பது கடந்த 25 ஆண்டுகளாக நாடெங்கும் எல்லாக் கட்சி அரசுகளும் கடைப்பிடித்து வரும் கொள்கை. தூர்வாரப்படாத கால்வாய்கள், ஆக்கிரமிக்கப்பட்ட ஏரி- குளங்கள், கழிவு நீர்க் கால்வாய்களாக மாற்றப்பட்ட ஆறுகள் ஆகிய அனைத்தும் இதற்கான ஆதாரங்கள். தண்ணீரில்லை என்பது மட்டுமல்ல, உரம், பூச்சி மருந்து விலை உயர்வு, விளைபொருளுக்கு விலையில்லை, விற்ற கரும்புக்கும் பணமில்லை, வங்கிகளில் கடன் இல்லை என்று நாற்புறமும் சூழ்ந்து கொண்டு விவசாயிகளின் மீது போர் தொடுக்கின்றன மத்திய, மாநில அரசுகள். ஐநூறு பேருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கும் ஒரு பன்னாட்டு நிறுவனத்துக்கு நிலம், நீர், மின்சாரம், சாலை, வரிவிலக்கு எல்லாம் அளித்து பாக்குவைத்து அழைக்கும் அரசு, கோடிக்கணக்கான மக்களை வாழவைக்கும் விவசாயத்தை அலட்சியப்படுத்துகிறது என்றால், அது அறியாமல் நடக்கும் பிழையோ, சில அரசியல்வாதிகள் - அதிகாரிகளின் அயோக்கியத்தனத்தால் நேரும் தவறோ அல்ல. விவசாயத்தையும் உணவுப்பொருள் தற்சார்பையும் அழிப்பதுதான் தனியார்மய-தாராளமயக் கொள்கையின் இலக்கு. அந்த இலக்கை நிறைவேற்றுவதற்குத்தான் இந்த அரசமைப்பே பணியாற்றுகிறது. இந்த அரசமைப்பின் அங்கங்களான கட்சிகளும், அதிகார வர்க்கமும், நீதித்துறையும் தமது சொந்த நடவடிக்கைகளின் வாயிலாகவே, தாங்கள் உழவனின் எதிரிகள் என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை உழவர்கள் உணரச்செய்வதே நம்முன் இருக்கும் பணி. ●

# மாண்புமிகு மன்னார்குடி மாஃபியா!

**சசிகலாவை மாண்புமிகு முதல்வர் என்று அழைக்கும் தறுவாயில், அவரைத் தமிழ் கூறும் நல்லுலகுக்கு வழங்கிய மன்னார்குடி மாஃபியாவையும் மாண்புமிகு மன்னார்குடி மாஃபியா என்று அழைப்பதே பொருத்தமானதாக இருக்கும்.**

''மன்னார்குடி மாஃபியா'', ''சட்ட விரோதமான அதிகார மையம்'', ''கொள்ளைக்கூட்டம்'' என்றெல்லாம் தமிழகத்தின் பல கட்சிகளாலும் ஊடகங்களாலும் காறி உமிழப்பட்ட சசிகலா குடும்பம், அ.தி.மு.க.வின் தலைமைப் பதவியை அதிகார பூர்வமாக கைப்பற்றிவிட்டது. முதலமைச்சரும் இன்னபிற அதிமுக தலைவர்களும் பொதுக்குழுவின் வேண்டுகோள் கடிதத்தை சின்னம்மாவிடம் வைத்து கெஞ்சியதையும், வேறு வழியில்லாமல் தலைமைப் பதவியை சுமக்க சின்னம்மா ஒப்புக்கொண்டதையும் தொலைக் காட்சிகள் வாயிலாக சின்னம்மாவே ஒளிபரப்பக் கண்டோம். இதை விஞ்சுகின்ற ஒரு ஆபாசக் காட்சியை கூகுளில் உலகம் முழுக்க வலைவீசித் தேடினாலும் யாராலும் கண்டு பிடிக்கவியலாது.

தனக்குப் பிறகு கட்சியைக் காப்பாற்றுமாறு புரட்சித்தலைவர் தன்னிடம் ரகசியமாக சத்தியம் செய்து வாங்கிக் கொண்டதாகவும், அதன் காரணமாகத்தான் கட்சியின் தலைமைப் பொறுப்பை தான் ஏற்கவேண்டியிருப்பதாகவும் தனது வாரிசுரிமைக்கு ஆதாரம் காட்டி வாதாட வேண்டிய துர்ப்பாக்கியமான நிலைமை அம்மாவுக்கு இருந்தது.

**சசிகலாவை அ.தி.மு.க.வின் பொதுச் செயலராக நியமித்த பொதுக்குழுவின் தீர்மானத்தை சசிகலாவிடம் கொண்டுசேர்க்கும் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம்: தொடரும் அடிமைத்தனம்.**



அத்தகைய நிலைமை சின்னம்மாவுக்கு இல்லை. அதிமுக என்ற கொள்ளைக்கூட்டத்தின் அதிகார பூர்வமற்ற தலைவி அவர்தான் என்பது அ.தி.மு.க.வில் பலரும் அனுபவ பூர்வமாக அறிந்திருக்கும் உண்மை. அந்த உண்மையைத் தமிழக மக்களுக்குப் புரிய வைக்கும் பொருட்டுத்தான், மேற்படி ஆபாசக் காட்சிகளை ஒளிபரப்ப வேண்டிய துர்ப்பாக்கிய நிலை சின்னம்மாவுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

*''தமிழக மக்களின் உரிமைகள் காப்பாற்றப்படவும், தமிழ் மொழியின் தொன்மையும், சிறப்பும் போற்றப்படவும் எல்லோருக்கும் பயன்தரும் ஒரு ஜனநாயக ஆட்சி முறை உருவாகவும் பெரியாரை மையமாக வைத்து, பேரறிஞர் அண்ணா தோற்றுவித்த திராவிட இயக்க அரசியல் பயணம் அவர் அமைத்துத் தந்த பாதையில், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரின் அடிச்சுவட்டில் இன்னும் பல தலைமுறைகளுக்கு பயணிப்பதற்கும்''* சின்னம்மாவே முதல்வர் பதவியிலும் உடனே அமர வேண்டுமென்று கோரினார் தம்பிதுரை.

இதைவிடக் கேவலமான சொற்களால் தமிழ் மக்களை யாரும் அவமதிக்க முடியாது. இருந்த போதிலும், ''துணை சபாநாயகர் பதவியை ராஜினாமா செய்து விட்டு மேற்படி சொற்களை தம்பிதுரை உதிர்த்திருப்பாராயின் அரசமைப்புச் சட்டம் அவமானத்திலிருந்து தப்பியிருக்குமே'' என்று அரசமைப்பு சட்டத்தின் மாண்பு பற்றிக் கவலை வெளியிட்டார் ஸ்டாலின். ''வீழ்வது தமிழனாக இருந்தாலும் வாழ்வது அரசியல் சட்டமாக இருக்கட்டும்'' என்ற உணர்வு போலும்!

○ ● ○

''அம்மாவின் மறைவு ஏற்படுத்திய வெற்றிடத்தை நிரப்ப ஒரு வார்தா புயல்தான் வரப்போகிறது'' என்று வட

இந்திய அரசியல் ஞானிகள் கூறிக்கொண்டிருக்க, சங்க பரிவாரத்தினரையே விஞ்சும் ராணுவக் கட்டுப்பாட்டை அ.தி.மு.க.வினர் வெளிப்படுத்தினர். மிச்சமிருக்கும் நான்கரை ஆண்டுக்காலமும் எடைக்கு எடை பொன் போன்றது என்பதையும், இது தான் அ.தி.மு.க.விற்கு வந்த னோபசார கடைசி ஆட்டம் என்பதையும் அவர்கள் அறிவார்கள். அந்த ஞானம் தோற்றுவித்ததுதான் இந்த அதிசயிக் கத்தக்க ஒற்றுமை!



தமிழகத்தின் இழிந்த நிலை: எம்.ஜி.ஆர்., ஜெயா வழியில் மக்கள் தலைவியாகும் சசிகலா.

இந்த ஒற்றுமை ஒருபுறமிருக்க, சொத்துக்குவிப்பு வழக்கின் தீர்ப்பு விரைவிலேயே வெளிவரக்கூடும் என்பதால், முதல்வர் பதவியைக் கைப்பற்றுவதற்கான போட்டியும் அமைச்சர்களிடையே தீவிரமடைந்திருக்கிறது. மன்னார்குடி மாஃபியாவுக்கு எதிராகப் போட்டியிட்டு வெல்ல முடியாது என்பதால், சின்னம்மாவின் நம்பிக்கையைப் பெறுவதற்கான போட்டி நடக்கிறது.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வருவதற்கு முன்னர் பன்னீரை அகற்றி சசிகலாவை முதல்வராக அமர வைத்தால்தானே, உச்ச நீதிமன்றம் சசிகலாவை அகற்றும் போது அந்த இடத்தில் அமர முடியும்! அதனால்தான் சின்னம்மாவை முதல்வராக்குவதற்கு எல்லை மீறி உணர்ச்சிவசப் படுகிறார் தம்பிதுரை.

''ஜெயலலிதா சிறை சென்றால் முதல்வர் நாற்காலியில் யார் அமர்வது'' என்று ரகசியமாகச் சதி செய்த காரணத்தினால் சின்னம்மாவை போயஸ் தோட்டத்திலிருந்து வெளியேற்றுவதாக அறிவித்தார் அம்மா. இது 2011-இல் நடந்த கதை. இன்று அதே போயஸ் தோட்டத்தில் அதே சின்னம்மாவுக்கு எதிராக பகிரங்கமாகச் சதி நடக்கிறது.

''நீங்கள்தான் பொதுச்செயலராகி எங்களைக் காப்பாற்ற வேண்டும்'' என்று கைகூப்பிக் கெஞ்சுகிறார்கள் சதிகாரர்கள். ''கூப்பிய கரங்களுக்குள் குத்துவாள் இருக்கிறது'' என்று தெரிந்த போதிலும் புன்னகை மாறாத முகத்துடன் தரிசனம் தருகிறார் சின்னம்மா. அம்மாவின் படத்துக்கு முன்னால் நின்று கண்ணீரும் விடுகிறார். ''இந்த நாடகத்தைக் காண்பதற்கு அம்மா இல்லையே'' என்ற நமது ஏக்கத்தை நிவர்த்தி செய்வதற்காகவாவது, ''அம்மாவின் ஆன்மா பார்த்துக் கொண்டிருக்கிறது'' என்ற சசிகலாவின் கூற்று உண்மையாகி விடக் கூடாதா என்று எண்ணத் தோன்றுகிறது.

இன்னொருபுறம், கொலைப்பழியும் சசிகலாவைத் துரத்துகிறது. அரசு அலுவல்கள் அனைத்தையும் மர்மமான அந்தப்புர நடவடிக்கையாக மாற்றி, அதற்கே பழகிவிட்ட ஜெ-சசி கும்பல், அப்போலோவிலும் அதே அணுகுமுறையைக் கடைப் பிடித்தது. அப்போலோ மருத்துவமனையையும் போயஸ் தோட்டமாகவே கருதிக் கொண்டு யாரையும் உள்ளே விட மறுத்த சசிகலாவுக்கு, ''சொந்த செலவில் சூனியம் வைத்துக் கொள்கிறோம்'' என்று அப்போது உறைத்திருக்க நியாயமில்லை.

அன்று எம்ஜியார் சாவுக்கு ஜானகி மீதும், ராஜீவ் சாவுக்கு கருணாநிதி மீதும் பொய்ப்பழி சுமத்தி முதல்வர் நாற்காலியைப் பிடித்தார் ஜெயலலிதா. அவரது சாவுக்கான பழி, உடன்பிறவாத் தோழி மீது விழுந்திருப்பது ஒரு விதத்தில் கவித்துவ நீதி. சீரியல்களின் கலர் கலரான சதிகளால் தமிழ்நாட்டுத் தாய்க்குலத்தின் மூளை கூர்மைப்படுத்தப் பட்டிருப்பதால், சசிகலாவின் ஒவ்வொரு அசைவு பற்றியும் தாய்க்குலத்தின் வாயிலிருந்து ஒரு ''எபிசோட்'' அநாயாசமாக வந்து விழுந்து, அப்போலோ மர்மத்தை மெகா சீரியலாக மாற்றுகிறது.

இதுதான் சசிகலாவின் நிலை. இன்று சின்னம்மாவின் காலில் விழும் கூட்டம் நாளை எந்தக் காலில் வேண்டுமானாலும் விழும். உட்கட்சி பதவிப் போட்டிக்காக ஒருவரையொருவர் வெட்டிக் கொலை செய்வதை சர்வ சாதாரணமாகச் செய்கின்ற அதிமுக கும்பல், காலில் விழும்போதே முதுகில் அரிவாளும் வைத்திருக்கும் என்பது சின்னம்மாவுக்கோ, மன்னார்குடி மாஃபியாவுக்கோ தெரியாததல்ல.

❍ ● ❍

இருப்பினும், அதிமுக என்பது ஒரு ''கட்சி'' என்பதாகவும், அதன் தலைவியாக சசிகலா தேர்ந்தெடுக்கப் படுவது ''அந்தக் கட்சியின் உள் விவகாரம்'' என்பதாகவும் மிகவும் நாகரிகமாகப் பேசுகின்றனர் திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சியினர். ''சசிகலா தேர்தலில் நின்று மக்கள் அங்கீகாரத்தைப் பெறவேண்டும்'' என்று ஆலோசனை வேறு கூறுகின்றனர்.

''மக்கள் அங்கீகாரத்தைப் பெறுவது எப்படி'' என்று சசிகலாவுக்குத் தெரியாதா? மன்னார்குடி மாஃபியா மட்டுமல்ல, சேகர் ரெட்டி, அன்புநாதன், ராம மோகன ராவ் போன்றோரும் கூட தேர்தலில் நின்று மக்களின் அங்கீகாரத்தை ''வாங்க''வேண்டுமென்றால், ''வாங்கி'' விடுவார்களே. சென்ற சட்டமன்றத் தேர்தலில் ஜெயலலிதாவுக்கு பெரும்பான்மை தொகுதிகளை ''வாங்கிக்

கொடுத்தவர்கள்'' அல்லவா இவர்கள்! தேர்தல் முடிவுக்குப் பின்னர் இதையெல்லாம் சொல்லிப் புலம்பிய எதிர்க்கட்சிகள் இப்போது நடந்ததையெல்லாம் மறந்து விட்டதை எண்ணும்போது புல்லரிக்கிறது.

சும்மா சொல்லக்கூடாது. ஜெயலலிதா அப்போலோவுக்கு மாறியதிலிருந்தே தமிழகத்தில் அரசியல் நாகரிகம் தலைவிரித்தாடுகிறது. ''சசிகலாவைப் பற்றி அவருடைய எதிர்காலச் செயல்பாட்டை வைத்துத்தான் கருத்து கூற முடியும்'' என்கிறார்கள் மாண்புமிகு எதிர்க்கட்சிகள். ''கடந்த காலச் செயல்பாட்டை'க் காட்டிக் கதறுகிறார் பையனூர் பங்களாவைப் பறிகொடுத்த கங்கை அமரன். சொத்துக் குவிப்பு வழக்கு முதல் சேகர் ரெட்டியின் மணற்கொள்ளை வரை அனைத்தும் கடந்த காலச் செயல்பாட்டில் விளைந்தவையே என்பது எதிர்க்கட்சிகளுக்குத் தெரியாதா என்ன?

ஜெ ஆட்சியின் எந்த செயல்பாடுகளுக்காக ''அ.தி.மு.க. ஆட்சியை ஒழிக்க வேண்டும்'' என்று எதிர்க்கட்சிகள் பேசினார்களோ, அந்தச் செயல்பாடுகளுக்கும் சசிகலாவுக்கும் சம்மந்தமில்லையா? முதல்வரின் தோழியாக இருந்தபோதே அவ்வளவு சுறுசுறுப்பாகச் செயல்பட்டவர், முதல்வராகிவிட்டால் எவ்வளவு சுறுசுறுப்பாகச் செயல்படுவார் என்று நினைக்கும்போதே நமக்கு நெஞ்சு நடுங்குகிறதே!

''இருப்பினும் பார்ப்பன மதவெறிக் கும்பல் தமிழகத்தில் வேரூன்ற விடாமல் சசிகலா தடுத்து விடுவார்'' என்பது திராவிடர் கழகத்தின் பகுத்தறிவு சார்ந்த நம்பிக்கை. தமிழ்ச் சமூகத்தையே குடிகாரர்களாக்கி, தமிழ் மக்களை மத மூட நம்பிக்கைகளிலும் அடிமைத்தனத்திலும் ஆழ்த்தி, அதானிக்கும் அம்பானிக்கும் தமிழகத்தைப் பிரித்து விற்ற கும்பல், பாரதிய ஜனதாவிடமிருந்து தமிழகத்தைக் காப்பாற்றும் என்று நம்புகிறது திராவிடர் கழகம். மலையாள மாந்திரீகம் மற்றும பில்லிசூனியம் முதலானவற்றில் சசிகலா கொண்டிருக்கும் நம்பிக்கையைக் காட்டிலும் பயங்கரமானதாக இருக்கிறது திராவிடர் கழகத்தின் இந்த நம்பிக்கை.

திமுக வின் கதை வேறு. கடந்த காலத்தில் கருணாநிதி அனுபவித்த ராஜீவ் கொலைப்பழி முதல் ரூ. 1,70,000,00,00,000 அலைக்கற்றை ஊழல் என்ற பத்து தலை ராவணன் கதை வரை, பார்ப்பனக் கும்பலால் பலவிதமாகப் பாதிக்கப்பட்டவர் கருணாநிதி. அதற்கு சென்னை உயர்நீதிமன்றம் நிவாரணம் வழங்கியிருக்கிறது.

''ஜெயலலிதா மரணத்தில் எனக்கும் சந்தேகம் இருக்கிறது'' என்று கருத்து தெரிவித்த கற்றறிந்த நீதிபதியின் உணர்ச்சிவயப்பட்ட நாக்கு, ''நாம் கருணாநிதியின் மகனுக்கு ஒரு பம்பர் பரிசை வழங்குகிறோம்'' என்பதை உணராமலேயே சுழன்றிருக்க வேண்டும்! ''இயற்கை நீதி'' எனப்படுவது இதுதான் போலும்!

''நான் கூறவில்லை, உயர் நீதிமன்றமே கூறியிருக்கிறது'' என்ற ஒற்றை வரியின் மூலம், அதிமுகவின் இழிபுகழ் பெற்ற ஓட்டு வங்கியான தாய்க்குலத்தின் வாக்குகளைத் தன் பக்கம் திருப்பிக் கொள்வதற்கான வாய்ப்பை தளபதிக்கு வழங்கி விட்டார் நீதிபதி. அது மட்டுமல்ல, இறந்தவர்களை விமரிசிக்கின்ற, ''அநாகரிக அரசியலை'' தவிர்த்து தப்பிச் செல்வதற்கான சந்தும் ஸ்டாலினுக்கு கிடைத்திருக்கிறது.

''முன்னாள் மூன்றாவது அணி சாணக்கியர்'' வை.கோபால்சாமியோ, நாஞ்சில் சம்பத் எழுந்திருப்பதற்கு முன்னாலேயே அவருடைய இடத்தில் துண்டைப் போட்டுவிட்டார். மூன்றாவது அணியில் மிச்சமிருக்கும் மூன்று பேரில் முக்கியமானவரான திருமாவளவன், ''வருவாய்த்துறை ரெய்டிலிருந்தும், மதவெறி அபாயத்திலிருந்தும் இந்திய அரசியல் சட்டத்தைப் பாதுகாக்கும் பொருட்டு'' சசிகலாவைச் சந்தித்திருக்கிறார்.

இடதுசாரிகளின் மூத்த தலைவரான தா.பா, முன்னம் ஒரு நாளில் சசிகலாவை விமரிசித்துப் பேசியிருப்பதை நிருபர்கள் எடுத்துக் காட்டியபோது, ''அது நானாக இருக்காது, என் அசரீரியாக இருக்கும்'' என்று பதிலளித்தாராம். ''மன்னார்குடி மாஃபியாவை ரெய்டு அபாயம் அச்சுறுத்திய சூழலில், கோவயில் வைத்து சுப்பிரமணியசாமியை நீங்கள் ஏன் சந்தித்தீர்கள்'' என்று பின்னர் ஒரு நாளில் யாரேனும் ஒரு நிருபர் அவரைக் கேட்க நேர்ந்தால், ''அது நான் அல்ல, மங்கி சங்கி'' என்றும் அவர் பதிலளிக்கக் கூடும். ''டீக்கடைக்காரர் பிரதமராகும்போது, வீடியோக் கடைக்காரி முதல்வராகக் கூடாதா?'' என்று வர்க்கப்பார்வையில் வக்கணையானதொரு எதிர்க் கேள்வியையும் எழுப்பக் கூடும்.

உண்மைதான். ''முதல்வர் ஆவதற்கு சசிகலாவுக்கு என்ன தகுதி இருக்கிறது'' என்ற கேள்வியை நாம் எழுப்புவோமானால், அத்தகுதியை ஜெயலலிதா பெற்றிருந்ததாக ஒப்புக் கொண்டவர்களாகி விடுவோம். ''தகுதி'' பற்றிய கேள்வியை ஜெயலலிதாவோடு நிறுத்திக் கொண்டாலோ, எம்.ஜி.ஆரின் தகுதியை நாம் அங்கீகரித்ததாக ஆகிவிடும்.

ஆகையினால், ஆராய்ச்சியை நிறுத்திக் கொள்வோம். எப்படிப் பார்த்தாலும் சசிகலா என்பவர் ஒன்றரை கோடி உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பேரியக்கத்தின் தலைவி. நாளை மறுநாள் சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டனை பெற்று அவர் சிறை செல்ல வேண்டியிருக்கலாம். ஆனால் நாளை தமிழகத்தின் முதல்வர் நாற்காலியில் அவர் அமரும்போது, ''மாண்புமிகு முதல்வர்'' என்று அவரை நாம் அழைக்காமலிருக்க முடியாது.

சசிகலாவை அவ்வாறு அழைக்கும் தறுவாயில், அவரைத் தமிழ் கூறும் நல்லுலகுக்கு வழங்கிய மன்னார்குடி மாஃபியாவையும் ''மாண்புமிகு மன்னார்குடி மாஃபியா'' என்று அழைப்பதே பொருத்தமானதாக இருக்கும். புதியதொரு அரசியல் நாகரிகம் தமிழகத்தில் தழைத்தோங்குவதற்கான துவக்கமாகவும் அது அமையும்.

■ தொரட்டி

# அ.தி.மு.க.வை அழிக்காவிடில் தமிழகமே அழியும்!

**தொழில்முறை கிரிமினல் மாஃபியாக்களின் கூடாரம்தான் அ.தி.மு.க. கொள்ளைக்கூட்டத்தின் உள் முரண்பாடுகள் காரணமாக அ.தி.மு.க. அழியும் வரை காத்திருக்கக் கூடாது. அ.தி.மு.க. என்ற விஷப்பூரானை நம் சொந்தக் கரங்களால் நசுக்கி அழிப்பதொன்றுதான், தமிழகம் பிழைப்பதற்கு வழி.**

சொத்துக்குவிப்பு வழக்கின் முதல் குற்றவாளி மா.மி இ.தெ பு.த ஜெயலலிதா, 21 குண்டுகள் முழங்க அடக்கம் செய்யப்பட்டு விட்டார். ஏ-1 சந்தனப்பேழையில் உறங்கும் நிலையில் ஏ-2 வான சசிகலா, அதிமுகவின் பொதுச்செயலர் ஆகி விட்டார். ஏ-3 யான இளவரசிக்கும் "சின்ன சின்னம்மா" என்று சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுவிட்டன. ஏ-4 ஆன அம்மாவின் முன்னாள் வளர்ப்பு மகன் சுதாகரன் ஏற்கனவே சின்ன எம்ஜியார் என்பதால் அவரைப் பற்றித் தனியே சொல்ல வேண்டியதில்லை

சரியாக இருபது ஆண்டுகளுக்கு முன்னால், 1996 ஜுலையில், ம.க.இ.க மற்றும் அதன் தோழமை அமைப்புகளான வி.வி.மு, பு.மா.இ.மு, பு.ஜ.தொ.மு ஆகிய அமைப்புகள் நடத்திய "விநோதகன் மருத்துவமனையைக் கைப்பற்றும் போராட்டம்" இப்போது நினைவுக்கு வருகிறது. 1996 தேர்தலில் வெற்றி பெற்ற தி.மு.க, ஊழல் வழக்கு பதிவு செய்து ஜெயலலிதாவின் சொத்துகளைப் பறிமுதல் செய்யப் போவதாகக் கூறியது. ஜெயா-சசி கும்பலை தண்டிப்பதோ அவர்களுடைய திருட்டுச் சொத்துக்களை பறிமுதல் செய்வதோ, சட்டபூர்வமான வழியில் சாத்தியமில்லை என்ற அரசியல் உண்மையை எடுத்துக் காட்டியது அந்தப் போராட்டம்.

அந்த காலகட்டத்தில் நாடு முழுவதும் ஓட்டுக்கட்சிகளில் செல்வாக்கு செலுத்த தொடங்கியிருந்த புதிய வகை கிரிமினல் கும்பல்களை, திடீர் பணக்கார அரசியல் ரவுடிகள் - என்று அடையாளப்படுத்தியிருந்தோம். கள்ளச் சாராயப் பேர்வழிகள், ஒயின்ஷாப் ஓனர்கள், கந்து வட்டிக்காரர்கள், லாட்டரி சீட்டு வியாபாரிகள், கட்டைப்பஞ்சாயத்து ரவுடிகள் உள்ளிட்ட ஒரு கூட்டம் திடுதிபுவென்று அரசியலில் நுழையத் தொடங்கியிருந்த காலம் அது. ஒவ்வொரு ஊரிலும் ஓட்டுக்கட்சிகளில் இருந்த இத்தகைய நபர்களை பெயர் சொல்லி அடையாளப்படுத்தி, அவர்களுடைய மக்கள் விரோத நடவடிக்கைகளை அம்பலப்படுத்தி, தமிழகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்ட இயக்கத்தின் தொடர்ச்சியாக அமைந்ததே அந்தப் போராட்டம்.

தமிழகத்தைக் கொள்ளையடித்த மாஃபியா வலைப்பின்னல்: (இடமிருந்து) முன்னாள் தலைமைச் செயலர் ராம மோகன ராவ், சேகர் ரெட்டி, ராமச்சந்திரன், ரத்தினம்.



இன்று "சிங்கப்பூருக்கு அருகில் தீவு வாங்கியிருக்கிறார், இந்தோனேசியாவில சுரங்கம் வாங்கியிருக்கிறார், துபாயில் வணிக வளாகம் வாங்கியிருக்கிறார்" என்றெல்லாம் கண்டுபிடித்திருக்கிறார்களே, அந்த நத்தம் விசுவநாதன் முதல் புதுக்கோட்டை ராமச்சந்திரன் வரையிலானோர் அன்றைய ஒயின் ஷாப் ஓனர்கள் அல்லது கள்ளச் சாராய வியாபாரிகளே. இப்படிப்பட்ட கொள்ளைக்கூட்டத்தையே ஒரு கட்சி என்ற பெயரில் நடத்திக் காட்டிய பெருமை ஜெயலலிதாவையே சாரும்.

இதன் விளைவாகத்தான், 1991 முதல் 1996 வரையிலான முதல் தவணை ஆட்சியில் ஜெயா - சசி கும்பலும், அமைச்சர்களும் ஆடிய ஆட்டத்தைக் கண்டு ஆத்திரமுற்ற மக்கள், ஜெயலலிதாவை பர்கூர் தொகுதியில் தோற்கடித்தனர். தேர்தல் பிரச்சாரத்துக்கு சென்ற அவரது அமைச்சர்களை ஊருக்குள்ளேயே நுழைய விடாமல் அடித்து விரட்டினர். வேறு வழியின்றி, சசிகலாவை போயஸ் தோட்டத்திலிருந்து வெளியேற்றி, வளர்ப்பு மகனை தகுதி நீக்கம் செய்து தன்னை உத்தமியாக காட்டிக் கொள்ள



அமைச்சர்கள் என்ற பெயரில் வலம் வந்த கொள்ளையர்கள்:
(இடமிருந்து) ஓ.பன்னீர்செல்வம், நத்தம் விசுவநாதன், எடப்பாடி பழனிச்சாமி, வைத்திநாதன்.

வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார் ஜெயலலிதா. இது இருபது ஆண்டுகளுக்கு முன் நடந்த கதை.

இன்று, சேகர் ரெட்டியிடம் தங்க கட்டிகளும் 2000 ரூபாய் நோட்டுக் கட்டுகளும் கைப்பற்றப்படுகின்றன. தலைமைச் செயலாளர் ராம் மோகன் ராவ் வீட்டிலும் தலைமைச் செயலகத்திலும் ரெய்டு நடக்கிறது. முதலமைச்சரான பன்னீர், சேகர் ரெட்டியுடன் திருப்பதியில் மொட்டை போட்ட புகைப்படம் வெளியாகிறது. இவை எதைப்பற்றியும் கவலையின்றி ஒரு மொட்டைத் தமிழர் கூட்டம் அம்மா சமாதியில் அழுதுவிட்டு உரிய தொகையைப் பெற்றுக் கொண்டு, வண்டியேறி ராயப்பேட்டை அதிமுக தலைமை அலுவலகத்தில் வந்திறங்கி, சின்னம்மா வாழ்க என்று ஜெயா டிவி காமெராவின் முன் டான்ஸ் ஆடிவிட்டு, டாஸ்மாக் பாரில் இளைப்பாறுகிறது. இருபது ஆண்டுகளில் தமிழ்ச் சமூகத்தையும் அரசியலையும் ஜெயலலிதா கொண்டு வந்து நிறுத்தியிருக்கும் இடம் இதுதான்.

❍ ● ❍

**நா**டாளுமன்ற அரசியல் சீரழிவின் வரைவிலக்கணமாக இருபது ஆண்டுகளுக்கு முன் இனங்காணப்பட்ட திடீர் பணக்கார அரசியல் ரவுடிகள் இன்று நாடாளுமன்ற ஜனநாயகத்தின் காவலர்கள் ஆகிவிட்டார்கள். அதாவது இந்த அரசமைப்பின் ''கற்பை'' அழிப்பவர்களாக அன்று அடையாளம் காணப்பட்டவர்கள்தான் இன்று அதன் சட்டபூர்வமான கணவன்மார்கள்.

''ராம மோகன ராவ் ஊழல் தடுப்புத்துறையின் கண்காணிப்பு ஆணையராக என்ன தகுதியின் அடிப்படையில் நியமிக்கப்பட்டார்?'' என்று பத்திரிகைகள் இன்று அதிசயித்துக் கொள்கின்றன. ''81 கோடி ரூபாய் அளவுக்கு வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்தவர்'' என்று, 2010 ஆம் ஆண்டிலேயே, அன்றைய ஊழல் தடுப்பு பிரிவின் இயக்குநரான உமாசங்கரால் குற்றம் சாட்டப்பட்டவர் ராம மோகன ராவ். ஒரு தேர்ந்த ஊழல் பேர்வழியை ஊழல் தடுப்பு கண்காணிப்பு ஆணையராக நியமித்ததன் மூலம் ''நேர்மை'' என்ற விழுமியத்தையே எள்ளி நகையாடியவர் ஜெயலலிதா.

இது ஜெயலலிதா என்ற வக்கிரமான ஆளுமையைப் புரிந்து கொள்வதற்கான எடுத்துக்காட்டு மட்டுமல்ல; இந்த அரசின் கட்டுமான உறுப்புகளே எப்படி வக்கரித்துப்போய் தமது எதிர்நிலை சக்திகளாக மாறி நிற்கின்றன என்ற உண்மையைப் புரிந்து கொள்வதற்கான எளிய சான்றும் கூட. சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்கானவை என்று கூறப்படும் எல்லா விதமான அதிகார அமைப்புகளிலும் குற்றவாளிகள்தான் கோலோச்சுகிறார்கள் என்பதை நிரூபிக்கும் சான்று இது.

ராம மோகன் ராவின் கீழ் துறைச்செயலாளர்களாகவும், மாவட்ட ஆட்சியர்களாகவும் பணியாற்றிய கொள்ளைக்கூட்டத்தின் தளபதிகளும், கஞ்சா விற்பனை, கள்ளச்சாராயம், ஹவாலா, சிட்பண்டு மோசடி உள்ளிட்ட எல்லா வகை கிரிமினல் நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து நடத்திய போலீசு துறையும், குமாரசாமி, தத்து, சதாசிவம் போன்றோரடங்கிய நீதித்துறையும், ஆற்று மணற்கொள்ளையை ஒருங்கிணைத்த பொதுப்பணித்துறையும், துணை வேந்தர் பதவிகளை ஏலம் விட்ட கல்வித்துறையும் அடங்கியதுதான் இந்த அரசமைப்பு. இதனை நிரூபிக்கின்ற உண்மைகள் அன்றாடம் வெளிவந்து கொண்டுதான் இருக்கின்றன. இருந்த போதிலும் இந்த அரசமைப்பை சீர்திருத்திவிட முடியும் என்ற சட்டவாத மாயையில் படுத்து சுகம் காண்பவர்களை எந்த உண்மையாலும் எழுப்ப முடிவதில்லை.

''சொத்துக் குவிப்பு வழக்கின் முதல் குற்றவாளியான ஜெயலலிதா இறந்து விட்டதால், மற்ற மூன்று

பாப்பாத்தி ஜெயாவைக்
காப்பாத்தி விடுவதற்குத்தான்
வாஜ்பாயி முதல் மோடி வரை
அனைவரும் முயன்றார்கள்.
வாஜ்பாயி காலத்தில்
தம்பிதுரையை மத்திய
சட்ட அமைச்சராக நியமித்தது முதல்
மோடி ஆட்சியில்
வருமானவரித்துறை வழக்கிலிருந்து
ஜெயாவை விடுவித்தது வரை
இதற்குச் சான்றுகள் பல.


குற்றவாளிகளை தண்டிக்க முடியுமா?'' என்று கேள்வியை ஊடகங்கள் கிளப்புகின்றன. ''முதல் குற்றவாளி இறந்து விட்டாலும், கூட்டுக் குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்ப முடியாது'' என்று உச்ச நீதிமன்றம் அளித்துள்ள ஒரு தீர்ப்பை ஆதாரமாக காட்டுகிறார்கள் சட்ட வல்லுநர்கள். சசிகலா தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்பதற்கு சட்ட வல்லுநர்கள் எதை ஆதாரமாக காட்டுகிறார்களோ, அதே ஆதாரத்தின் அடிப்படையில் சசிகலாவை அடுத்த முதல்வராக்க வேண்டும் என்கிறார்கள் அதிமுக அடிமைகள்.

''சின்னம்மா அப்ரூவர் ஆகியிருந்தால், அம்மாவும் இருந்திருக்க மாட்டார், அ.தி.மு.க வும் இருந்திருக்காது'' என்று வெளிப்படையாக பொதுக்குழுவில் பேசியிருக்கிறார் வளர்மதி. ''விசுவாசமான கூட்டுக்குற்றவாளி'' என்பதுதான், இன்று அம்மாவுக்கு அடுத்தபடி முதல்வராவதற்கு சசிகலா பெற்றிருக்கும் முதன்மையான தகுதி.

ஏ-1 இறந்து விட்டதால், ஏ-2 தான் முதல்வர் என்கிறது அ.தி.மு.க. உச்ச நீதிமன்றம் தண்டனை வழங்கப் போகிறதோ இல்லையோ, அதிமுக பொதுக்குழு சின்னம்மாவுக்கு பதவியை வழங்கிவிட்டது. குற்றம் பதவிக்கான தகுதியாகிவிட்டது. போதாக்குறைக்கு பொன்னையன் சசிகலாவின் வாரிசுரிமையை வேறு கோணத்திலிருந்து விளக்குகிறார். தனது ஸ்ரீராம் சிட் பண்டு பணத்திற்கு வாரிசாக சசியைத்தான் அம்மா குறிப்பிட்டிருக்கிறார் என்பதை எடுத்துக்காட்டி, தனக்குப் பின்னர் முதல்வர் பதவிக்கு அம்மாவால் அடையாளம் காட்டப்பட்டவர் சசிகலாதான் என்பதை ஆணித்தரமாக நிறுவுகிறார். முதல்வர் பதவியை சிட் பண்டு பணத்தோடு ஒப்பிட்டுக் காட்டியிருக்கிறாரே, இதைவிடக் கூர்மையாக இந்த அரசியலை யாரேனும் விளக்க இயலுமா?

''பெரியண்ணி ஜானகிக்கு ராமாவரம் தோட்டம், சின்னண்ணிக்கு தமிழகமே போயசு தோட்டம்'' என்று

தமிழக மக்களிடமிருந்து
திருடப்பட்ட சொத்து,
திருடியின் மருமகளுக்குச் சேருமா,
திருடியின் தோழிக்குச் சேருமா
என்று டீக்கடை பெஞ்சுகளில்
விவாதம் நடக்கிறது.
வடிவேலுவின் தராசுத் திருட்டு
நகைச்சுவைக் காட்சிக்குச்
சிரிக்க முடிந்தது.
அதைவிடக் கேடுகெட்ட நிலைக்குத்
தாழ்ந்து விட்டது தமிழ்ச் சமூகம்.

**ஜெயா-சசி கும்பலும், அவர்களின் அமைச்சர்களும் அதிகாரிகளும் அடித்துச் சுருட்டிய கொள்ளைப் பணத்தை ஹவாலா வழியில் வெளிநாடுகளுக்குக் கடத்திச் சென்ற தரகுக் கும்பல்: கரூர் அன்புநாதனும் அவரது கூட்டாளியான கொல்கத்தாவைச் சேர்ந்த பரஸ்மால் லோதா.**

1992-இல் ஒலித்தது ம.க.இ.க வின் இருண்டகாலம் ஒலிப்பேழைப் பாடல். ''என்னுடைய அத்தை வளர்த்த கட்சி'' என்று உரிமை கொண்டாடுகிறார் ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா. அத்தை தி.மு.க என்றாலும் அ.தி.மு.க தானே! ''கொடநாடு எஸ்டேட், ஐதராபாத் திராட்சைத் தோட்டம் உள்ளிட்ட ஜெயலலிதாவின் சொத்துகளுக்கு நியாயமான வாரிசு சசியா, தீபாவா?'' என்ற பட்டிமன்ற ஆராய்ச்சியைக் கிளப்புகின்றன ஊடகங்கள். ''தங்களிடமிருந்து திருடப்பட்ட சொத்து, திருடியின் மருமகளுக்கு சேருவது நியாயமா, திருடியின் தோழிக்கு சேருவது நியாயமா?'' என்று டீக்கடை பெஞ்சுகளில் விவாதம் நடத்துகிறார்கள் தமிழர்கள். வடிவேலுவின் தராசுத் திருட்டு நகைச்சுவைக் காட்சிக்கு சிரிக்க முடிந்தது. அதைவிடக் கேடுகெட்ட நிலைக்குத் தாழ்ந்து விட்டது தமிழ்ச் சமூகம். சிரிக்கவா முடியும்?

○ ● ○

அம்மாவின் மறைவால் ஏற்பட்ட அரசியல் வெற்றிடம் நிரப்பப்பட்டு விட்டது. சசிகலா பொதுச்செயலாளராக பதவி ஏற்றுவிட்டார். தூய வெள்ளை ஆடை தரித்த அட்டைகளின் சட்டைப்பையில் அம்மாவுடன் சின்னம்மாவின் படம். வெள்ளை என்பதும் திருடர்களின் உடையாகிவிட்டது. எவ்வளவு கருப்போ அவ்வளவு வெள்ளை.

தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நால்வர் குழுவை ஜெ அமைத்திருந்தாலும், பேச்சுவார்த்தையை சசிகலாதான் நடத்துவாராம். ஒரு மூத்த கம்யூனிஸ்டு கட்சி தலைவர் கூறியதாக ஆங்கில இந்து நாளேடு எழுதியிருக்கிறது. அந்த மூத்த தலைவர் தா.பா வா, டி.கே.ரங்கராசனா தெரியவில்லை. ஏன் முக்காடு போட்டுக் கொள்ளவேண்டும்? அடுத்த கூட்டணிக்கு சின்னம்மாவுடன்தானே பேச்சுவார்த்தை! இனி வெட்கப்பட என்ன இருக்கிறது?

அ.தி.மு.க. என்ற கொள்ளைக் கூட்டத்தை நடத்திச் செல்வதற்கு என்ன தெரியவேண்டுமோ அது சசிகலாவுக்குத் தெரியும். நெடுஞ்சாலை, பொதுப்பணித் துறை, கல்வி, போக்குவரத்து, பத்திரப்பதிவு, மது

விலக்கு, வணிகவரி, உள்ளாட்சி, வேளாண்மை, சுகாதாரம், தொழில் என்று ஒவ்வொரு துறை அமைச்சரின் அன்றாட வசூல் எவ்வளவு, அதில் தோட்டத்துக்கு சேர வேண்டிய தொகை எவ்வளவு என்பது சசிகலாவுக்குத் தெரியும். அதை வேவு பார்த்து சொல்வதற்கு உளவுத்துறை அதிகாரிகளைப் பயன்படுத்த தெரியும். ஏமாற்றுகின்ற அமைச்சர்கள் மீது ரெய்டு நடத்துவதற்கும், மிரட்டுவதற்கும், பதவியைப் பறிப்பதற்கும் தெரியும்.



சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டிக்கப்பட்டுப் பிணையில் வெளியே வந்திருந்த ஜெயாவை, அவரது வீட்டிற்குச் சென்று சந்தித்த மோடியின் நிதியமைச்சர் அருண் ஜெட்லி: பா.ஜ.க.வினரது ஊழல் எதிர்ப்பின் யோக்கியாம்சம்.

சாதிக்காரர்களை நியமித்து போலீசு துறையை கட்டுப்படுத்துவது எப்படி, மற்ற ஆதிக்க சாதி அமைச்சர்கள் அதிகாரிகளை கண்காணிப்பது எப்படி, சமாளிப்பது எப்படி, மற்ற கட்சிகளில் கைக்கூலிகளை உருவாக்குவது எப்படி என்பது உள்ளிட்ட நிர்வாகக் கலைகள் தெரியும். தேர்தல் கமிசன் அதிகாரிகள் முதல் நீதியரசர்கள் வரை அனைவரையும் விலைக்கு வாங்கும் வழிமுறைகள் தெரியும். ஒரு கிரிமினல் மாஃபியாக் கும்பலின் தலைவிக்கு என்னவெல்லாம் தெரிய வேண்டுமோ அத்தனையும் தெரியும்.

வழக்கமாக, ஒரு கிரிமினல் மாஃபியா கும்பல் என்பது, கொலை, கொள்ளை, போதை மருந்து வியாபாரம், கட்டைப் பஞ்சாயத்து, வழிப்பறி உள்ளிட்ட கிரிமினல் குற்றங்களை செய்வதற்கான சமூக விரோதிகளையும் ரவுடிகளையும் ஒரு வலைப்பின்னலாக உருவாக்கிப் பராமரிக்கிறது. ஜெ - சசி கும்பலோ, அரசு எந்திரத்தையே அத்தகைய மாஃபியாவாக மாற்றியிருக்கிறது. ஜெயலலிதாவுக்கு ராம மோகன் ராவும் பிற ஐ.ஏ.எஸ் அதிகாரிகளும் மாவட்ட ஆட்சியர்களும் போலீசு அதிகாரிகளும் துணைவேந்தர்களும் காட்டும் விசுவாசம் என்பது கொள்ளையில் அவர்கள் பெறுகின்ற பங்குடன் நேரடித் தொடர்புள்ளது.

ஷீலா பாலகிருஷ்ணன் என்ற ஓய்வு பெற்ற அதிகாரியை ஆலோசகர் என்ற சட்டவிரோதப் பதவியில் ஜெ வைத்துக் கொண்டிருந்ததற்கும், ராம மோகன ராவுக்கு முறைகேடாகப் பதவி உயர்வளித்து தலைமைச் செயலர் ஆக்கியதற்கும், இன்று சசிகலா முதல்வராக வேண்டுமென்று வெளிப்படையாகவே துணைவேந்தர்கள் காவடி எடுப்பதற்கும் இதுதான் காரணம்.

❍ ● ❍

ஆற்று மணல் கொள்ளை பற்றி பா.ம.க நிறுவனர் ராமதாஸ் கூறும் விவரங்களைப் பாருங்கள். 2003-04 ஆம் ஆண்டில் 3639 கோடியாக இருந்த டாஸ்மாக் வருவாய் 2013-14 இல் 23,401 கோடியாக அதிகரித்துள்ளது என்றும், அதே நேரத்தில் 2003-04 இல் 150 கோடியாக இருந்த மணல் வருவாய் 2013-14 இல் 133.37 கோடியாக குறைந்துள்ளது என்றும் எடுத்துக்காட்டுகிறார் ராமதாஸ். நாளொன்றுக்கு 8300 லாரி மணல்தான் விற்கப்படுவதாக அரசு கணக்கு. உண்மையில் ஒரு லட்சம் லாரி மணல் அள்ளப்படுகிறது என்றும், கடந்த 13 ஆண்டுகளில் 4.75 லட்சம் கோடி ரூபாய் இதில் வருமானம் கிடைத்துள்ளது என்றும் குற்றம் சாட்டுகிறார் ராமதாஸ். ஆற்று மணலை அரசாங்கமே விற்கலாம் என்று ஆலோசனையைச் சொன்னவர் ராம மோகன ராவ். அமல் படுத்தியவர்கள் ஆறுமுகசாமி, படிக்காசு, சேகர் ரெட்டி, புதுக்கோட்டை ராமச்சந்திரன், பன்னீரின் பினாமி பாஸ்கர் என்ற பெரியதொரு கூட்டம்.

தமிழகத்திலுள்ள சாராய ஆலைகளிலிருந்து மாதத்திற்கு 80 லட்சம் பெட்டிகள் சாராயமும், ஒரு கோடி பீர் பாட்டில்களும் கொள்முதல் செய்யப்படுவதாகவும், சாராயப் பெட்டிக்கு 60 ரூபாயும், பீர் பெட்டிக்கு 35 ரூபாயும் பிரிமியர் சாராயத்துக்கு பெட்டி ஒன்றுக்கு 10 ரூபாயும் கமிசன் என்றும் கணக்கு சொல்கிறது நக்கீரன். இதில், போயசுக்கு 60 % பல்வேறு அதிகாரிகளுக்கு 35% மந்திரிக்கு 5 % பங்கு வைக்கப்படுவதாக கூறுகிறது.

10,000 கோடி மதிப்புள்ள பொதுப்பணித்துறை நெடுஞ்சாலைத்துறை ஒப்பந்தங்கள் சேகர் ரெட்டிக்குத் தரப்பட்டிருப்பதாகவும், அதில் 2500 கோடி போயசுக்குத் தரப்பட்டிருப்பதாகவும் கூறுகிறது ஜூவி. அரசுப் பயன்பாட்டுக்கான மென்பொருட்கள், இலவச லேப்டாப், மருத்துவமனை உள்ளிட்ட இடங்களின் கான்டிராக்ட் ஊழியர் பணிகள் அனைத்தும் ராம மோகன ராவின் மகன் விவேக்கிற்கு தரப்பட்டிருக்கின்றன.

இன்றைக்கு சேகர் ரெட்டி, பிரேம் ரெட்டி, ராம மோகன ராவ், விவேக், ரோசய்யா, வெங்கய்யா நாயுடு ஆகியவர்கள் தெரிகிறார்கள். இதற்கு முன்னர் சாராய முதலை சுப்பிராமி ரெட்டி, சந்திரபாபு நாயுடு, சரத் பவார், விஜய் மல்லையா போன்றோருடன் ஜெ-சசி



கண்டெய்னர் விவகாரம் தொடங்கி ஜெயாவின் மரணம் வரை ஜெயா-சசி கும்பலுக்கு எல்லாமுமாக இருந்துவரும் புதிய கூட்டாளி: மைய அரசின் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் வெங்கையா நாயுடு.

கும்பல் கள்ளத் தொடர்பு வைத்திருந்தது. கோவை கன்டெயினர் உள்ளிட்ட கள்ளப்பணங்களைத் தற்காலிகமாகப் பதுக்கி வைப்பதற்கான இடமாக ஆந்திரமும் தெலுங்கானாவும்தான் ஜெ வுக்குப் பயன்பட்டிருக்கின்றன. செல்லாத நோட்டை மாற்றுவதற்கு திருப்பதி உண்டியலை சேகர் ரெட்டி பயன்படுத்தியிருப்பதால், இவர்களுக்கு ஏழுமலையானின் ஆசியும் உண்டு என்று தெரியவருகிறது.

பரஸ்மால் லோதா என்ற கல்கத்தா மார்வாடியின் மூலம் துபாயில் ஒரு வணிக வளாகம், இந்தோனேசியாவில் சுரங்கம், தாய்லாந்தில் தனித்தீவு உள்ளிட்ட சுமார் 30,000 கோடி மதிப்புள்ள சொத்துகளை நத்தம் விசுவநாதன் மட்டுமே வாங்க முடிந்திருக்கிறது என்றால் மன்னார்குடி மாஃபியா அடித்திருக்கக்கூடிய கொள்ளையின் அளவை கற்பனையும் செய்து பார்க்க இயலவில்லை.

''ஜெயா ஆட்சியில் ஊழல் நடந்தது'' என்று கூறுவது தவறு. பொதுச்சொத்தையும் கருவூலத்தையும் கொள்ளையிடுவதற்காகத்தான் ஆட்சியே நடந்தது. லேப் டாப் முதல் சத்துணவு வரையிலான அனைத்தும் இந்தக் கும்பலின் கொள்ளையை மையப்படுத்தியே திட்டமிடப்பட்டன.

சேகர் ரெட்டி மூலம் ஒரு வேட்பாளருக்கு 4 கோடி ரூபாய் வீதம் 197 வேட்பாளர்களுக்கு கடந்த தேர்தலில் பணம் விநியோகிக்கப் பட்டிருப்பதாகக் குற்றம் சாட்டியிருக்கிறார் ராமதாஸ். இது மிகவும் குறைவான மதிப்பீடு என்பதுதான் சென்ற சட்டமன்றத்தேர்தல் காட்டும் உண்மை. இருந்த போதிலும், கரூர் அன்புநாதன் சுதந்திரமாகத் திரிகிறான். கோவை கன்டெயினர் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதில் இல்லை. சேகர் ரெட்டிக்கும் எதுவும் நடந்துவிடப் போவதில்லை. வருமான வரித்துறை சோதனைகள் எனப்படுபவை என்றைக்குமே வசூலுக்காக நடத்தப்படும் நாடகங்கள் தான்.

இன்று கருப்புப் பணத்தை ஒழிப்பதாக காட்டுவதற்கு மோடி நடத்தி வரும் நாடகத்தில் இது இன்னுமொரு காட்சி. திருடனிடம் பிடுங்கித் தின்னும் கிரைம் பிராஞ்சு போலீசைப் போல, இவர்களிடமிருந்து முடிந்த வரை கறப்பதற்கு நடத்தப்படும் வேட்டை. இது மோடிக்கு கிடைத்திருக்கும் இரண்டாவது கன்டெயினர்.

மற்றப்படி பாப்பாத்தி ஜெயாவை காப்பாத்தி விடுவதற்குத்தான் வாஜ்பாயி முதல் மோடி வரை அனைவரும் முயன்றார்கள். வாஜ்பாயி காலத்தில் தம்பிதுரையை மத்திய சட்ட அமைச்சராக நியமித்தது முதல் மோடி ஆட்சியில் வருமானவரித்துறை வழக்கிலிருந்து ஜெயாவை விடுவித்தது வரை இதற்கு சான்றுகள் பல. நாலும் மூணும் எட்டு என்று குமாரசாமி அளித்த தீர்ப்பை பாஜக வினர் கொண்டாடியதையும், தண்டிக்கப்பட்ட குற்றவாளியாக ஜெயா இருந்தபோதே போயசு தோட்டத்துக்கு நிதியமைச்சர் விஜயம் செய்ததையும் நாடறியும். திராவிட இயக்கத்தை உள்ளிருந்து அழித்த தன்னுடைய இயற்கையான கூட்டாளியான ஜெயலலிதாவின் செயற்கரிய சாதனையை பார்ப்பன பாசிசக் கும்பல் ஒருபோதும் மறந்து விடாது.

''சுயமரியாதையும் கவுரவமும் இழந்த கையேந்திகளாகவும் அடிமைகளாகவும் தமிழ்ச் சமுதாயத்தைச் சீரழிப்பது என்கிற பார்ப்பனப் பாசிசக் கும்பலின் கனவுத் திட்டத்தையே, தனது தனிப்பட்ட இலட்சியமாகக் கொண்டிருக்கும் ஒரு சதிகாரியின் பிடியில் சிக்கியிருக்கிறது தமிழகம். ஆற்றுமணல் கொள்ளை, தாது மணற்கொள்ளை, கிரானைட் கொள்ளை, தண்ணீர்க் கொள்ளை, ரியல் எஸ்டேட் என்று இயற்கை வளங்களைக் கொள்ளையிடும் கிரிமினல் கும்பல்கள், அதிகார வர்க்க கிரிமினல்கள், பன்னாட்டு நிறுவனங்கள் சார்ந்த தரகுக் கும்பல்கள் தமிழகத்தைத் தமது வேட்டைக் காடாக்கிக் கொண்டிருக்கின்றன. பிழைப்புவாத அடிமைகளின் கும்பலாகத் தோன்றிய அ.தி.மு.க. என்ற கட்சியோ, மேற்சொன்ன தொழில்கள் அனைத்திலும் ஊடுருவியிருக்கும் தொழில்முறை கிரிமினல் மாஃபியாவாக வளர்ந்திருக்கிறது''

என்று நவம்பர் 2014 இல் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டிருந்தோம்.

இப்போது மாஃபியாவின் தலைமைப் பதவியை உடன்பிறவா சகோதரி கைப்பற்றியிருக்கிறார். கொள்ளைக் கூட்டத்தின் உள் முரண்பாடுகள் காரணமாக அதிமுக கும்பல் தமக்குள் மோதிக் கொண்டு அழியவும் கூடும். அதனை எதிர்பார்த்துக் காத்திருக்கக் கூடாது. தமிழகத்தின் முகத்தின் மீது நெளிந்து கொண்டிருக்கும் அதிமுக என்ற விஷப்பூரானை நம் சொந்தக் கரங்களால் நசுக்கி அழிப்பதொன்றுதான், தமிழகம் பிழைப்பதற்கு வழி.

■ சூரியன்

# ஜெயா மரணம்:

# தமிழகத்தைக் கவ்வியிருந்த பீடை ஒழிந்தது!

அம்மா என அரிதாரம் பூசிக்கொண்ட கோமளவல்லி என்ற ஜெயலலிதா எப்படி இறந்தார், எப்பொழுது இறந்தார், எதனால் இறந்தார் என்பது அவருக்குச் சிகிச்சையளித்த மருத்துவர்கள், சசிகலா குடும்பம், நரேந்திர மோடி உள்ளிட்ட ஒரு சிலரைத் தவிர, மற்ற அனைவருக்கும் மர்மமான புதிராகிவிட்டது. அதன் காரணமாகவே, அவரது மரணம் குறித்து சந்தேகங்களும், வதந்திகளும் இறக்கை கட்டிப் பறக்கின்றன. அதேசமயம், இந்த வதந்திகளுக்கு இணையாக, ஜெயா குறித்தும், அவரது ஆட்சி குறித்தும் அவிழ்த்துவிடப்படும் கட்டுக்கதைகளுக்கும் எந்தப் பஞ்சமுமில்லை.

தி.மு.க.வின் குடும்ப, வாரிசு அரசியலை அக்குவேறு ஆணி வேறாக அலசும் ஊடகங்கள், ஜெயா கட்சியிலும் பதவியிலும் திணிக்கப்பட்ட வரலாறை மறந்தும் எழுதுவதில்லை. ஜெயா, எம்.ஜி.ஆரோடு 20-க்கும் மேற்பட்ட படங்களில் நாயகியாக நடித்தவர் என்பதுதான் ஊர் உலகம் அறிந்த விடயம். ஆனால், எம்.ஜி.ஆர். இறந்தவுடன், தான் உடன்கட்டை ஏறப் போவதாக அறிவித்தார், ஜெயா. அவர், எம்.ஜி.ஆரின் சட்டபூர்வமான மனைவி இல்லை என்ற நிலையில் இந்த அறிவிப்பு உணர்த்தும் பொருள் என்ன என்பதை விளக்கத் தேவையில்லை.

இப்படிபட்டதொரு தகுதியை மட்டுமே கொண்டு கட்சிக்குள் நுழைந்த அவர், எம்.ஜி.ஆர். இறந்த பின்னர் அந்த ஒரே தகுதியைக் கொண்டே அ.தி.மு.க.வின் பொதுச்செயலர் ஆனார். ராஜீவின் சாவால் எழுந்த அனுதாப அலையைப் பயன்படுத்திக் கொண்டு தமிழகத்தின் முதலமைச்சர் ஆனார்.

தமிழகத்தைக் கொள்ளையிடும் உரிமை தனக்கு மட்டுமே உரியது என்ற தோரணையில், தமிழ்நாட்டின் நிரந்தர முதல்வர் எனத் தனக்குத்தானே பட்டம் சூட்டிக் கொண்டார். அவர் நடத்திய கொள்ளையை எதிர்த்தவர்கள் மீது அவதூறு வழக்குகள் உள்ளிட்ட அடக்குமுறைகளை ஏவிவிட்டார். இதன் காரணமாகவே தமிழக மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டு, 1996, 2006 சட்டமன்றத் தேர்தல்களிலும் 2004 பொதுத் தேர்தலிலும் மண்ணைக் கவ்வினார்.

தேர்தலில் தோற்றாலும், ஊழல் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டாலும், அவர் தனது மேட்டுக்குடி பொறுக்கித்தனத்தை மாற்றிக் கொண்டதேயில்லை. ஊழல்தான் நிர்வாகம், நிர்வாகம்தான் ஊழல் என ஆட்சி முறைக்குப் புதிய பொழிப்புரை எழுதியவர் ஜெயா.

ஊழல் குற்றச்சாட்டில் தண்டிக்கப்பட்ட குற்றவாளி மாநில முதல்வராக முடியும் என்ற புர்ரட்ச்சசியை நடத்திக் காட்டியவரும் அவர்தான். முதலமைச்சர் பதவியில் இருந்தபோதே சொத்துக் குவிப்பு குற்றச்சாட்டில் தண்டிக்கப்பட்டு, பதவி பறிக்கப்பட்ட முதல் முதலமைச்சரும் அவர்தான். நீதிபதிகளையும் விலைக்கு வாங்க முடியும் எனக் காட்டி, நீதித்துறையின் புனிதத்தைத் தோலுரித்துக் காட்டிய புர்ரட்ச்சித் தலைவியும் அவர்தான்.

தானே உருவாக்கி வைத்திருக்கும் சட்டம், மரபு ஆகியவற்றுக்கே எதிராகத் திரும்பித் தோல்வியடைந்து நிற்கிறது இந்திய அரசியலமைப்பு. இந்தத் தோல்வியின் எடுப்பான, ஒப்பாரும் மிக்காரும் இல்லாத உதாரணமாக விளங்கியவர் தான் ஜெயா.

எனினும், பொறுக்கி அரசியலில் புதிய எல்லைகளைத் தொட்ட ஜெயாவைத் திறமைசாலி, துணிச்சல்காரி, சிறந்த நிர்வாகி என்று பார்ப்பனக் கும்பல் துதிப்பதற்கும்; ஜெயா மீது தொடரப்பட்ட ஊழல் வழக்குகள், அவரை அரசியலில் இருந்து அப்புறப்படுத்த தி.மு.க. மேற்கொண்ட சதி என அக்கும்பல் உண்மையைத் திரித்துப் புளுகுவதற்கும், தமிழகத்தில் பெரியார் விதைத்துச் சென்ற பார்ப்பன எதிர்ப்பு மரபைத் துடைத்தெறிவதற்கு ஒரு பார்ப்பனத்தியே ஆயுதமாகக் கிடைத்தார் என்பதைத் தவிர வேறு காரணமில்லை.

கட்சி, அரசியல் உள்ளிட்ட பொது வாழ்விலும், ஆட்சி நிர்வாகத்திலும் அந்தப் பார்ப்பன பீடை வளர்த்துவிட்டுச் சென்றுள்ள அருவருப்பான அலங்கோலங்களை நினைவுகூர்ந்தால், பார்ப்பன பாசிஸ்டான ஜெயாவின் மறைவுக்காகத் தமிழக மக்கள் அனுதாபம் கொள்ள எந்த நியாயமும் இல்லை.

■ செல்வம்

சென்னை-ராஜாஜி ஹாலில் வைக்கப்பட்ட ஜெயாவின் சடலம்.
(உள்படம்) ஜெயலலிதா.



# ஜெயா:
# பெண்ணரசியா? இம்சை அரசியா?

**பெண் என்ற காரணத்தை முன்வைத்து, ஜெயாவின் ஆட்சிக் காலங்களில் நடந்த அனைத்துக் குற்றங்களில் இருந்தும் ஜெயாவை விடுவித்துவிட்டு, அவரை மதிப்பீடு செய்வது அறிவுடமையாகாது.**

“பெரியார் கனவு கண்ட புதுமைப் பெண்ணாக நான் அவரைக் காண்கிறேன்.'' (திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, பத்திரிகையாளர் வாஸந்தியிடம் கூறியதாக. தமிழ் இந்து, டிச.7,2016, பக்.11)

‘‘பெண்கள் தங்களது சொந்த வாழ்க்கையில் எதிர்கொள்ளும் ஒடுக்குமுறைகள், அவமானங்கள் மற்றும் தனிமையோடு ஜெயலலிதாவையும் அவரது வாழ்க்கையையும் ஆறுதலாகவும், விடுதலையாகவும் அடையாளம் காண்கிறார்கள்.'' (ஷங்கர் ராமசுப்ரமணியன், தமிழ் இந்து, டிச.7, 2016, பக்.11)

உண்மையை, நியாயத்தைக் கொண்டு ஒரு விசயத்தை நிரூபிக்க முடியாத போது, நம்பிக்கை என்ற அம்சத்தை முன்னிறுத்தி, அதனை விவாதத்திற்கு அப்பாற்பட்டதாக மாற்றுவது மதவாதிகளின் குயுக்தி. அதுபோல, ஜெயாவின் அரசியல் வாழ்வை, நடவடிக்கைகளைப் பெண் என்ற பாதுகாப்பான அம்சத்தை முன்னிறுத்தி ஆராதிக்கும் போக்கு தமிழகத்தின் பொதுவெளியில் பல்வேறு மட்டங்களில் தொடர்ச்சியாகக் கட்டமைக்கப்படுகிறது.

**பெண்களின் தாலி அறுக்குது டாஸ்மாக் என்பதைச் சொரணையற்ற ஆட்சியாளர்களுக்கு நினைவுபடுத்தும் விதத்திலும் சென்னை பட்டினப்பாக்கம் பேருந்துநிலையம் அருகே அமைந்துள்ள டாஸ்மாக் கடையை மூடக் கோரியும் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்.** (கோப்புப் படம்)



மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு என்றார் பெரியார். ஆனால், ஜெயலலிதாவோ தன்மான உணர்ச்சியையும் அறிவு உணர்ச்சியையும் தமிழகத்திலிருந்தே துடைத்தெறிந்துவிட வேண்டும் என்பதை மூர்க்கமான கொள்கையாகக் கொண்டு செயல்பட்டவர். தன் காலில் விழுபவனை, தன்னிடம் கையேந்தி நிற்பவனை ரசித்து மகிழ்ந்த வக்கிர புத்தி கொண்ட அவர், தன்னை எதிர்த்துக் கேள்வி கேட்பவர்கள் மீது அவதூறு வழக்கு தொடங்கி தேசத் துரோகக் குற்றச்சாட்டு வரை சுமத்திச் சிறையில் தள்ளிய சர்வாதிகார மனப்பாங்கு கொண்டவர்.

இப்படிபட்ட பெண்மணியை, பகுத்தறிவு பேசும் கி.வீரமணி பெரியார் கண்ட புதுமைப் பெண்ணாகப் பார்க்கிறார் என்றால், பாமர தமிழ்ப் பெண்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதேயில்லை. தொட்டில் குழந்தை திட்டம் தொடங்கி மாணவிகளுக்கு நாப்கின் வழங்கியது வரையிலான, ஜெயாவின் கவர்ச்சித் திட்டங்களை மட்டுமே முன்னிறுத்தி அவரைத் தமிழகப் பெண்களின் வழிகாட்டியாகத் தூக்கி நிறுத்துகிறார்கள்.

ஜெயா அறிவித்த பெண்களுக்கான நலத் திட்ட உதவிகளால் தமிழ்நாட்டுப் பெண்களுக்கு எந்தளவிற்கு விடிவு ஏற்பட்டிருக்கிறது? ஒரு பறவைப் பார்த்தாலேகூட, அவரது ஆட்சியைப் பெண்களுக்குச் சாதகமான, பரிவான ஆட்சி என்று கூற முடியாது என்பதற்கு ஏராளமான சான்றுகள் கொட்டிக் கிடக்கின்றன.

தாலிக்குத் தங்கம் திட்டத்தை அறிவித்த ஜெயா அரசுதான், தெருவுக்குத் தெரு டாஸ்மாக் கடைகளைத் திறந்து பெண்களின் தாலியை அறுத்தெறிந்தது. கடலூர் மாவட்டத்தில், 450



ஜெயா போலீசாலும், வனத்துறை காவலர்களாலும் பாலியல் வன்முறை உள்ளிட்ட அக்கிரமங்களுக்கு ஆளான வாச்சாத்தி கிராமப் பெண்கள். (கோப்புப் படம்)

ஒருபுறம் ஆண்களைக் காலில் விழ வைத்த செல்வி ஜெயலலிதாதான் இன்னொருபுறத்தில், எம்.ஜி.ஆர். இறந்த பிறகு உடன்கட்டை ஏறப் போவதாக அறிவித்துத் தமிழகப் பெண்களைத் திடுக்கிட வைத்தார்.

இது மட்டுமா, சுப்பிரமணிய சுவாமி, முதல்வர் ஜெயா மீது சொத்துக்குவிப்பு வழக்குத் தொடுக்க ஆளுநரிடம் அனுமதி பெற்றதையடுத்து, அது தொடர்பாக சென்னை உயர்நீதி மன்ற விசாரணைக்கு வந்தபோது, அவரை அசிங்கப்படுத்துவதற்கு அ.தி.மு.க. மகளிர் அணியை இறக்கிவிட்டார், ஜெயா. அன்று அந்தக் கும்பல் ஆடிய ஆபாச, வக்கிர ஆட்டம் ஜெயா பொறுக்கி அரசியலில் புரட்சித் தலைவி என்பதை நிரூபித்தது.

குடும்பங்களே உள்ள கச்சிராயநத்தம் கிராமத்தில் 105 பெண்களைக் கைம்பெண்களாக்கியிருக்கிறது, அம்மாவின் டாஸ்மாக் கடை. முழு மதுவிலக்கை அமல்படுத்தக் கோரி சென்னை பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் போராடியபொழுது, முன்னணியில் நின்ற கல்லூரி மாணவிகளை, இளம் பெண்களைப் பாலியல் வக்கிரத்தோடு தமிழக போலீசு அடித்து மிதித்ததைக் கண்டு தமிழகமே விக்கித்து நின்றது.

2016 சட்டமன்றத் தேர்தலில் வென்று ஆட்சியைப் பிடித்த ஜெயா, தனது தேர்தல் வாக்குறுதியைக் காப்பாற்றுவது போல 500 டாஸ்மாக் கடைகளை மூடுவதாக அறிவித்தார். ஆனால், இந்த 500 கடைகளும் போதிய அளவிற்குப் போணியாகாமல் காத்து வாங்கிய கடைகள் என்பதும், போணியாகும் கடைகளில் விற்பனை இலக்கு முன்பைவிட அதிகமாக நிர்ணயிக்கப்பட்டிருப்பதும் அம்பலமாகி, ஜெயாவின் அறிவிப்பு மக்களை, குறிப்பாகப் பெண்களை ஏய்க்கும் நாடகம் என்பது நாறிப் போனது.

ஜெயாவின் காலில் அவரது கட்சியைச் சேர்ந்த ஆண்கள் நெடுஞ்சாண் கிடையாக காலில் விழுந்து எழுந்திருப்பதைச் சுட்டிக் காட்டி, சினிமாத்துறையிலும், அரசியலிலும் ஜெயாவை ஆண் உலகம் அவமானப்படுத்தியதற்கான பரிகாரமாக இது இருக்கட்டும் என எழுதுகிறார், வாஸந்தி. ஜெயாவின் காலடியில் ஆண்கள் மட்டுமா விழுந்து எழுந்தார்கள். வளர்மதி, கோகுல இந்திரா உள்ளிட்ட அவரது கட்சியைச் சேர்ந்த பெண்கள்கூடக் காலில் விழுந்து எழுந்தார்கள்.

கட்சிக்காரர்களின் அடிமைத்தனம் நிறைந்த விசுவாசத்தை எம்.ஜி.ஆர். என்ற ஆணிடமிருந்து வரித்துக் கொண்ட ஜெயா, அதனை அருவருக்கத்தக்க உச்சத்துக்கு எடுத்துச் சென்றார். ஆண்களைக் காலில் விழச் செய்த ஜெயாவின் சாதனை, பெண் விடுதலையின் குறிபொருள் அல்ல. மாறாக, பிழைப்புவாத, அடிமைத்தனத்தனத்தின் குறியீடு.

ஜெயா, மூன்று முறை தேர்தல்களில் வென்று, ஆட்சி அமைத்திருக்கிறார். அவரது ஆட்சி நெடுகிலும் சாதாரண உழைக்கும் பெண்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதிகளைத் தொகுத்துப் பார்த்தால், அவரது ஆட்சி பெண்களுக்கு அனுசரனையான ஆட்சி அல்ல, பேயாட்சி என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

ஜெயாவின் முதல் தவணை ஆட்சியில் (1991-96) தமிழக போலீசு நிலையங்கள் பாலியல் வன்கொடுமைக் கூடங்களாகத் திகழ்ந்தன. சிதம்பரம் பத்மினி, அந்தியூர் விஜயா, வாச்சாத்தி கிராமப் பெண்கள் என அந்தக் கொடூரத்திற்கு உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். தமிழக போலீசு நடத்திய இந்தப் பாலியல் வன்கொடுமைக்கு எதிராகப் போராட்டங்கள் வெடித்தபோது, ‘‘அரசிடமிருந்து பணம் பெறுவதற்காகவே, போலீசின் மீது அபாண்டமாகப் பழி போடுகிறார்கள்’’ எனப் பாதிக்கப்பட்ட பெண்களை வேசிகளைப் போலச் சித்தரித்து அவமானப்படுத்தினார், பெண் முதல்வர் ஜெயா.

பிளஸண்ட் ஸ்டே விடுதி வழக்கில் சிறப்பு நீதிமன்றத்தால் ஜெயா தண்டிக்கப்பட்டவுடன், அ.தி.மு.க. கும்பல் நடத்திய வன்முறை வெறியாட்டத்தில் மூன்று விவசாயக் கல்லூரி மாணவிகள் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டனர். மூன்று இளம் மாணவிகளைக் கொன்ற தனது கட்சிக்காரர்களுக்கு எதிராகப் பெண்ணாகிய ஜெயா நெற்றிக் கண்ணைத் திறக்கவில்லை. மாறாக, அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி, அந்தக் கொலை வழக்கை ஊத்தி மூடிவிட முயன்று தோற்றுப் போனார். மரண தண்டனை விதிக்கப்பட்ட தனது கட்சிக்காரர்களுக்காக உச்சநீதி மன்றத்தின் கதவுகளை மீண்டும் மீண்டும் தட்டி, அத்தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கச் செய்தார்.

அவரது இரண்டாவது தவணை ஆட்சியில் (2001-06) சந்தனக் கடத்தல் வீரப்பன் வேட்டை என்ற பெயரில் தமிழகத்தைச் சேர்ந்த பழங்குடியினப்

பெண்கள் மீது தமிழகப் போலீசு நடத்திய பாலியல் வன்கொடுமைகளையும், சித்திரவதைகளையும் சோளகர் தொட்டி என்ற நாவல் பதிவு செய்திருக்கிறது. இந்த மனித உரிமை மீறல்களை விசாரித்த சதாசிவம் கமிசன் போலீசின் அட்டூழியங்களைச் சாட்சியங்களோடு ஆவணப்படுத்தியிருக்கிறது. ஆனால், ஜெயாவோ குற்றமிழைத்த போலீசாரைத் தண்டிப்பதற்குப் பதிலாக, அவர்களுக்குப் பணப் பரிசுகளையும், வீட்டு மனைகளையும், பதவி உயர்வுகளையும் வாரி வழங்கி கௌரவித்தார்.

அவரது மூன்றாவது தவணை ஆட்சியின்போது, பெண் போலீசு அதிகாரியான விஷ்ணுபிரியா தற்கொலை செய்து கொண்டார். கவுண்டர் சாதிவெறியர்களால் கொல்லப்பட்ட கோகுல்ராஜ் என்ற தாழ்த்தப்பட்ட இளைஞனின் கொலை வழக்கை நேர்மையாக விசாரித்த ஒரே காரணத்திற்காக, அவர் உயர் அதிகாரிகளால் சாதியின் பெயரால் அவமானப்படுத்தப்பட்டு, மன உளைச்சலுக்கு ஆளாக்கப்பட்டுத் தற்கொலைக்குத் தள்ளப்பட்டார். அந்த நேர்மையான பெண் அதிகாரியின் அநியாயச் சாவிற்கு பெண்ணான ஜெயா அனுதாபம்கூடத் தெரிவிக்கவில்லை. தனது மகளின் சாவில் மறைந்துள்ள உண்மையை வெளிக்கொண்டு வருவதற்காக, விஷ்ணுபிரியாவின் தந்தை சி.பி.ஐ., விசாரணை கோரி வழக்குத் தொடுத்தபோது, விஷ்ணு பிரியாவைத் தற்கொலைக்குத் தள்ளிய போலீசு உயர் அதிகாரிகளைப் பாதுகாக்கும் நோக்கில் சி.பி.ஐ. விசாரணையை மறுத்து வாதிட்டது, ஜெயா அரசு.

இந்த அநீதிகள் உங்கள் மகளுக்கோ, சகோதரிக்கோ நடந்திருந்தால், உங்களால் ஜெயாவைப் பெண்களின் ஆதர்சனத் தலைவராக வியந்தோத முடியுமா? பார்ப்பன சாதித் திமிரும், பணமும், அரசியல் அதிகாரமும் இணைந்து உருவாக்கிய அகந்தையும், மேட்டுக்குடி பொறுக்கித்தனமும் கலந்த கலவைதான் ஜெயா. அருவருக்கத்தக்கதும், உழைக்கும் மக்களுக்கு எதிரானதுமான இந்த தீயகுணங்களைக் கொண்ட ஆளுமையான ஜெயாவைப் பெண் என்பதாலேயே அவரின் தனிப்பட்ட இன்ப, துன்பங்களைப் பெரிதுபடுத்திப் பேசுவதையும், அவரின் கிரிமினல் குற்றங்களை மறைத்துவிட முயலுவதையும் அனுமதிக்க முடியாது.

■ திப்பு

# சுயமரியாதையை அழித்து... பார்ப்பனப் பண்பாட்டைத் திணித்து...

**சுயமரியாதை அரசியலைப் பேசிவந்த தமிழகத்தில், அதற்கு எதிரான பார்ப்பன அடிமைத்தனமும், மூடத்தனமும் மீண்டும் கோலோச்சும்படி தமிழகத்தைச் சீரழித்தார், பார்ப்பன ஜெயா.**

“கடவுள் மீதும் தேசியத்தின் மீதும் நம்பிக்கை கொண்ட, திராவிட இயக்கத்தால் வெறுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த பெண், அத்திராவிட இயக்கத்தைச் சேர்ந்த கட்சிக்குத் தலைவியாகி, அதனைத் தனது இரும்புப் பிடியில் வைத்திருந்தது வரலாற்று முரண், அதிசயம்” என்றெல்லாம் ஊடகங்கள் ஜெயா அ.தி.மு.க.விற்குத் தலைமை தாங்கியதை ஆச்சரியத்தோடு விவரிக்கின்றன.

கடந்த ஐம்பது, அறுபது ஆண்டு கால திராவிட இயக்கத்தின் வரலாற்றிலிருந்து இருந்து பார்த்தால், அ.தி.மு.க.வின் தலைவியாக பார்ப்பன ஜெயா கோலோச்சியது, அதிசயமாகவோ, முரணாகவோ இருக்காது. பெரியாருக்குப் பிறகான திராவிடர் கழகம், பெரியாரின் கொள்கைகளைப் பூஜைக்குரியாதாக்கி, பெரியார் திடலுக்குள்ளேயே ஒடுங்கிப் போய்விட்டது. திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து உருவான திராவிட முன்னேற்றக் கழகமோ, அதன் தொடக்கத்திலேயே பெரியாரின் கடவுள் மறுப்பு, நாத்திகப் பிரச்சாரம், பார்ப்பன எதிர்ப்புகளில் சமரசம் செய்துகொண்டு, பின்னோக்கிப் பாய்ந்து கொண்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பிரிந்து உருவான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் திராவிட இயக்கத்தின் அங்கமாகக் கருதுவதே கேலிக்குரியது. மீசை வைத்தவனெல்லாம் வீரன் எனப் பார்ப்பதைப் போன்று பாமரத்தனமானது. பெரியாரை இன்றுவரை இந்து மத விரோதியாக, தேச விரோதியாகப் பார்க்கிறது, ஆர்.எஸ்.எஸ். ஆனால், பெயரில் மட்டுமே திராவிடத்தைக் கொண்டுள்ள அ.தி.மு.க.வை, “நாத்திகத்தை நாகரிகமாக்கிய, தேசியத்தை எள்ளி நகையாடிய, நாட்டு ஒற்றுமையைக் குலைத்த, தேச விரோத திராவிட அரசியலைத் தகர்த்த கட்சி (அ.தி.மு.க.)” என மதிப்பிடுகிறார், ஆர்.எஸ்.எஸ்.-ஐச் சேர்ந்த குருமூர்த்தி (துக்ளக் தலையங்கம், 28.12.16).

எம்.ஜி.ஆர். நூற்றாண்டு பிறந்த தினத்தையொட்டி

42 தமிழர்கள் உடல் நசுங்கிச் செத்த கும்பகோணம் மகாமகத் திருவிழாவில் தனது தோழி ஜெயாவை நீராட்டும் சசிகலா: தமிழக நீரோக்கள்! (கோப்புப் படம்.)





ஜெயா உடல் நலம் பெற வேண்டி மண் சோறு சாப்பிடும் வளர்மதி, சரசுவதி, பாத்திமா பாபு உள்ளிட்ட அ.தி.மு.க.வின் மகளிர் அணியைச் சேர்ந்த பெண்கள்: பார்ப்பன மூடத்தனம்.

இந்து முன்னணியின் விஜயபாரத்தில் வந்த கட்டுரையின் தலைப்பு, ''எம்.ஜி.ஆர். போல ஹிந்துத்துவ ஆதரவு முதல்வர் நேற்றும் இல்லை, நாளையும் இல்லை.''

ஒருவனுடைய கொள்கை உறுதியை எதிரிகள் எப்படி மதிப்பிடுகிறார்கள் என்ற அடிப்படையைக் கொண்டு பார்த்தால், அ.தி.மு.க. திராவிட இயக்கத்தில் தோன்றிய கோடாரிக்காம்பு, புல்லுருவி என்பதற்கு, குருமூர்த்தி, விஜயபாரதத்தின் மதிப்பீடுகளைத் தாண்டி வேறு சான்றுகள் தேவையில்லை.

நாத்திகம், கடவுள் மறுப்புக்கு விரோதமான கோவில், குளங்களைச் சுற்றி வருவது, சாதி ஒழிப்பைக் கைவிட்டு சாதி அரசியல் நடத்துவது, ஓட்டுப் பொறுக்குவதற்கும், அதிகாரத்தைப் பிடிப்பதற்கும் பெரியாரின் கொள்கைவிட, பார்ப்பன ஆதிக்க சக்திகளோடு சமாதான சகவாழ்வு வாழ்வது எனத் திராவிட ஓட்டுக் கட்சிகள் சீரழிந்தும், பார்ப்பன அடிமைத்தனத்திலும் பிழைப்புவாதத்திலும் மூழ்கிப் போய்விட்ட நிலையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற கழிசடைக் கட்சிக்கு ஒரு பார்ப்பனத்தித் தலைவியாக வந்தது இயல்பான பரிணாம வளர்ச்சிதான்.

பா.ம.க. போன்ற சாதிக் கட்சிகளைத் தவிர, மற்றைய ஓட்டுக்கட்சித் தலைவர்கள் பொதுவெளியில் தம்மைக் குறிப்பிட்ட சாதியோடு அடையாளப்படுத்திக் கொள்ளும் பிற்போக்குத்தனத்தை வெளிப்படுத்துவதில்லை. ஆனால், ஜெயாவோ தனது சாதி அடையாளத்தைக் காட்டிக் கொள்ள தயங்கியதேயில்லை. அவர் முதன் முறையாக முதலமைச்சர் பதவியில் உட்கார்ந்தவுடனேயே, தமிழகப் பிராமணாள் சங்கம், ''நடப்பது நம்மவா ஆட்சி'' எனப் புளகாங்கிதத்தோடு அறிவித்தது. அதற்கு அங்கீகாரம் கொடுப்பதைப் போல, ''நான் பார்ப்பனத்திதான்'' எனச் சட்டமன்றத்திலேயே சாதித் திமிரோடு அறிவித்தார், ஜெயா.

ஆட்சிக்கு வந்த நான்காவது மாதத்திலேயே (செப்.91) கும்பகோணம் மகாமகம் திருவிழாவைப் பிரம்மாண்டமாக நடத்தி 48 தமிழர்களைப் பலியிட்டார். தனது தோழி சசியோடு குளத்தில் நீராட வந்த ஜெயாவிற்குத் தரப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள், கெடுபிடிகளால் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு, அரசின் கணக்குப்படி 48 தமிழர்கள் உடல் நசுங்கி, மூச்சுத் திணறிச் செத்துப் போனார்கள். இவ்வளவு பேர் இறந்து போனதை, பலர் படுகாயமடைந்ததை அறிந்தும்கூட, பார்ப்பன ஜெயா நேரில் வந்து பார்வையிடவில்லை, ஆறுதல் தெரிவிக்கவில்லை. மாறாக, நீராடி முடித்த கையோடு, விருந்து சாப்பிட்டுவிட்டு சென்னை திரும்பினார். பார்பனியமும் அதிகாரமும் சேர்ந்த கலவை எப்படியிருக்கும் இந்தச் சம்பவம் ஒரு சான்று.


நரசிம்ம ராவ் அரசில் அமைச்சராக இருந்த காங்கிரசைச் சேர்ந்த அருணாசலம் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் என்பதாலேயே, அவரைத் தனது தனி விமானத்தில் ஏற்றிச் செல்ல மறுத்து, விமானத்திலிருந்து இறக்கிவிட்டு அவமதித்தார். ''அம்முவுக்கு மாட்டுக் கறி சமைக்கத் தெரியும்'' என எம்.ஜி.ஆர். சொன்னதாக நக்கீரன் இதழ் கட்டுரை வெளியிட்டவுடன், அவ்விதழ் அலுவலகத்தின் மீது அ.தி.மு.க. குண்டர் படையை ஏவிவிட்டுத் தாக்குதல் தொடுத்தார். முதல்வர் ஜெயாவைக் கேவலப்படுத்திவிட்டதாகக் குற்றஞ்சுமத்தி நக்கீரன் இதழ் ஆசிரியர் மீது தமிழகத்தின் பல்வேறு நீதிமன்றங்களில் அவதூறு வழக்குகள் தொடரப்பட்டன. மாட்டுக் கறி தாழ்த்தப்பட்டோருடனும் தீண்டாமையோடும் தொடர்புடையது என்ற பார்ப்பன சாதிவெறிதான் நக்கீரன் இதழ் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் வழக்குகளுக்கும் காரணம். தி.மு.க. தலைவர் கருணாநிதியைச் சாதியைச் சொல்லி இழிவுப்படுத்தி, வளர்மதி சட்டமன்றத்தில் பேசியதை பெயருக்குக்கூடத் தடுக்காமல், ரசித்தார்.

நடிகர் சிவக்குமார், தனது மூத்த மகன் சூர்யா - நடிகை ஜோதிகா திருமணப் பத்திரிகையை ஜெயாவிடம் கொடுக்கச் சென்றபொழுது, கூட வந்திருந்த சிவக்குமாரின் இளைய மகன் கார்த்தியிடம், ''நீயாவது உங்க அப்பா, அம்மா விருப்பப்படி சொந்த சாதிக்குள்ளேயே திருமணம் செய்து கொள்'' என ஜெயா புத்திமதி சொன்னதாக நினைவுகூர்ந்திருக்கிறார், சிவக்குமார். இது ஏதோ கவுண்டர் சாதிவெறியன் சிவக்குமாரை அந்தச் சமயத்தில் திருப்திபடுத்தச் சொல்லப்பட்ட அறிவுரை மட்டுமல்ல; சனாதன சாதிக் கட்டுமானத்தின் மீது ஜெயாவிருக்கும் பிடிப்பு, வெறியின் வெளிப்பாடும்கூட.

இவையெல்லாம், ஜெயா, தன்னளவிலேயே பார்ப்பன சாதிவெறி பிடித்தவர், தீண்டாமை பாராட்டுபவர் என்பதைப் பொதுவெளியில் அம்பலப்படுத்திய நிகழ்வுகள். அவரது அரசோ, பார்ப்பனத்தி தலைமையின்

கீழ் தேவர், கவுண்டர் சாதி வெறிக் கும்பல் குத்தகைக்கு எடுத்த ஆட்சியாக இருந்தது.

சங்கப் பரிவார அமைப்புகளுள் ஒன்றான இந்து முன்னணி தமிழகத்தில் காலூன்ற எம்.ஜி.ஆர்., அரசு ஆதரவாக இருந்தது என்றால், எம்.ஜி.ஆரின் தோழியான ஜெயாஜி, காக்கி டவுசர் போடாத ஆர்.எஸ்.எஸ். பேர்வழியாகவே நடந்து கொண்டார். பாபர் மசூதி இடிக்கப்படுவதற்கு முன்பாக, மைய அரசு நடத்திய தேசிய ஒருமைப்பாட்டு கவுன்சில் கூட்டத்தில், ''ராமனுக்கு அயோத்தியில் கோவில் கட்டாமல், பாகிஸ்தானிலா கட்ட முடியும்?'' எனக் கூச்சமின்றி ஆர்.எஸ்.எஸ். திட்டத்திற்கு ஆதரவளித்துப் பேசினார். வருமானமில்லாத கோவில்களில் பூஜை, புனஸ்காரங்களை நடத்துவதற்கு வைப்பு நிதித் திட்டம், திருக்கோவில்களில் அன்னதானத் திட்டம் - என அரசு நிதியை மானியமாக பார்ப்பனக் கோவில்களுக்கு அள்ளிக் கொடுத்தார்.



சிதம்பரம் நடராஜர் கோவில் அரசு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட பின், தமது மீட்பரைச் சந்திக்கும் தில்லைவாழ் தீட்சிதர்கள். (கோப்புப் படம்)

சூத்திர சாதி மக்களின் வழிபாட்டு முறைகளை மறுக்கும் விதமாக, கிடா வெட்டும் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தார். இவை அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போல, மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்து தமிழகத்தைப் பார்ப்பன செல்வாக்கு மண்டலமாக மாற்ற முயன்றார். இந்த இரண்டு சட்டங்களைத் தமிழகத்தில் ஆதரித்தவர்கள் இரண்டு பிரிவினர்தான். ஒன்று, ஆர்.எஸ்.எஸ். கும்பல், மற்றொன்று பார்ப்பன சாதிவெறியர்கள். இச்சட்டங்கள் கொண்டுவரப்பட்ட பிறகு நடந்த 2004 நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. மண்ணைக் கவ்வியதையடுத்து, இந்த இரண்டு சட்டங்களை ஜெயா திரும்பப் பெற்றதைத் தமிழகத்துப் பார்ப்பனக் கும்பல் கசப்பு மாத்திரையைப் போல விழுங்கி நின்றது.

தி.மு.க. அரசால் கொண்டுவரப்பட்ட அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் சட்டமும், தீட்சிதர்கள் என்ற கொள்ளைக்கூட்டத்தின் பரம்பரைச் சொத்தாகக் கருதப்பட்ட சிதம்பரம் நடராஜர் கோவிலை இந்து அறநிலையத்துறையின் நிர்வாகம், கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த சென்னை உயர்நீதி மன்ற உத்தரவும் பார்ப்பன ஜெயா ஆட்சியில்தான் உச்சநீதி மன்றத்தால் ரத்து செய்யப்பட்டன என்பது தற்செயலான நிகழ்வு அல்ல. பார்ப்பன ஜெயா அரசு தீட்சிதர்களோடும் சிவாச்சாரியர்களோடும் கள்ள உறவு வைத்துக் கொண்டு இந்த இரண்டு வழக்குகளைத் தோற்கடிக்கும் விதத்திலேயே உச்சநீதி மன்றத்தில் நடத்தியது.

இப்படி ஒருபுறம் அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி மேலிருந்து பார்ப்பனப் பண்பாட்டை, பார்ப்பன ஆதிக்கத்தைத் திணித்த ஜெயா, மறுபுறம் கீழே தனது கட்சி அணிகள், தன்னை ஆதரித்த உதிரி வர்க்கங்களிடம் பார்ப்பன மூடத்தனங்களை வளர்த்து விட்டார். சசிகலாவிற்கு அடுத்து, ஜெயாவைச் சுதந்திரமாகச் சந்தித்தவர்கள் மலையாள ஜோதிடர்களும், வாஸ்து நிபுணர்களும்தான். அ.தி.மு.க. அமைச்சர்களும், நிர்வாகிகளும் தமிழகத்தை மொட்டையடித்தற்கு அப்பால் செய்த வேலை அம்மாவுக்காக கோவில் கோவிலாக ஏறி இறங்கியதுதான்.

ஜெயாவின் பிறந்த நாட்களின்பொழுது தங்கத் தேர் இழுத்த, பால் காவடி எடுத்த, உடம்பில் வேப்பிலையைச் சுற்றிக் கொண்டு தீச்சட்டி ஏந்திய உடன்பிறப்புகள், அவர் ஊழல் குற்றத்திற்காகச் சிறையில் தள்ளப்பட்டபொழுதும் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த வேளையிலும் யாகம் வளர்த்தார்கள், மண் சோறு சாப்பிட்டார்கள், மொட்டையடித்துக் கொண்டார்கள், அலகு குத்திக் கொண்டார்கள். இதற்கெல்லாம் ஆட்களைப் பிடிப்பதற்கு ரேட் வேறு நிர்ணயிக்கப்பட்டது. பக்தி என்ற பெயரில் பார்ப்பனக் கும்பல் திணித்திருந்த மூடப்பழக்கங்களுக்கு எதிராக இயக்கம் கண்டு இந்தியாவிற்கே முன்மாதிரியாகத் திகழ்ந்த தமிழகம், ஜெயாவால், அவரது விசுவாசக் கூட்டத்தால் அவமானப்பட்டு, கேவலப்பட்டு நிற்கிறது.

எம்.ஜி.ஆர். மூகாம்பிகை கோவிலுக்குத் தங்க வாளைக் காணிக்கை செலுத்தித் தொடங்கி வைத்த இந்த அருவருக்கத்தக்க பார்ப்பன மூடப் பண்பாட்டை, இழிந்த, உச்சநிலைக்கு எடுத்துச் சென்றார் ஜெயா. சுயமரியாதை அரசியலைப் பேசிவந்த தமிழகத்தில், அதற்கு எதிரான அடிமைத்தனமும், மூடத்தனமும் மீண்டும் கோலோச்ச தொடங்கியதைத்தான், தமிழகத்தில் மீண்டும் ஆன்மீகம் தழைக்கத் தொடங்கி விட்டது எனவும், தமிழகம் தேசிய நீரோட்டத்தோடு கலக்கத் தொடங்கிவிட்டது எனவும் குறிப்பிட்டுக் கொண்டாடுகிறது, ஆர்.எஸ்.எஸ்.

■ ரஹீம்

# வன்முறையே சட்டமாக... கொள்ளையே ஒழுங்காக...

**ஜெயாவின் மூன்று தவணை ஆட்சிகளில் அ.தி.மு.க. கும்பல் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு நடத்திய கிரிமினல் குற்றச் செயல்களைப் பட்டியல் இட்டால், அக்கட்சியைப் பயங்கரவாதக் கட்சி என்றே முத்திரை குத்த முடியும்.**

*“ஒன்றரைக் கோடி உறுப்பினர்களைக் கொண்ட பெரியதொரு அரசியல் கட்சிக்குத் தலைமை தாங்கிய ஜெயலலிதா, தன் மீது தொடரப்பட்ட வழக்குகளை முகாந்திரமாகக் கொண்டு, வன்முறையில் ஈடுபடக் கட்சியினரை நேரடியாகவோ, மறைமுகமாகவோ தூண்டியதில்லை.”* (புதிய தலைமுறை ஆசிரியர் மாலன், தினமணிக் கதிர், 11.12.2016)

*“அவரது ஆட்சியைப் பற்றி எத்தனையோ குறைகளைக் கூறலாம். ஆனால், ஜெயாவின் நிர்வாகத் திறமையும், அவரது ஆட்சிக் காலத்தில் காணப்பட்ட சட்டம்-ஒழுங்கு நிலையும், ..... பெண்மைக்குத் தரப்பட்ட மரியாதையும் பாதுகாப்பும் தமிழகம் உள்ளவரை நினைவுகூரப்படும்.”* (தினமணி தலையங்கத்தில்)

2011 தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் வென்று முதல்வர் நாற்காலியில் உட்கார்ந்தவுடனேயே, “தமிழகத்தில் இருந்த தாலி பறிக்கும் கொள்ளையர்கள் அனைவரும் ஆந்திராவிற்குத் தப்பிச் சென்றுவிட்டதாக”த் தடாலடியாக அறிவித்தார், ஜெயா. இதன் மூலம் தனது வருகையே, இருப்பே சமூக விரோதக் கும்பலுக்குக் கிலி ஏற்படுத்திவிட்டதாகக் காட்டிக் கொண்டார், அவர்.

ஆனால், கடந்த ஐந்தாண்டில், 2016 சட்டமன்றத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பு வரை, தமிழகத்தில் 7,630 கொலைகளும், 8,119 கொள்ளைச் சம்பவங்களும், 11,245 கொலை முயற்சிகளும் நடந்துள்ளன.

பெண்களின் பாதுகாப்போ, தினமணி தலையங்கத்தில் மெச்சிப் பாராட்டியிருப்பதற்கு நேர்மாறாக, 3,360 பாலியல் வன்முறைகளும், 6,431 பெண் கடத்தல் சம்பவங்களும் நடந்து, பெண்கள் அச்சத்தோடுதான் தெருவில் இறங்கி நடமாட வேண்டிய சூழ்நிலை நிலவியது.

மணல் கொள்ளையைத் தடுக்க முயன்ற உள்ளூர் இளைஞர்கள் மட்டுமல்ல, போலீசு மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள்கூட மணல் கொள்ளை மாஃபியா கும்பலால் படுகொலை செய்யப்பட்டனர். கிரானைட் கொள்ளை, தாது மணல் கொள்ளையை அம்பலப்படுத்திய பல பேர் காணாமல் போனார்கள். ரியல் எஸ்டேட் தொழில் தகராறு, போட்டி காரணமாக நடுரோட்டில் படுகொலைகள் நடந்தன. இப்படித் தமிழகம் தொழில்முறை கிரிமினல் மாஃபியா கும்பலின் களமாக மாறிப் போயுள்ள சூழ்நிலையில், ஜெயா ஆட்சியில் சட்டம்-ஒழுங்கு சிறப்பாகவும், தமிழகம் அமைதிப் பூங்காவாகவும் இருந்ததாகப் பச்சைப் பொய்யை எழுதுவதற்கு தினமணி கூச்சப்பட்டதாகத் தெரியவில்லை.

இதனைவிடப் பெரிய பொய் அ.தி.மு.க.வை அகிம்சாமூர்த்திகளாகப் பாராட்டும் பத்திரிகையாளர் மாலனின் புகழாரம். தமிழகத்தில் எப்பொழுதெல்லாம் அ.தி.மு.க. ஆட்சியைக் கைப்பற்றியிருக்கிறதோ, அப்பொழுதெல்லாம், அக்கட்சியும், முதலமைச்சர் ஜெயா தொடங்கி உள்ளூர் கவுன்சிலர் வரையிலான அக்கட்சியின் அதிகாரப் பிரதிநிதிகளும் நேரடியாகவும் வெளிப்படையாகவும் சட்டத்தின் ஆட்சிக்கே சவாலாக இருந்தனர் என்பதும், அந்த வகையில் சட்டவிரோத கிரிமினல் மாஃபியா கும்பலைவிட அ.தி.மு.க. அபாயகரமானதாக இருந்தது, இருந்து வருகிறது என்பதும் தான் உண்மை.

**ஸ்பிக் நிறுவனப் பங்குகள் விற்பனை ஊழல் வழக்கில் ஜெயாவிற்கு எதிராகக் கோப்பில் குறிப்புகள் எழுதியதற்காக ஆசிட் வீசித் தாக்கப்பட்ட நிலையில் முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி சந்திரலேகா.** (கோப்புப் படம், நன்றி: நக்கீரன்)



பத்திரிகையாளர் மாலன் அ.தி.மு.க. வன்முறையை ஆராதிக்கும் கட்சி அல்ல என்ற தனது புகழாரத்தில் அ.தி.மு.க.வினரால் மூன்று கல்லூரி மாணவிகள் எரித்துக் கொல்லப்பட்ட வன்முறைச் சம்பவத்தை விதி விலக்கு எனக் குறிப்பிடுகிறார். ஆனால், தன்னை எதிர்ப்பவர்கள், எதிர்க்கட்சிகள் மீது வன்முறையை ஏவிவிடுவதுதான் ஜெயா வகுத்த விதியாக இருந்தது. ஜெயாவின் மூன்று தவணை ஆட்சிகளில் அ.தி.மு.க. கும்பல் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு நடத்திய வன்முறைகளை, கிரிமினல் குற்றச் செயல்களைப் பட்டியல் இட்டுப் பாருங்கள், அக்கட்சியைப் பயங்கரவாதக் கட்சி என்று குற்றஞ்சுமத்த, யாரும் தயங்கவே மாட்டார்கள்.

ஜெயா, முதல் முறையாகத் தமிழகத்தின் முதல் அமைச்சராக மே,1991-இல் பதவியேற்றார். அவர் முதலமைச்சராகிய அடுத்த மூன்றாவது மாதத்திலேயே ''தராசு'' வார இதழ் அலுவலகம் மீது அ.தி.மு.க. கும்பல் கொலை ஆயுதங்களைக் கொண்டு நடத்திய வன்முறைத் தாக்குதலில், அப்பத்திரிகையைச் சேர்ந்த இரண்டு ஊழியர்கள் கத்திக் குத்துப்பட்டு இறந்து போனார்கள்.

மே 19, 1992 அன்று பட்டப்பகலில் ஐ.ஏ.எஸ். அதிகாரியான சந்திரலேகா மீது ஆசிட் வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலில் அவரது முகம், கழுத்து மற்றும் கைகள் வெந்து போயின. இத்தாக்குதல் நடந்தபோது, அவர் தமிழக வரலாற்று ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவராக இருந்தார். ஜெயா சம்பந்தப்பட்டிருந்த ஸ்பிக் பங்குகள் விற்பனை ஊழல் தொடர்பான கோப்புகளில், சந்திரலேகா ஜெயாவிற்கு எதிராகக் குறிப்புகளை எழுதியிருந்தார் என்ற காரணத்திற்காகவே, அதற்குப் பழி தீர்த்துக் கொள்ளும் வெறியோடு அவர் மீது ஆசிட் வீசப்பட்டது என்பது பின்னர் அம்பலமானது.

இந்த இரண்டு தாக்குதலுக்கும் இடைப்பட்ட காலத்தில், அப்பொழுது மைய அமைச்சராக இருந்த ப.சிதம்பரம் திருச்சி விமான நிலையத்திலிருந்து வெளியே வந்த சமயத்தில், அவர் பயணம் செய்த காரின் மீது கற்கள், தடிகள், இரும்புக் கம்பிகளைக் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. ப.சிதம்பரத்தின் மீது தாக்குதலை நடத்திய வன்முறைக் கும்பலுக்கு அ.தி.மு.க.வைச் சேர்ந்த நான்கு எம்.எல்.ஏ.க்கள் தளபதிகளாகச் செயல்பட்டனர்.

ஜெயா-சசி கும்பல் தமிழக அரசுக்குச் சொந்தமான டான்சி நிறுவன நிலத்தை அடிமாட்டு விலையில், அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி வளைத்துப் போட்டது அம்பலமான நிலையில், அவர்கள் மீது இந்தியக் குற்றவியல் தண்டனைச் சட்டம் 169-ஆவது பிரிவின் கீழ் வழக்குத் தொடரும் மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார், தி.மு.க. வழக்குரைஞர் சண்முகசுந்தரம். இதையடுத்து அவரது அலுவலகத்தில் புகுந்த ரவுடிக் கும்பல், ''அம்மா மீதே வழக்குத் தொடரும் தைரியமா உனக்கு?'' எனக் கேட்டபடியே, கத்தி, இரும்புக் கம்பிகளைக் கொண்டு அவரைத் தாக்கி, குற்றுயிரும் குலையுயிருமாகச் சிதைத்துப் போட்டது. உடம்பின் பல இடங்களில் எலும்பு முறிவு ஏற்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த அவரை எப்படியாவது கொன்றுவிடத் திட்டம் தீட்டிய அ.தி.மு.க. கும்பல், அந்த மருத்துவமனையின் மின் இணைப்பைத் துண்டித்தது.

ஜெயா ஆட்சியின் ஊழல்களையும், வன்முறைகளையும் அம்பலப்படுத்தி எழுதி வந்த நக்கீரன் இதழின் பிரிண்டர் கணேசன் அய்யா போலீசு நிலையத்திற்குத் தூக்கிச் செல்லப்பட்டு, போலீசாரல் சித்திரவதை செய்யப்பட்டார். இச்சித்திரவதை நடந்த இரண்டு, மூன்று நாட்களிலேயே உடல் நலிவுற்று இறந்துபோனார் அவர்.

ஜெயா மீது ஊழல் வழக்குத் தொடரவேண்டுமென்று நீதிமன்றத்தில் மனு போட்டதற்காக அ.தி.மு.க. ரவுடிகளால் தாக்கப்பட்டு உயிருக்குப் போராடும் நிலையில் தி.மு.க. வழக்குரைஞர் சண்முகசுந்தரம். (கோப்புப் படம்)



எதிர்க் கட்சியினர், பத்திரிகைகள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மட்டுமல்ல, அச்சமயத்தில் தமிழக ஆளுநராக இருந்த சென்னா ரெட்டி, தலைமைத் தேர்தல் அதிகாரியாக இருந்த சேஷன் மற்றும் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிகளுக்கு எதிராகவும் ஜெயா-சசி கும்பல் வன்முறைகளையும் மிரட்டல்களையும் ஏவிவிட்டது.

ஜெயலலிதா மீது சொத்துக்குவிப்பு வழக்குத் தொடர சுப்பிரமணிய சுவாமிக்கு அனுமதி தந்து உத்தரவளித்தார், ஆளுநர் சென்னா ரெட்டி. இதற்குப் பாடம் கற்பிக்கும் முகமாக, சென்னா ரெட்டி புதுச்சேரிக்கு சென்று கொண்டிருந்த வழியில் திண்டிவனம் அருகே வழிமறித்த அ.தி.மு.க. கும்பல், அவர் காரின் மீது கற்களையும் செருப்புகளையும் வீசியெறிந்து தாக்குதல் தொடுத்




**சொத்துக் குவிப்பு வழக்கை சட்டப்படியும் நேர்மையாகவும் நடத்தியதால், ஜெயா-சசி கும்பலால் அவதூறு செய்யப்பட்டு மன உளைச்சலுக்கு ஆளாக்கப்பட்ட அவ்வழக்கின் முன்னாள் அரசு வழக்குரைஞர் பி.வி.ஆச்சார்யா மற்றும் அவ்வழக்கின் நீதிபதி மைக்கேல் டி குன்ஹா.** (கோப்புப் படங்கள்)

தது. சுப்பிரமணிய சுவாமி உரையாற்றிக் கொண்டிருந்த சென்னை பொதுக்கூட்டத்தில் ஆசிட் பல்புகளும், சோடா பாட்டில்களும் வீசப்பட்டன.

ஜெயா மீது சொத்துக்குவிப்பு வழக்குத் தொடர அனுமதியளித்த சென்னாரெட்டியின் உத்தரவு குறித்த வழக்கில், அந்த உத்தரவை ஏற்றுத் தீர்ப்பளித்த நீதிபதி சீனிவாசனின் வீட்டிற்கு மின் இணைப்பும், குடிநீர் விநியோகமும் நிறுத்தப்பட்டன.

நிலக்கரி இறக்குமதி ஊழல் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி அருணாச்சலத்தின் மருமகன் மீது கஞ்சா வழக்கைப் போட்டு, அந்நீதிபதியை மறைமுகமாக மிரட்டியதையடுத்து, அவர் விசாரணையிலிருந்து விலகிக் கொண்டார்.

சொத்துக்குவிப்பு வழக்கை விசாரித்து வந்த பெங்களூரு சிறப்பு நீதிமன்ற நீதிபதி மல்லிகார்ஜுனா மீதும், அவ்வழக்கின் அரசு வழக்குரைஞராக இருந்த பி.வி. ஆச்சார்யா மீதும அடுக்கடுக்காக அவதூறுகளையும் வழக்குகளையும் தொடுத்து, அவர்களுக்கு நெருக்கடி கொடுத்தது. இந்த மனரீதியான சித்திரவதைகளைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், அரசு வழக்குரைஞர் பி.வி. ஆச்சார்யா அவ்வழக்கிலிருந்து விலகிக் கொண்டார்.

ஜெயாவின் இரண்டாவது தவணை ஆட்சியில், தி.மு.க. சென்னையில் நடத்திய ஊர்வலத்தைக் கலைப்பதற்காக, அயோத்திகுப்பம் வீரமணியைப் பயன்படுத்திக் கொண்டது அவரது அரசு. கடற்கரைச் சாலையில் ஊர்வலம் சென்றபோது, ரவுடி வீரமணி கும்பல் கற்களை வீசித் தாக்கி மோதலை ஏற்படுத்தியது. இதனைச் சாக்கிட்டு போலீசும், வீரமணி கும்பலும் கூட்டாகச் சேர்ந்து கொண்டு தி.மு.க.வினரையும் பத்திரிகையாளர்களையும் ஓட ஓட விரட்டி அடித்தனர். ஒரு பெண்ணின் ஆட்சியில் நடந்த இந்தத் தாக்குதலின் போது, பெண் பத்திரிகையாளர்களைக்கூட போலீசு விட்டு வைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அவரது மூன்றாவது தவணை ஆட்சியின்போது, சொத்துக்குவிப்பு வழக்கில் நீதிபதி குன்ஹா அளித்த தீர்ப்பால் ஜெயா தண்டிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டபோது, அ.தி.மு.க.வினர் சட்டம்-ஒழுங்கை, பொதுமக்களின் பாதுகாப்பை, நீதித்துறையை எந்தளவிற்கு மதித்து நடந்து கொண்டனர் என்பது உலகமே காறி உமிழ்ந்த ஒன்று.

அ.தி.மு.க. கும்பல் நடத்திய அத்துணை ரவுடித்தனங்களுக்கும் தமிழக போலீசு உடந்தையாக இருந்தது என்பது மட்டுமல்ல, ஜெயாவின் ஆட்சியில் போலீசும் உளவுத் துறையும் போயசு தோட்டத்தின் கூலிப்படையாகவே நடந்து கொண்டன. தி.மு.க. தலைவர் கருணாநிதியை வீடு புகுந்து கைது செய்தபொழுது, தமிழக போலீசும் உயர் அதிகாரிகளும் ஆடிய ஆட்டமும்; ஜெயாவின் வளர்ப்பு மகன் சுதாகரன், சசிகலாவின் கணவர் நடராஜனின் தோழி செரீனா, ஜெயாவின் ஆடிட்டராக இருந்த பாஸ்கரன் உள்ளிட்டோர் மீது தமிழக போலீசு போட்ட கஞ்சா வழக்குகளும் அத்துறை ஜெயாவின் ஏவல் நாய் என்பதைத் தமிழகத்திற்கே புரிய வைத்தன.

கட்சிக்காரர்களை வேவு பார்ப்பது தொடங்கி, அவர்கள் மேலிடத்திற்குத் தெரியாமல் பதுக்கி வைத்த சொத்துக்களைக் கைப்பற்றி போயசு தோட்டத்தில் ஒப்படைப்பது வரை ஜெயாவிற்கு அனைத்துமாக இருந்து சேவை செய்தது, தமிழக போலீசு. இந்த விசுவாசம் காரணமாக, போலீசுக்கு சலுகைக்கு மேல் சலுகையாக வாரி வழங்கி, அதனை வளர்த்துவிட்டார். பெருந்தீனி தின்று கொழுத்துப் போன பங்களா நாய் சும்மா இருக்குமா? பொய் வழக்குகள், கொட்டடிக் கொலைகள், சித்திரவதைகள், பாலியல் வன்கொடுமைகள் உள்ளிட்ட போலீசின் அட்டூழியங்களும், மனித உரிமை மீறல்களும் அவரது ஆட்சியில் பல மடங்கு அதிகரித்ததோடு, தமிழகத்தின் பாளையக்காரனாகவும் போலீசு நடந்து கொண்டது.

கொடியங்குளத்தில் தாழ்த்தப்பட்டோர் மீது கொடூரமான தாக்குதலை நடத்திய போலீசு, அம்மக்கள் குடிநீருக்காகப் பயன்படுத்தும் கிணற்றில் விஷத்தைக் கலந்தது. இந்த அட்டூழியம் நடந்த சமயத்தில் முதல்வராக இருந்த ஜெயாவோ, தனது வளர்ப்பு மகனின் ஆடம்பர திருமண தயாரிப்புகளில் மூழ்கிப் போயிருந்தார். பரமக்குடியில் தாழ்த்தப்பட்டோர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டைச் சட்டமன்றத்திலேயே ஆதரித்துப் பேசினார், அவர்.

இவை அனைத்தும் கால்தூசு என்பது போல, அரசியல் சாசனத்திற்கே பெப்பே காட்டியவர்தான் புரட்சித்

தலைவி; எவையெல்லாம் புனிதமாகக் கூறப்படு கிறதோ, அவற்றின் டவு சரைக் கழட்டி, அம்மண மாக்கியவர்தான் அம்மா.

சட்டமன்றத்தில் சபா நாயகர் இருக்கையில், சபா நாயகரைத் தவிர வேறு யாரும் அமரக்கூடாது என்பது மரபு. அந்த மர பைத் துச்சமாகத் தூக்கிப் போட்டு, அந்த இருக்கை யில் தான் அமர்ந்தும், சட் டமன்ற உறுப்பினரே அல் லாத சசிகலாவைத் துணை சபாநாயகர் இருக்கையில் உட்கார வைத்தும் சட்ட மன்றத்தை போயசு தோட் டமாக்கினார்.


சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயா-சசி கும்பல் தண்டிக்கப்பட்டதையடுத்து, அ.தி.மு.க. காலி கள் நடத்திய வன்முறை வெறியாட்டத்தில் காஞ்சிபுரத்தில் எரிக்கப்பட்ட அரசுப் பேருந்து. (கோப்புப் படம்)

2001 தமிழகச் சட்ட மன்றத் தேர்தல் அறிவிப்பு கள் வந்த சமயத்தில், ஜெயா, பிளஸண்ட் ஸ்டே விடுதி வழக்கிலும், டான்சி ஊழல் வழக்கிலும் தண்டிக்கப் பட்டு, தேர்தலில் போட்டியிடும் தகுதியை இழந்திருந் தார். ஆனால், தண்டிக்கப்பட்ட குற்றவாளி என்ற உண் மையை மறைத்து இரண்டு சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்தார். ஜெயா வின் வேட்பு மனு தாக்கல் விவாதப் பொருள் ஆன நிலையில், மேலும் இரண்டு சட்டமன்றத் தொகுதி களுக்கு வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தார், ஜெயா.

ஒரு வேட்பாளர் இரண்டு தொகுதிகளுக்கு மேல் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யக்கூடாதென்பது தேர் தல் விதி. அந்த விதியை மீறி அவர் நான்கு தொகுதி களுக்கு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ததற்குக் கார ணம், தண்டிக்கப்பட்ட குற்றவாளி என்ற அடிப்படை யில் தனது வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டு விடக் கூடாதென்ற கிரிமினல் தந்திரப் புத்தியாகும். அவர் போட்ட கணக்குப்படியே அவரது வேட்பு மனுக் கள் தள்ளுபடி செய்யப்பட்டன. எனினும், அப்போ திருந்த தி.மு.க. அரசுதான் சதி செய்து, ஜெயாவைப் போட்டியிட முடியாதவாறு செய்துவிட்டதாக ஜெயா வும் அவரது விசுவாசிகளும் கூசாமல் அவதூறுகளை அள்ளிவிட்டனர்.

அச்சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.விற்கு எதி ராக மெகா கூட்டணியை அமைத்திருந்த அ.தி.மு.க. வெற்றி பெற்று, ஆட்சியமைத்தது. தேர்தலில் போட்டி யிடும் தகுதியை இழந்திருந்த ஜெயா, அப்போதைய தமிழக ஆளுநராக பாத்திமா பீவியை விலைக்கு வாங்கி முதலமைச்சராகி, ஊழல் வழக்கில் தண்டிக் கப்பட்டிருந்த குற்றவாளி நாட்டை ஆளலாம் என்ற புரட்சியை நிகழ்த்திக் காட்டி, மரபு, சட்டம், அரசியல் சாசனம் என்ற புனிதங்களின் மீது சாணியைக் கரைத்து ஊற்றினார்.

இங்கே நாம் தொகுத்திருக்கும் ஜெயா-சசி கும்ப லின் கிரிமினல் குற்றச் செயல்கள் அனைத்தும் ஏதோ அநாதிக் காலத்தில் நடந்தவை அல்ல. கடந்த இருபத் தைந்து ஆண்டுகளில் தமிழக மக்களின் கண் முன்னே நடந்தவை. 1996 சட்டமன்றத் தேர்தல் மற்றும் 2004 நாடாளுமன்றத் தேர்தல்களில் அ.தி.மு.க.வைத் தமி ழக மக்களே ஓரங்கட்டித் தோற்கடித்தனர். 1996 சட்ட மன்றத் தேர்தலில் அ.தி.மு.க. மட்டுமல்ல, ஜெயாவும் தோற்கடிக்கப்பட்டதற்கு அவரது ஊழல், வக்கிர ஆட் சிதான் காரணமாக இருந்தது.

ஆனால், இவற்றையெல்லாம் திட்டமிட்டு மறைத்துவிட்டு, ஜெயாவை உன்னதத் தலைவியாகப் புகழந்து தள்ளுகின்றன, ஊடகங்கள். தமிழக மக்களும் பழசையெல்லாம் மறந்துவிட்டு, தமக்கேயுரிய இரக்க குணம் காரணமாக,ஊடகங்களின் பொய்யுரைக்குத் தலையாட்டுகிறார்கள்.

ஜெயலலிதா மீது ஒன்பது ஊழல் வழக்குகள் பதி யப்பட்ட பிறகு, ஒரு பொட்டு நகைகூட அணியாமல் தனது தோற்றத்தை எளிமையாக மாற்றிக்கொண்ட அவர், ஒரு பொதுக்கூட்டத்தில் உரையாற்றிக் கொண் டிருந்தபோது, அவரை நகைநட்டு இல்லாமல் பார்த்த பெண்கள், ‘‘அந்தப் படுபாவி (கருணாநிதி) எல்லாத் தையும் புடுங்கி வெச்சுக்கிட்டாராமில்லே’’ எனப் பேசிக் கொண்டதாகத் தனது அஞ்சலியில் பதிவு செய் கிறார், பத்திரிகையாளர் வாஸந்தி. பொதுமக்களிடம் காணப்படும் இந்தப் பாமரத்தனம்தான், ஒரு கிரிமினல் மாஃபியா தலைவியைத் தமிழகத்தின் அம்மாவாகத் திணிப்பதற்கான அடிப்படையைத் தருகிறது.

■ குப்பன்

# ஜெயாவின் ஈழத்தாய் அவதாரம்:
# ஆடு நனைகிறதே என அழுத ஓநாய்!

**சனாதன தர்மத்தைத் தூக்கிப் பிடிக்கும் ஆர்.எஸ்.எஸ்., தாழ்த்தப்பட்டோருக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பது எப்படிப்பட்ட மோசடியோ, அதற்கு இணையானது ஜெயாவின் ஈழத் தாய் அவதாரம்.**

*“ஜெயலலிதாவோ மாநிலத்தின் உரிமைகளுக்கும் நலன்களுக்கும் முன்னுரிமை அளித்து, அதன் அடிப்படையிலேயே மத்திய - மாநில உறவின் தன்மையை வகுத்துக் கொண்டார்.”* (துக்ளக், 21.12.16)

*“நமது அரசியல் விமர்சன உலகம் அவரைப் பற்றி எதிர்மறையாகவே அதிகம் பேசியிருக்கிறது. ஆனால், அவரது மிக முக்கியமான சில பங்களிப்புகளையும் நாம் பேச வேண்டும். .... 2009 ஈழ இனப் படுகொலைக்குப் பிறகு ஈழம் தொடர்பான விவகாரங்களில் ஜெயலலிதா வழக்கத்துக்கு மாறான நிலைப்பாடுகளை எடுத்து ஆச்சரியப் படுத்தினார்..... டெல்லியை நோக்கிச் சவாலான ஒரு பார்வையை வீசியதிலும், நீ மகாராஜா என்றால், நான் மகாராணி என்று அட்டகாசமாகச் சிரிப்பதிலும், பல மாநில முதல்வர்களிடையே, மற்ற பல தமிழக முதல்வர்கள் உட்பட, அவர் வித்தியாசப்பட்டுதான் இருந்தார் என்பதை உறுதியாகச் சொல்ல முடியும்”* எனக் குறிப்பிடுகிறார், இடதுசாரி எழுத்தாளர் ஆழி.செந்தில்நாதன்.

ஜெயாவைப் படிப்பாளி, தைரியசாலி, சிறந்த நிர்வாகி எனப் புகழுவதைவிட அருவருப்பு நிறைந்தது அவரை ஈழத் தாயாக, மாநில உரிமைப் போராளியாகத் துதிப்பது. ஜெயாவை, அ.தி.மு.க. அடிமைக் கூட்டம் தமிழகத்தின் அம்மாவாக முன்னிறுத்தியது என்றால், பழ.நெடுமாறன், தமிழருவி மணியன், சீமான், வை.கோ., உள்ளிட்ட தமிழின பிழைப்புவாதக் கூட்டம்தான் ஜெயாவை, ஈழத் தாயாகத் தூக்கி நிறுத்தியது.

1993-இல் காவிரி நதி நீர்ப் பிரச்சினையையொட்டி ஜெயா நடத்திய உண்ணாவிரத அரசியல். (கோப்புப் படம்)



ஜெயாவின் கடந்த கால ஈழ எதிர்ப்பு, புலி எதிர்ப்பு அரசியல் பற்றியோ, “போர் என்றால் மக்கள் சாகத்தான் செய்வார்கள்” என ஈவு இரக்கமின்றி சிங்கள இராணுவத்தின் போர்க் குற்றங்களை ஜெயா நியாயப்படுத்தியதையோ தமிழினவாதிகள் சட்டை செய்யவில்லை. தி.மு.க.-காங்கிரசு கூட்டணியைத் தோற்கடிக்கும் அரசியல் நோக்கத்திற்காக, “இலை மலர்ந்தால் ஈழம் மலரும்” என நாக்கூசாத புளுகுணிப் பிரச்சாரத்தை நடத்தினார்கள், அவர்கள்.

மூவர் தூக்கு தண்டனை மற்றும் எழுவர் விடுதலை விவகாரங்களில் ஜெயா தமிழின உணர்வோ அல்லது கருணை உணர்வோ உந்தப்பட்டு நடவடிக்கை எடுக்கவில்லை. இப்பிரச்சினைகளில் தமிழகம் தழுவிய எழுந்த ஆதரவைத் தனது அரசியல் இலாபத்திற்குப் பயன்படுத்திக் கொண்டார் என்பதே உண்மை.

பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவரின் தூக்கு தண்டனையை நிறைவேற்றுவதற்கான காலக்கெடு நெருங்கி வந்த நேரத்தில் தமிழகத்தின் மாணவர்களும், வழக்குரைஞர்களும் அவர்களின் தூக்கு தண்டனை ரத்து செய்யக் கோரி தமிழகம் தழுவிய அளவில் கிளர்ச்சியில் இறங்கினர். தமிழக மக்களின் அரசியல் உணர்வே அக்கோரிக்கைக்கு ஆதரவாக இருப்பதை இந்திய ஆளும் வர்க்கமும் உணர்ந்து கொண்டது. இது தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில், சென்னை உயர்நீதி மன்றம் தூக்கு தண்டனையை நிறைவேற்றுவதற்கு இடைக்காலத் தடை அளித்துவிடும் என உறுதியானவுடன்தான், அம்மூவரின் தூக்கு தண்டனையை ஆயுள்

தண்டனையாகக் குறைக்கக் கோரும் தீர்மானத்தைச் சட்டமன்றத்தில் நிறைவேற்றி, அரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தார், ஜெயா.

பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவரின் தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கின்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்பும் இச்சமயத்தில் வெளிவந்தது. இதனைச் சாதகமாக்கிக் கொண்ட ஜெயா, அம்மூவர் உள்ளிட்டு ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 7 பேரையும் விடுதலை செய்ய இருப்பதாகவும், மூன்று நாட்களுக்குள் மத்திய அரசு தனது கருத்தைத் தெரிவிக்கத் தவறினால், அவர்களைத் தமிழக அரசு விடுவித்துவிடும் என்ற அதிரடி அறிவிப்பை வெளியிட்டார்.

2014 நாடாளுமன்றத் தேர்தல் சமயத்தில்தான், இலங்கையின் மீது பொருளாதாரத் தடை விதிப்பது, ஈழத்தில் பொது வாக்கெடுப்பது நடத்துவது உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து சட்டமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றினார்.

ஒரு காகிதம் என்பதற்கு மேல் வேறு எந்த மதிப்பையும் இத்தீர்மானத்திற்கு மைய அரசு தரப் போவதில்லை எனத் தெரிந்தும், அத்தீர்மானத்தை இந்திய வெளியுறவுக் கொள்கைக்கு விடப்பட்ட சவாலைப் போல முறுக்கேற்றினார்கள் தமிழினவாதிகள். இந்த பில்ட்-அப் அவர்களின் நேர்மையின்மையை மட்டும் காட்டவில்லை. தமது சொந்த முயற்சியில் மக்களைத் திரட்டி, செயலூக்கமிக்க போராட்டங்களை நடத்த முடியாமல், ஜெயாவின் முந்தானைக்குப் பின்னே மறைந்து கொள்ளும் அவர்களின் அரசியல் ஓட்டாண்டித்தனத்தையும் எடுத்துக் காட்டியது.

ஜெயாவின் திடீர் ஈழ ஆதரவை இந்தப் பின்னணியிலிருந்துதான் மதிப்பிட வேண்டும். சனாதன தர்மத்தைத் தூக்கிப் பிடிக்கும் ஆர்.எஸ்.எஸ்., தாழ்த்தப்பட்டோருக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பது எப்படிப்பட்ட மோசடியோ, அதற்கு இணையானது ஜெயாவின் ஈழத் தாய் அவதாரம். ஈழ ஆதரவு, ஈழ எதிர்ப்பு இரண்டையுமே தனது சுயநல அரசியல் இலாபத்துக்காகப் பயன்படுத்தத் தயங்காதவர்தான் ஜெயா.

1989-இல் நடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் வென்று ஆட்சியைப் பிடித்த தி.மு.க. அரசை, அப்பொழுது நடந்த பத்மநாபா கொலையைக் காரணமாக வைத்து, புலி பீதியூட்டி, மைய அரசைப் பயன்படுத்திக் கலைக்கச் செய்தவர்தான் ஜெயா.

1991, மே மாதத்தில் ராஜீவ் கொலைக்குப் பிறகு நடந்த தமிழக சட்டமன்றத் தேர்தலின்பொழுது, அக்கொலையில் தி.மு.க.விற்கும் பங்குண்டு என அபாண்டமாகப் பழிபோட்டும், ஈழ எதிர்ப்பு அரசியலை முன்னிலைப்படுத்தியும், ராஜீவ் கொலை அனுதாப அலையைப் பயன்படுத்தியும் ஆட்சியைப் பிடித்தார், ஜெயா. அதன் பிறகு, ஈழ ஆதரவு, தமிழின ஆதரவு கருத்துக்களைக்கூடப் பேச முடியாதபடி தடா சட்டத்தை ஏவி, பயங்கரவாத ஆட்சியை நடத்தினார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செய்தித் தொடர்பாளர் தமிழ்ச் செல்வன் கொல்லப்பட்டதற்கு இரங்கற்பா எழுதிய கருணாநிதியைச் சாடியும், நளினிக்கு விதிக்கப்பட்டிருந்த தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்த தி.மு.க. அரசை எதிர்த்தும், நோய்வாய்ப்பட்டிருந்த தனது தந்தையைப் பார்க்க தனக்கு பரோல் வழங்குமாறு நளினி கோரியதை ஏற்க மறுத்தும் ஈழ எதிர்ப்பு, புலி எதிர்ப்பு அரசியலை நடத்திவந்த ஜெயாவை ஈழத் தாய் எனத் துதிப்பது, அவரது ஊழல், கிரிமினல் குற்றங்களை மறைப்பதைவிட ஆபத்தானது.

மூவர் தூக்கு தண்டனை
மற்றும் எழுவர் விடுதலை
விவகாரங்களில்
தமிழின உணர்வோ
அல்லது
கருணை உணர்வோ உந்தப்பட்டு
ஜெயா
நடவடிக்கை எடுக்கவில்லை.
இப்பிரச்சினைகளில்
தமிழகம் தழுவிய அளவில் எழுந்த
ஆதரவைத் தனது அரசியல் இலாபத்திற்குப்
பயன்படுத்திக் கோண்டார்
என்பதே உண்மை.



ஈரோடு மாவட்டம், சென்னிமலைக்கு அருகிலுள்ள சிறுகளஞ்சி கிராமத்தில் கெயில் குழாய்களைப் பதிப்பதற்காக இறக்கிவிடப்பட்ட போலீசு பட்டாளம். (கோப்புப் படம்)



கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிப்பது போல நடித்த ஜெயா, சங்கரன் கோவில் இடைத்தேர்தல் முடிந்த கையோடு, போராடிய மக்கள் மீது போலீசு அடக்குமுறையை ஏவிவிட்டதோடு, தேசத் துரோகச் சட்டத்தின் கீழ் வழக்கும் தொடுத்தார்.

விளைநிலங்களில் கெயில் குழாய் பதிக்கப்படுவதை எதிர்த்துப் போராடிய மேற்கு மாவட்ட விவசாயிகள் மீது போலீசை ஏவிவிட்ட ஜெயாதான், 2014 நாடாளுமன்றத் தேர்தலையொட்டி அக்குழாய் பதிப்பிற்குத் தடை போட்டார். அந்தத் தடையை உச்சநீதி மன்றம் ரத்து செய்துவிடும் என்பதெல்லாம் அவருக்குத் தெரியாத விசயமல்ல. இப்பொழுது அதுதான் நடந்திருக்கிறது.

69 சதவீத இட ஒதுக்கீடு சட்டத்தைக் கொண்டுவந்த ஜெயாதான், அரசுப் பணிகளுக்கு ஆளெடுப்புத் தடைச் சட்டத்தையும் கொண்டுவந்தார். இட ஒதுக்கீடின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் நலப் பணியாளர்களை, தி.மு.க. அரசு நியமித்தது என்ற ஒரே காரணத்திற்காக, ஒரேயொரு கையெழுத்து மூலம் வேலையை விட்டுத் தூக்கியடித்தார்.

தனது சுயநல அரசியல் இலாபத்திற்காக, எந்த எல்லை வரையும் செல்லக் கூடியவர்தான் ஜெயா. அவரது திடீர் ஈழ ஆதரவு, ஜி.எஸ்.டி. எதிர்ப்பு, நீட் தேர்வு எதிர்ப்பு நிலைப்பாடுகளின் பின்னே மறைந்துள்ள இந்தக் கபடத்தனத்தை அம்பலப்படுத்துவதற்குப் பதிலாக, “அவரது இந்த நிலைப்பாடுகளில் சந்தர்ப்பவாதம் இருப்பதை மறுக்க முடியாதுதான். ஆனாலும், செய்ய வேண்டிய நேரத்தில், செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யத் தவறியவர்களுக்கு மத்தியில், தன் எல்லைக்குட்பட்ட அளவிலேனும் தைரியமாகச் செய்ய முன்வந்த ஒருவரை நாம் எப்படிக் குறைத்து மதிப்பிடுவது” என வலிந்து எழுதி ஜெயாவிற்கு முட்டுக் கொடுக்கிறார், ஆழி.செந்தில்நாதன்.

இந்த வாதம் நரகலில் நல்லரிசி தேடச் சொல்லும் மோசடி. மேலும், செத்துப் போன பிறகும்கூட, ஜெயாவை விமர்சித்து எழுதாமல் பூசி மெழுகும் தமிழகத்து அறிவுஜீவிகளின் “துணிவையும்” பறைசாற்றுகிறது.

■ மணி

# மேட்டுக்குடி பார்ப்பன பொறுக்கி இங்கிலீஷ் பேசினால் படிப்பாளியாம்!

# பார்ப்பனக் கும்பலின் பித்தலாட்டம்

*“படப்பிடிப்பு நேரங்களில்கூட புத்தகமும் கையுமாக இருப்பார். அவரது வீட்டில் பிரமாதமான புத்தகங்கள் அடங்கிய நூல் நிலையம் இருக்கிறது என்பார்கள். அதனை அம்மா நூலகமாக மாற்றுங்கள்.”* (தமிழ் இந்துவில் வாசகர் கடிதம், 10.12.16)

காலனிய அடிமை மனோபாவம் காரணமாக, பட்லர் இங்கிலிஷ் பேசுபவனைக்கூட அறிவாளியாகப் பார்க்கும் மூடத்தனம் நமது நாட்டு நடுத்தர வர்க்கத்தின் பொதுப் புத்தியில் உறைந்து போயிருக்கிறது. இந்த ஒரு பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டே ஜெயாவைப் பெரிய படிப்பாளியாக தமிழக மக்களின் முன் நிறுத்தியிருக்கிறது, தமிழகத்துப் பார்ப்பனக் கும்பல்.

மேட்டுக்குடி குடும்பத்தில் பிறந்து, கான்வெண்டில் படிக்கும் பணக்கார குலக்கொழுந்துகள் போலவே ஜெயாவும் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசும் திறன் கொண்டிருந்தது வியப்பிற்குரிய விசயமல்ல. அது போல, ஒரு நடிகைக்குப் பல மொழிகள் பேசத் தெரிந்திருப்பதும் அதிசயமான விசயமல்ல. எனினும், இந்த உப்புப் பெறாத விசயத்தை வைத்துக்கொண்டு, மற்றவர்களுக்குக் கைவரப் பெறாத தனித்திறமை ஜெயாவிடம் இருப்பதைப் போலக் காட்டி, அவரை அதிபுத்திசாலியாகவும், புத்திகூர்மை மிக்கவராக வும் புகழந்து தள்ள முடியுமென்றால், ஆங்கிலம் உள்ளிட்டுப் பல மொழி களைப் பேசக் கூடிய டூரிஸ்டு கைடுகளைக்கூட அறிவாளிகளாக, பன்மொழிப் புலமை மிக்கவர்களாகக் கூறலாம்.

ஜெயா படிப்பாளி எனக் காட்டுவதற்கு ஊடகங்கள் உருவாக்கிய சான்று. (கோப்புப் படம்)



ஜெயாவின் அறிவுத் தரம் என்னவென்பதை அவரது ஆட்சியின் அலங்கோலங்களே எடுத்துக் காட்டுகின்றன. அவரிடம் வெளிப்பட்ட ஆணவ, பொறுக்கிப் பண்பாடோ தமிழகத்தையே கூசிப் போக வைத்தது. கட்சி தொடங்கி சட்டமன்றம் வரையிலான நிறுவனங்களைத் தனது துதி பாடும் பஜனை மடங்களாக மாற்றியதோடு, கட்சி உறுப்பினர் தொடங்கி அமைச்சர்கள், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் வரையிலான ஆட்சியாளர்களையும் காலில் விழ வைத்து ரசித்தார். அம்மா, அன்ன



ஜெயாவின் காழ்ப்புணர்ச்சின் காரணமாகப் புறக்கணிக்கப்பட்ட அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் காலியாக உள்ள புத்தக அலமாரிகள். (கோப்புப் படம்)



படிப்பாளி ஜெயா வளர்த்துவிட்ட அடிமைத்தனம் மற்றும் வக்கிரம்: ஜெயாவின் காலில் விழுந்து வணங்கும் ஓ.பி.எஸ். (கோப்புப் படம்)

லெட்சுமி, புரட்சித் தலைவி, நிரந்தர முதல்வர் என்றெல்லாம் பலவாறாகத் தன்னைப் பற்றி, தனது முகத்துக்கு நேராக எடுபிடிகளும் விசுவசாசிகளும் புகழ்ந்து தள்ளுவதை சிரித்தபடியே ரசிக்கும் வக்கிர மனோபாவத்தைத்தான் சாகும் வரையிலும் வெளிப்படுத்தினார்.

தனது எடுபிடிகள் தன்னைப் புகழுவதை மட்டுமல்ல, எதிர்த்தரப்பு குறித்து அக்கும்பல் கொச்சையாக வசைபாடுவதையும்கூட ரசித்து மகிழும் கேவலமான குரூர புத்தியைக் கொண்டிருந்தார். குறிப்பாக, தி.மு.க. தலைவர் கருணாநிதியை, அவரது சாதியைச் சொல்லிக் கேவலப்படுத்திச் சட்டமன்றத்திலேயே வளர்மதி பேசியதை ரசித்து, ''நயத்தக்க நாகரிகத்தை வெளிப்படுத்திய பண்பாளர்தான்'' ஜெயா. வளர்மதியே பரவாயில்லை என நினைக்கும் அளவிற்கு, தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தைக் குடிகாரன் எனச் சட்டமன்றத்திலேயே கேவலப்படுத்திப் பேசியவர்தான் ஜெயா.

போயசு தோட்டத்திலிருந்து சட்டமன்றத்திற்குப் போனாலும், பொதுக்கூட்டங்களுக்குச் சென்றாலும், தனக்காக மக்களின் நடமாட்டத்தை, போக்குவரத்தை நிறுத்தி வைத்து, மக்கள் அனைவரையும் கிள்ளுக் கீரையாக நடத்தினார். செல்லும் வழியெங்கும் தனக்காக வைக்கப்படும் பிரம்மாண்ட கட்-அவுட்டு களை எண்ணிப் பார்த்து ரசித்தார். கடந்த சட்ட மன்றத் தேர்தலின் பொழுது அவர் உரையாற்றிய பொதுக்கூட்டங்களில் மக்கள் வெயிலில் வெந்து, நாவறண்டு செத்தபொழுது, மேடையில் தன்னைச் சுற்றி ஏழெட்டு ஏர்-கூலர்களை வைத்துக்கொண்டு மக்களை ஏளனம் செய்தார்.

பொய்யும் பித்தலாட்டமும் அவரோடு ஒட்டிப் பிறந்தவை. கருணாநிதி அரசு தன்னை லாரி ஏற்றிக் கொல்ல முயற்சித்ததாக ஒரு அனுதாப சீனை உருவாக்கினார். கவர்னர் சென்னாரெட்டி தன் கையைப் பிடித்து இழுத்ததாகக் கூச்சமின்றி ஒரு அவதூறை அவிழ்த்து விட்டார். 2016 சட்டமன்றத் தேர்தலின்போது தமிழகத்தை மின் மிகை மாநிலமாக மாற்றிவிட்டேன் என்றொரு அண்டப்புளுகை, மோசடியைப் பிரச்சாரமே செய்தார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, சென்னையில் அமைந்துள்ள அண்ணா நூற்றாண்டு நூலகம் தி.மு.க. ஆட்சியில் திட்டமிடப்பட்டுக் கட்டப்பட்டது என்பதாலும், தான் தலைமைச் செயலகம் கட்டத் திட்டமிட்டிருந்த இடத்தில் கருணாநிதி அண்ணா நூலகத்தைக் கட்டிவிட்டார் என்பதாலும், அந்த நூலகத்தைத் திருமண மண்டபமாக மாற்ற முயன்றார், ஜெயா. அவரது அந்தக் காழ்ப்புணர்ச்சி கொண்ட நோக்கத்தை சென்னை உயர் நீதி மன்றம் தடுத்தவுடன், அந்த நூலகத்தை முறையாகப் பராமரிக்காமல் படிப்படியாக அழியும் நிலைக்குத் தள்ளி வருகிறது அ.தி.மு.க. அரசு. தி.மு.க. அரசால் தொடங்கப்பட்ட செம்மொழி ஆராய்ச்சி நிறுவனத்தைக் குப்பைத் தொட்டியாகவே மாற்றிவிட்டது.

ஒரு சர்வாதிகாரிக்குரிய அதிகாரம் ஜெயாவிற்கு இருந்திருக்குமானால், யாழ்ப்பாணம் நூலகத்தைச் சிங்கள இன வெறியர்கள் எரித்துச் சாம்பலாக்கியதைப் போல, அண்ணா நூலகத்தைத் தரை மட்டமாக்கவும் தயங்கியிருக்கமாட்டார்.

பெண் கல்வியின் முக்கியத்துவம் குறித்துக் குரல் எழுப்பப்பட்டு வரும் சூழலில், ஜெயாவோ, தனது வசதிக்காக, சென்னையில் உள்ள இராணி மேரி பெண்கள் கல்லூரியை இடித்துவிட்டு, அங்கே புதிய தலைமைச் செயலகம் அமைக்கத் திட்டமிட்டார். இதனை எதிர்த்து அக்கல்லூரி மாணவிகள் உள்ளிருப்புப் போராட்டத்தை நடத்தத் தொடங்கினர். அப்போராட்டத்தில் முன்னணியில் நின்ற மாணவிகளின் வீடுகளைத் தேடிப் போன ஜெயா போலீசு, ''போராட்டத்திலிருந்து விலகவில்லை என்றால், உங்கள் மகள் மீது விபச்சார வழக்குப் போடுவோம்'' என மிரட்டியது. எப்பேர்பட்ட பண்பட்ட ஆட்சி!

உங்கள் நண்பர்களைச் சொல்லுங்கள், உங்களைப் பற்றிச் சொல்லுகிறோம் என்றொரு பழமொழி உண்டு. ஜெயாவிற்கும் சசிகலாவிற்கும் இடையேயான நெருக்கமான நட்பிற்கு அடித்தளம் போட்டது சினிமா வீடியோக்கள்தானேயொழிய, இலக்கிய ரசனை அல்ல. படிப்பாளி ஜெயா மறைந்துவிட்டார். வீடியோ சப்ளை செய்த வியாபாரி, தோழியாகி, போயசு தோட்டத்தின் நிர்வாகியாகி, அ.தி.மு.க.வின் தலைவியாகி, கோட்டைக்குள்ளும் நுழையக் காத்திருக்கிறார்!

■ பச்சையப்பன்

# ஊழலுக்காகவே ஆட்சி!

# - இதுதாண்டா ஜெயாவின் தனித்திறமை!!

**கட்சி, ஆட்சி மட்டுமின்றி, தமிழ் சமூகத்தையே ஊழலிலும் பிழைப்புவாதத்திலும் மூழ்கடித்ததில் புதிய எல்லைகளைத் தொட்டவர்தான் ஜெயா.**

*''நேர்மையான, திறமையான, தூய்மையான, ஒளிவுமறைவற்ற, மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட ஒரு நிர்வாகத்தை நான் கொடுப்பேன்.''* (ஜெயா தமிழக மக்களுக்கு அளித்த வாக்குறுதி - ஆனந்த விகடன், 14.12.16)

*''அரசு நிர்வாகத்தில் தெளிவான பார்வையும் புத்திக் கூர்மையும் கொண்டவராக ஜெயலலிதா இருந்தார். (அவரது மறைவு) நிர்வாகத் திறன் கொண்ட அரசாங்கத் தலைமைக்கான இடத்திலும் வெற்றிடத்தை உண்டாக்கியிருக்கிறது என்பதே உண்மை.''* (துக்ளக், 21.12.16)

ஜெயா என்றொரு தனி மனுஷி குறித்தும், அவரது ஆட்சி குறித்தும் தமிழகத்துப் பார்ப்பனக் கும்பலும், அ.தி.மு.க.வின் கூலிக்கார ஊடகங்களும் உருவாக்கி உலவ விட்டிருக்கும் பிம்பங்களுள் ஒன்று, ஜெயா மிகுந்த திறமைசாலி, சாட்டையைச் சொடுக்கி அதிகாரிகளிடம் வேலைவாங்கும் திறன் கொண்டவர், திறமை வாய்ந்த நிர்வாகத்தை அவர் மட்டுமே தர முடியும் என்பது. இந்தப் பிம்பத்தின் இன்னொரு புறத்தில் கருணாநிதியும், தி.மு.க. ஆட்சியும் திறனற்ற நிர்வாகத்தின் உருவாக முன்னிறுத்தப்பட்டனர்.

பார்ப்பான் புத்திசாலி, சூத்திரன் மூடன் என்ற மனுதர்மத்தின் நீட்சியாகவே தமிழக அரசியலில் ஜெயா குறித்து நேர்மறையான பிம்பமும் கருணாநிதி குறித்து எதிர்மறையான பிம்பமும் உருவாக்கப்பட்டு உலவ விடப்பட்டிருக்கிறது. பார்ப்பனக் கும்பலால் தூக்கி நிறுத்தப்பட்டு வரும் ஜெயாவின் திறமை, ஒரு வெத்துவேட்டு, மோசடி என்பதை நிரூபிப்பதற்குப் பெரிய பொருளாதார அறிவெல்லாம் தேவையில்லை. தமிழக மின்வாரியத்தின் இன்றைய பரிதாபகரமான நிலைமை ஒன்றே போதும்.

2011-இல் நடந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. தோற்று, அ.தி.மு.க. வெற்றிபெற்றதற்கு அப்போது நிலவிய மின் வெட்டு முக்கிய காரணமாய் இருந்தது. அம்மின்வெட்டுப் பிரச்சினையையும், தமிழக மின்சார வாரியம் அச்சமயத்தில் சுமார் 50,000 கோடி ரூபாய் கடனில் இருந்ததையும் கருணாநிதியின் திறமையற்ற நிர்வாகத்தின் விளைவாகக் காட்டினார், ''துக்ளக்'' சோ. ''தான் ஆட்சிக்கு வந்தால் மூன்றே மாதத்தில் மின்வெட்டுப் பிரச்சினையைத் தீர்த்து, தமிழகத்தை மின் மிகை மாநிலமாக மாற்றுவேன்'' என வாக்குறுதி அளித்தார், ஜெயா.

ஆனால், நடந்தது என்ன? ஒருபுறம், மின்வெட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வாய்தா வாங்கியே ஆட்சியை ஓட்டிய ஜெயா, இன்னொருபுறத்திலோ மின்சார வாரியத்தின் நட்டத்தைக் காட்டி மின் கட்டணத்தை இரு முறை உயர்த்தினார். மின் கட்டண உயர்வுக்கும் தனது அரசுக்கும் சம்மந்தமில்லை என்றும், மின்சார ஒழுங்குமுறை வாரியம்தான் அதற்குப் பொறுப்பேன்றும் நாடகமாடினார்.

ஜெயா ''திறமையாக''த் தமிழகத்தை மொட்டையடித்துக் குவித்த சொத்தின் சிறு பகுதி.
(கோப்புப் படம்)





மின்வெட்டுப் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கில் முந்தைய தி.மு.க. ஆட்சியில் (2006-11) தொடங்கப் பட்டிருந்த அரசு மின் திட்டங்களை உரிய காலத்தில் முடிக்காமல், காழ்ப்புணர்ச்சியோடு அவற்றைக் கிடப் பில்போட்டது மட்டுமின்றி, தனது ஆட்சியில் புதி தாக எந்தவொரு மின் திட்டமும் தொடங்கும் எண் ணமே இல்லாமல் நடந்து கொண்டார். தனியாரிடமி ருந்து அநியாய விலையில் மின்சாரத்தைக் கொள்முதல் செய்வது, அதில் கமிசன் அடிப்பது என்ற நோக்கத்திற் காகவே அரசு மின் திட்டங்களை முடக்கியது, அவரது அரசு. இந்தத் தனியார் மின் ஒப்பந்தங்கள் அனைத்தும் ஜெயா-சசி கும்பலுக்குப் பணங்காய்ச்சி மரங்களாக இருந்ததை அதானி சூரிய ஒளி மின் திட்டமும், உடன் குடி மின் திட்டமும் அம்பலப்படுத்தின. இதன் விளை வாக, தமிழக மின்சார வாரியம் எதிர்காலத்தில்கூட மீள முடியாத அளவிற்குக் கடுமையான நட்டத்தில் தள்ளப் பட்டது.

தி.மு.க. ஆட்சியில் 50,000 கோடி ரூபாயாக இருந்த தமிழக மின்சார வாரியத்தின் கடன் முந்தைய அ.தி.மு.க. ஆட்சியின் (2011-16) இறுதியில் ஒரு இலட் சம் கோடி ரூபாயாக அதிகரித்தது. தி.மு.க. ஆட்சியில் ஒரு இலட்சம் கோடி ரூபாயாக இருந்த தமிழக அரசின் கடன், முந்தைய அ.தி.மு.க. ஆட்சியின் இறுதியில் நான்கு இலட்சம் கோடி ரூபாயாக அதிகரித்தது. ஜெயா வின் ஆட்சியில் நடந்த ஊழல், கொள்ளை காரணமாக கடன் சுமை அதிகரித்துப் போனதை ''துக்ளக்'' சோ உள் ளிட்டு எந்தவொரு பார்ப்பன ஊடகமும் கண்டு கொள் ளவில்லை என்பதோடு, மீண்டும் தி.மு.க. ஆட்சியைப் பிடித்துவிடக் கூடாதென்ற நோக்கத்தில், தி.மு.க. பல மானதொரு கூட்டணியை அமைப்பதைத் தடுத்து, மக் கள் நலக் கூட்டணி என்ற ஐந்தாம் படையை உருவாக் கினார்கள்.

ஜெயாவின் ஆட்சியில் அரசும், அரசு நிறுவனங் களும் கடனிலும், நட்டத்திலும் மூழ்கிக் கொண்டிருந்த அதேவேளையில், ஜெயா-சசி கும்பலோ கண்டெய் னர், கண்டெய்னராகப் பணத்தைக் கடத்தியது. மின் துறை அமைச்சராக இருந்த நத்தம் விசுவநாதன் துபா யில் சொத்துக்களையும், இந்தோனேஷியாவில் நிலக் கிரி வயல்களையும் வாங்கிப் போட்டிருப்பதாகச் செய் திகள் வெளிவந்தன.

தமிழகத்தை அரைகுறையாக இல்லாமல், முழுதாக மொட்டையடிப்பது; அமைச்சர்கள் தொடங்கி கவுன் சிலர் வரை அடிக்கும் கொள்ளையில் உரிய பங்கை போயசு தோட்டத்தில் காணிக்கையாகச் செலுத்த வைப்பது; காணிக்கையைச் செலுத்தாமல் கம்பி நீட்டு பவர்களைக் கட்சியிலிருந்தும் பதவியிலிருந்தும் தூக்கி யெறிவது என்பதுதான் ஜெயாவின் தனித்திறமை.

ஊழல்தான் நிர்வாகம், நிர்வாகம்தான் ஊழல் என ஆட்சி முறைக்குப் புதிய பொழிப்புரை எழுதியவர் ஜெயா. ஜெயாவின் முதல் தவணை ஆட்சியில் தமி ழக அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை அபகரித் துக் கொண்டது தொடங்கி சுடுகாட்டு கொட்டகை போட காண்டிராக்டு விட்டது வரை ஊழலும், கொள் ளையும்தான் அரசின் செயல்பாடுகளாக இருந்தன. சிறு தாவூர், நீலாங்கரை தொடங்கி கோடநாடு முடிய கண் ணில் கண்ட நிலங்களெல்லாம் ஜெயா-சசி கும்பலால் வளைத்துப் போடப்பட்டன. அந்த ஐந்தாண்டு கால ஆட்சியில், அடித்த கொள்ளை எவ்வளவு என்பதை வளர்ப்பு மகன் சுதாகரன் திருமணம் எடுத்துக் காட்டி யது. அத்திருமண ஊர்வலத்தில் ஜெயாவும், சசிகலா குடும்பத்தினரும் கொஞ்சம்கூடக் கூச்சமின்றி, யாரும் எங்களைத் தட்டிக் கேட்க முடியாது என்ற திமிரோடும்,

**தமிழகத்தை முழுதாக மொட்டையடிப்பது; அமைச்சர்கள் தொடங்கி கவுன்சிலர் வரை அடிக்கும் கொள்ளையில் உரிய பங்கை காணிக்கையாகச் செலுத்த வைப்பது; காணிக்கையைச் செலுத்தாமல் கம்பி நீட்டுபவர்களைக் கட்சியிலிருந்தும் பதவியிலிருந்தும் தூக்கியெறிவது என்பதுதான் ஜெயாவின் தனித்திறமை.**

**ஜெயாவின் மூன்றாவது தவணை ஆட்சியில் ஐ.ஏ.எஸ். அதிகார வர்க்கம் ஒரு பெருங் கொள்ளைக் கூட்டமாகச் செயல்பட்டுவருவதை அம்பலப்படுத்தி, மக்கள் செய்தி மையம் என்ற அமைப்பால் வைக்கப்பட்ட விளம்பரத் தட்டி** (கோப்புப் படம்)





2011-16 ஆட்சிக் காலத்தில் ஜெயா-சசி கும்பல் ஊழல்கொள்ளை மூலம் சேர்த்த சொத்து எத்துணை ஆயிரம் கோடி என்பதை வெளியுலகுக்குக் காட்டிய கண்டெய்னர்கள். (கோப்புப் படம்)

கொழுப்போடும் தங்க நகைக் கடைகளாக நடந்து வந்தனர்.

ஜெயா-சசி கும்பல் அதிகாரத்தைப் பயன்படுத்திப் போட்ட ஆட்டத்தின் விளைவாகவே, அக்கும்பல் மீது சொத்துக்குவிப்பு வழக்கு உள்ளிட்டு டான்சி நில ஊழல் வழக்கு, பிளஸண்ட் ஸ்டே விடுதி ஊழல் வழக்கு, நிலக்கிரி இறக்குமதி ஊழல் வழக்கு, ஸ்பிக் பங்குகள் விற்பனை வழக்கு, அந்நியச் செலாவணி மோசடி வழக்கு என ஒன்பது ஊழல் வழக்குகள் தொடரப்பட்டன. ஜெயாவின் அமைச்சர்கள் மீது போடப்பட்ட வழக்குகளையும் சேர்த்துக் கொண்டால், 1991-96-இல் நடந்த ஜெயா ஆட்சியின் மீது தொடரப்பட்ட ஊழல், கிரிமினல் வழக்குகளின் எண்ணிக்கை 46.

அவரது மூன்றாவது தவணை ஆட்சியை (2011-16) 40 பர்செண்ட் ஆட்சி எனக் குற்றஞ்சுமத்திய பொதுப்பணித் துறை ஒப்பந்ததாரர்கள், அரசு நிர்வாகத்தில் யார் யாருக்கு எவ்வளவு கமிசன் செல்லுகிறது என்பதை அம்பலப்படுத்தி பிளக்ஸ் பேனரே வைத்தார்கள். அந்த அளவிற்கு அரசு திட்டங்களில் கையூட்டுப் பெறுவதில் புதிய சரித்திரத்தைப் படைத்தார், ஜெயா. இதற்கு அப்பால், உதவி செயற்பொறியாளர் முத்துக் குமாரசாமியின் தற்கொலையும், ஆவின் பால் கலப்பட ஊழலும், மணல் மற்றும் கிரானைட் கொள்ளைகளும், 2016 சட்டமன்றத் தேர்தல் சமயத்தில் அம்பலமான கண்டெய்னர் விவகாரமும், ஜெயாவால் தலைமைச் செயலராக நியமிக்கப்பட்ட ராம்மோகன் ராவ் வீட்டில் தற்பொழுது நடந்துள்ள வருமான வரிச் சோதனையும் ஜெயாவின் நிர்வாகத் திறமை என்னவென்பதை எடுத்துக் காட்டுகின்றன.

இந்த ஊழல்களின் வழியாக ஜெயாவின் திறமை என்னவென்பதைப் புரிந்துகொள்ள முடியாத பாமர மக்களுக்கும் உறைக்கும்படி சென்னை பெருவெள்ளம் அமைந்தது. பெருமழைக்கு முன்னதாகவே செம்பரம்பாக்கம் ஏரியைத் திறந்துவிடக் கோரிப் பொதுப்பணித் துறை பொறியாளர்கள் அனுப்பி வைத்த கோப்பை ஜெயா உதாசீனப்படுத்தியதன் விளைவு, சென்னை வெள்ளத்தில் மூழ்கியது. ரோம் நகரம் தீப்பற்றி எரிந்த பொழுது நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தானாம். சென்னை வெள்ளத்தில் மூழ்கியபோது ஜெயலலிதா எதை வாசித்துக் கொண்டிருந்தார் என்பதை வரலாறு இனி பதிவு செய்யலாம்.

இலட்சக்கணக்கான மக்கள் வீட்டை இழந்து, தொழிலை இழந்து, உடமைகளை இழந்து அநாதரவாகத் தெருக்களிலும், மொட்டை மாடிகளிலும் பரிதவித்து நின்றபோது, ஜெயா அவர்களை ஹெலிகாப்டர் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார்; தனது செருப்பு கூடத் தண்ணீரில் நனைந்துவிடாதபடி ஏ.சி. வேனில் குந்தியபடி நகர் வலம் வந்து, தனது ஆர்.கே.நகர் தொகுதி மக்களைப் பார்த்து, வாக்காளர்களே என ஏளனமாக அழைத்துவிட்டுப் போனார். ஜெயாவின் விசுவாசிகளோ, சோற்றுக்கும் குடிநீருக்கும் கையேந்தி நின்ற மக்களின் முகத்தில்கூட ஜெயாவின் ஸ்டிக்கரை ஒட்டிவிடக்கூடிய திமிருடன் அலைந்தனர்.

சீனாவில் ஊழல், கிரிமினல் குற்றங்களில் ஈடுபட்டு பிடிபடும் ஆளுங்கட்சியினர், அதிகாரிகளுக்குத் தூக்கு தண்டனை விதிக்கப்படுகிறது. பிரேசில் உள்ளிட்ட சில நாடுகளில் ஊழல் குற்றஞ்சாட்டப்பட்ட அதிபர்கள்கூட நாடாளுமன்ற வாக்கெடுப்பின் மூலம் பதவியிலிருந்து அப்புறப்படுத்தப்படுகின்றனர். ஆனால், இந்தியாவிலோ, ஊழல் குறித்து அதிகமாக சவுண்டுவிடும் பார்ப்பனக் கும்பல் ஜெயாவைக் காப்பாற்றிக் கைதூக்கிவிடுவதில் மட்டுமே அக்கறை கொள்கிறது.

***“பல்வேறு ஊழல் வழக்குகளை அவர் எதிர்கொண்டாலும், அவரது அரசியல் வாழ்க்கையை அவற்றால் முடக்க முடியவில்லை. ஏனெனில், பெரும்பான்மையான மக்கள் அவர் பக்கம் நின்றனர். குடும்பம் இல்லாத அவர் எதற்காக ஊழல் செய்து பணம் சேர்க்கப் போகிறார் என்பதே பெரும்பாலான மக்களின் எண்ணமாக இருந்தது”*** என எழுதி ஜெயாவை அனைத்துக் கிரிமினல் குற்றங்களில் இருந்தும் விடுவிக்கிறார், ஆர்.எஸ்.எஸ்.-ஐச் சேர்ந்தவரும் “துக்ளக்” இதழின் புதிய ஆசிரியருமான குருமூர்த்தி.

அடித்தட்டு மக்களிடம் மட்டுமல்ல, உலக விசயம் தெரிந்தவர்களாகத் தம்மைக் கருதிக் கொள்ளும் நடுத்தர வர்க்கத்திடமும் காணப்படும் அரசியல் பாமரத்தனமும் பிழைப்புவாதக் கண்ணோட்டமும்தான், ஜெயா தமிழகத்தின் அம்மாவாக அவதாரமெடுத்ததற்கான அடிப்படையை வழங்கியிருக்கிறது. தனக்காகத் தீச்சட்டி ஏந்தும் பாமரத் தமிழன் தொடங்கி உச்சநீதி மன்ற நீதிபதி முடிய அனைவரையும் விலைக்கு வாங்க முடியும் என்பதைத் தனது அரசியல் வாழ்க்கை நெடுகிலும் நிரூபித்திருக்கிறார், ஜெயா. தான், தனது கட்சி மட்டுமல்ல, சமூகத்தையே ஊழல்மயப்படுத்துவதில் மற்ற அரசியல் தலைவர்கள், ஓட்டுக்கட்சிகளைக் காட்டிலும் புதிய எல்லைகளைத் தொட்டவர்தான் ஜெயா. இதுதான் அவரது திறமை, இதுதான் அவர் நிகழ்த்திக் காட்டிய புரட்சி!

■ மாணிக்கம்

# ரவுடித்தனமே ஜெயாவின் துணிவு! பிச்சை போடுவதே ஜெயாவின் கருணை!!

**அலட்சியமும் மமதையும் தான்தோன்றித்தனங்களும் நிறைந்த ஜெயாவின் நடவடிக்கைகள் துணிச்சலானதாகவும், தமிழர்களின் போராட்டக் குணத்தை மழுங்கடித்துக் கையேந்திகளாக நிறுத்தப்பட்டதை அவரது கருணை எனவும் காட்டுகின்றன ஊடகங்கள்.**

***ஜெயா, அறிவில் அவ்வையார், துணிவில் ஜான்சி ராணி, அன்பில் அன்னை தெரசா!*** (தினமணி, மகளிர் மணி, 14.12.2016)

***ஜெயாவின் மனம் பொன்மனம் போன்றது.*** (நடிகர் ரஜினிகாந்த்)

***போயசு கார்டனில் இட்லி கடை நடத்த அனுமதித்த மகராசி!*** (இட்லிக் கடை நடத்தும் சரசுவதி, தமிழ் இந்து, 09.12.2016)

***துணிச்சலான அரசியல் நடவடிக்கைகளாலும், ஆட்சிக் காலங்களில் உறுதியோடு அவர் எடுத்த முடிவுகளாலும் இன்னும் பல்லாண்டு காலம் தமிழர்களால் நினைவுகூரப்படுவார்.*** (ஆனந்த விகடன், 14.12.2016)

**அன்பு, துணிவு – இந்த மனிதப் பண்புகளுக்கான வரையறை என்ன?**

1996-இல் நடந்த சட்டமன்றத் தேர்தல் சமயத்தில் ஜெயலலிதாவுக்கு எதிராகத் தான் அறிக்கை விட்டதைக்கூட மனதில் வைத்துக் கொள்ளாமல், எனது மகளின் திருமணத்திற்கு நேரில் வந்து வாழ்த்தினார் எனக் கூறுகிறார், ரஜினிகாந்த்.

போலீசாரிடம் என்னைத் தேடிக் கொண்டு வரச் செய்து, போயசு கார்டனில் மீண்டும் இட்லிக் கடை தொடங்கி நடத்த அனுமதித்தார் என நினைவுகூர்கிறார், சரசுவதி.

நடிகர் ரஜினிகாந்த், நடிகர் சிவக்குமார், சரசுவதி உள்ளிட்ட பல்வேறு தனிநபர்களிடம் ஜெயா வெளிப்படுத்திய அக்கறையை, பெருந்தன்மையை, அன்பைக் கொண்டு அவரை மதிப்பிடுவதா? அல்லது தமிழகத்தின் பல்வேறு மக்கட் பிரிவினரின் கோரிக்கைகளின் பால் அவரும், அவரது அரசும் காட்டிய ''அக்கறையை''க் கொண்டு அவரை மதிப்பிடுவதா?

அறக்கட்டளை நிறுவனங்களுக்கு இலட்சக்கணக்கில் நன்கொடை அளிக்கும் முதலாளிகள்தான், தனது தொழிலாளர்கள் அரைக்காசு சம்பளம் அதிகமாகக் கேட்டால் வேலையை விட்டுத் துரத்தி அடிக்கிறார்கள். முதலாளிமார்கள் தொழிலாளிகளின் வயிற்றலடிப்பதை மறைத்துவிட்டு, அவர்களது வள்ளல்தனத்தைக் கொண்டாட முடியுமென்றால், ஜெயாவின் கருணையையும் தமிழகம் கொண்டாடலாம்.

சரசுவதியைத் தேடிப்பிடித்து இட்லிக் கடை நடத்த அனுமதித்த ஜெயா, அதேவிதமான அன்பை, அக்கறையை, பள்ளிக்கூட மாணவர்களுக்குச் சமைத்துப் போடும் சத்துணவுப் பணியாளர்கள், அமைப்பாளர்களின்பால் காட்ட மறுத்தார். தமக்கு மற்ற அரசு ஊழியர்கள் போல ஊதியமும், ஓய்வூதியமும் தரக் கோரி அவர்கள் போராட முனைந்த போது, அப்பணியாளர்களை சென்னைக் குள்ளேயே வராமல் தடுத்துத் துரத்தியது, ஜெயாவின் போலீசு.

2001 சட்டமன்றத் தேர்தலில் வென்று மீண்டும் முதல்வரான ஜெயா, கிட்டதட்ட பத்தாயிரம் சாலைப் பணியாளர்களை வேலையிலிருந்து ஒரே நாளில் துரத்தியடித்து, அவர்களின் வாழ்க்கையைச் சூனியமாக்கினார். இதற்கு, அப்பணியாளர்கள் முந்தைய தி.மு.க. அரசால் நியமிக்கப்பட்டவர்கள் என்ற காழ்ப்புணர்ச்சியைத் தவிர, வேறு காரணங்கள் ஜெயாவிற்குத் தேவையாக இருக்கவில்லை. இந்த அநீதிக்கு எதிராக அப்பணியாளர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தியும், உச்சநீதி மன்றம் வரை சென்று வழக்காடி வென்ற பிறகும், ஜெயாவின் மனதில் கருணை பிறக்கவில்லை. இறுதியாக, 2006 சட்டமன்றத் தேர்தல் நெருங்கும் சமயத்தில், தனது தேர்தல் வெற்றிகளைக் கணக்கிட்டு, அவர்களை மீண்டும் பணியில் எடுத்துக் கொள்ள உத்தரவிட்டார். இந்த உத்தரவைப் பெறுவதற்குள்ளாக, 80-க்கும் மேற்பட்ட சாலைப் பணியாளர்கள் மாண்டு போனார்கள்.

இதைவிடக் கொடுமையானது, மக்கள் நலப் பணியாளர்களை வேலையிலிருந்து நீக்கிய ஜெயாவின் அடாவடித்தனம். மக்கள் நலப் பணியாளர்கள் 1989-ஆம் ஆண்டில் அப்போதிருந்த தி.மு.க. அரசால் நியமிக்கப்பட்டவர்கள்.



ஊதிய உயர்வு, பணிப் பாதுகாப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து சத்துணவுப் பணியாளர்கள் தமிழகம் தழுவிய அளவில் நடத்திய போராட்டத்தின் ஒரு பகுதியாக, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடந்த சாலை மறியல். (கோப்புப் படம்)

13,500 ஊழியர்கள் இருபது ஆண்டு காலம் பணியாற்றி வந்ததை ஒரு பொருட்டாகவே கருதாமல், 2011-இல் முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்ட ஒரு சில மாதங்களிலேயே அவர்களை வேலையிலிருந்து நீக்கியது, அம்மா அரசு.

மீண்டும் பணியில் அமர்த்தக் கோரி மக்கள் நலப் பணியாளர்கள் நடத்திய போராட்டங்கள் கடுமையாக ஒடுக்கப்பட்டன. இந்த அநீதியை எதிர்த்து தொடுக்கப்பட்ட வழக்கில் அவர்களைப் பணியில் அமர்த்துமாறு உத்தரவிட்டது, சென்னை உயர்நீதி மன்றம். இதனை எதிர்த்து அ.தி.மு.க. அரசு தொடுத்த மேல்முறையீட்டை விசாரித்த சென்னை உயர்நீதி மன்றத்தின் இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு, அவர்களுக்குப் பணி வழங்காவிட்டால், ஆறு மாத சம்பளத்தை வழங்குமாறு உத்தரவிட்டது. இந்த உத்தரவை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், இவ்வழக்கை மீண்டும் விசாரிக்குமாறு சென்னை உயர்நீதி மன்றத்திற்கு உத்தரவிடப்பட்டது. அந்த விசாரணையில், அவர்களைப் பணியில் அமர்த்துமாறு உத்தரவிட்டது, சென்னை உயர்நீதி மன்றம். இந்த உத்தரவை அமல்படுத்த மறுத்து, அ.தி.மு.க. அரசு உச்சநீதி மன்றத்தில் தொடுத்த வழக்கு நிலுவையில் இருக்கிறது. அம்மா அரசின் இந்த அலைக்கழிப்புகளையும், போதிய வருமானம் இல்லாத வாழ்க்கையையும் எதிர்கொள்ள முடியாத அப்பணியாளர்களுள் இருபதுக்கும் மேற்பட்டோர் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போய்விட்டனர்.

தன்னை எதிர்த்து அறிக்கைவிட்ட, மேட்டுக் குடி வர்க்கத்தைச் சேர்ந்த ரஜினிகாந்திடம் காட்டிய பெருந்தன்மையை, மக்கள் நலப் பணியாளர்களிடம் ஜெயா காட்ட மறுத்தது ஏன்? தி.மு.க.வால் நியமிக்கப்பட்டவர்கள் என்ற காழ்ப்புணர்ச்சி மட்டும் இதற்குக் காரணமில்லை. மக்கள் நலப் பணியாளர்கள் தன்னிடம் கையேந்தி நிற்காமல், விடாப்பிடியாக தன்னை எதிர்த்துப் போராடுகிறார்கள் என்ற ஜெயாவின் பாசிசத் திமிர்தான் இதன் அடிப்படை.

ஜெயாவின் கருணையும், எம்.ஜி.ஆரின் வள்ளல்தனமும், மக்கள் தம்மை அண்டி, தமது கருணைக்காகக் கையேந்தி நிற்க வேண்டும் என்ற பண்ணையார்களுக்கே உரிய சிந்தனையிலிருந்து பிறந்தவை. எந்தவொரு மக்கட்பிரிவும் எந்தவொரு கோரிக்கைகாகவும் போராடக் கூடாது. மாறாக, தம்மிடம் இறைஞ்சிப் பெற வேண்டும் என்பதைக் கொள்கையாகவே கொண்ட கட்சி அ.தி.மு.க. இந்த விதியை மீறுபவர்கள் யாராக இருந்தாலும், அவர்களின் உரிமைகளை மறுப்பதற்கும், அவர்களை ஒடுக்குவதற்கும் எந்த எல்லை வரையும் செல்லக்கூடியவர்களாக அவர்கள் இருவருமே இருந்தனர்.

கும்பகோணம் பள்ளி தீக்கிரையான சம்பவத்தில் கொல்லப்பட்ட மாணவர்களின் இழப்பீடு வழக்கை எடுத்துப் பாருங்கள், கூடுதல் இழப்பீடு கோரிப் பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர்களால் தொடரப்பட்ட வழக்கில், அது பற்றி விசாரணை நடத்த நீதிபதி சண்முகம் தலைமையில் கமிசனை அமைக்குமாறு தமிழக அரசிற்கு உத்தரவிட்டது, சென்னை உயர்நீதி மன்றம். நீதிமன்ற உத்தரவுப்படி கமிசன் அமைப்பதால் ஜெயா அரசிற்கு நட்டமோ, அவமானமோ ஏற்படப் போவதில்லை. ஆனாலும், தன்னகங்காரம் காரணமாக அத்தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்தது, அம்மா அரசு.

பார்வையற்றோர் உள்ளிட்ட மாற்றுத் திறனாளிகள் சில சலுகைகளைக் கோரித் தொடர்ச்சியாகப் போராடுகிறார்கள் என்பதாலேயே, அவர்களைச் சந்திக்க மறுத்தது, ஜெயா அரசு. அதோடு, பார்வையற்றோர் என்ற பச்சாதாபம்கூட இன்றி, போலீசை ஏவிவிட்டு அவர்களின் போராட்டத்தை ஒடுக்கி, அவர்களை நகரத்திற்கு வெளியே கடத்திக்கொண்டு போய் சுடுகாட்டில் வீசியெறிந்தது.

தாமிரவருணி தண்ணீரை அமெரிக்க ஏகாதிபத்திய நிறுவனமான கோக்கிற்கு அடிமாட்டு விலைக்கு அள்ளிக் கொடுப்பதை எதிர்த்துப் போராடியவர்கள் மீது அடக்குமுறையை ஏவிவிட்ட ஜெயாதான், அம்மா குடிநீரை அறிமுகப்படுத்தினார்.

மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க முடியாது எனத் திமிராக அறிவித்த ஜெயாதான், 100 யூனிட் மின்சாரத்தை இலவசமாக வழங்க முன்வந்தார்.

இப்படித் தமிழக மக்களின் மீது அம்மா பொழிந்த கருணை மழையின் பின்னே ஏமாற்றுத்தனங்களும் மோசடிகளும் நிறைந்திருக்கின்றன. நம் மீது அடிமைத் தனத்தைத் திணிக்கிறது, ஜெயாவின் கருணை. அவரது துணிவோ ரவுடிக் கும்பலின் அடாவடித்தனத்தை மட்டுமே நமக்கு நினைவூட்டுகிறது.

2006-11 தி.மு.க. ஆட்சியில் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களுள் ஜெயாவைத் தவிர மற்ற அனைவரும் இடைநீக்கம் செய்யப்பட்ட சமயத்தில், ஜெயா, சட்டசபைக்குள் அ.தி.மு.க.வின் சார்பாகத் தனியொரு ஆளாகச் சென்று ஆளுங்கட்சியை எதிர்த்துப் பேசியதைச் சுட்டிக்காட்டி, ஜெயாவின் துணிச்சலை அசாதாரணமான ஒன்றாகக் குறிப்பிடுகிறார்கள். ஜெயாவின் இந்தத் துணிச்சலுக்கு அச்சட்டமன்றத்தில் தி.மு.க. கடைப்பிடித்துவந்த குறைந்தபட்ச ஜனநாயகம் முக்கிய காரணமாக இருந்ததை ஊடகங்கள் வசதியாக மறைத்துவிடுகின்றன.

அதேசமயம், ஜெயா, தனது ஆட்சி நெடுகிலும் சட்டமன்றத்தை எப்படி நடத்தினார்? தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அரசை எதிர்த்தோ, விமர்சித்தோ பேச எழுந்தாலே, அக்கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்களை வெளியேற்றுவதை, இடைநீக்கம் செய்வதை விதியாகவே மாற்றினார். சட்டமன்றத்தில் தான் ஆற்றும் உரைகளை, அறிவிக்கும் திட்டங்களை எதிர்க்கட்சிகள் எதிர்த்துப் பேசக் கூடாது என்பதற்காகவே, சட்டமன்றத்தை ''110 மன்றமாக'' மாற்றினார். சட்டமன்றத்திற்கு வெளியே அவரை, அவரது ஆட்சியை விமர்சித்த எதிர்க்கட்சிகள், பத்திரிகையாளர்கள் மீது அவதூறு வழக்குகளை அடுக்கடுக்காகப் போட்டு, விமர்சன உரிமையைப் பறித்தார். ஆளுங்கட்சியை எதிர்த்து நின்ற ஜெயாவின் ''துணிச்சல்'', எதிர்க்கட்சிகளை, பத்திரிகையாளர்களை எதிர்கொள்ள மறுப்பதேன்?

காரணம், ஜெயா போன்ற பாசிச ஆட்சியாளர்களுக்கு உரித்தான பயம். பொதுமக்களை, எதிர்த்தரப்பை, விமர்சனங்களை எதிர்கொள்ள ஜெயா போன்ற பாசிச ஆட்சியாளர்கள் அஞ்சுகிறார்கள். 2011-இல் அவர் முதல்வராகப் பதவியேற்றவுடனேயே, இனி பத்திரிகையாளர்களைத் தான் வாரம் ஒருமுறை சந்திக்கப் போவதாக அறிவித்தார். ஆனால், இந்த அறிவிப்பு ஒரு நாடகம் என்பது உடனடியாகவே அம்பலமானது. அவரது ஆட்சியில் உயர் அதிகாரிகள்கூட அவரைச் சந்திக்க முடியாது என்றபடி ஜெயா போயசு தோட்டத்திற்கு பதுங்கிக்கொண்டு, மர்மமான வாழ்க்கையைத்தான் நடத்தி வந்தார்.

அவர் முதல்வராக இருந்த போதும், எதிர்க்கட்சியாக இருந்தபோதும் மக்களைச் சந்தித்ததே கிடையாது. அவரோ, அவரது கட்சியோ மக்கள் பிரச்சினைகளுக்காக எந்தப் போராட்டங்களையும் நடத்தியது கிடையாது. பேரரசர்கள் உப்பரிகையிலிருந்து மக்களுக்குத் தரிசனம் தருவது போல, தேர்தல் நெருங்கும் சமயத்தில் மட்டும் நான்கைந்து பொதுக்கூட்டங்களில் பேசிவிட்டுப் பறந்து செல்வதை வாடிக்கையாகக் கொண்டிருந்தார்.

ஜெயா, தனது ஆட்சியில் துணிச்சலான பல நடவடிக்கைகளை, முடிவுகளை எடுத்ததாக அவரைத் துதிபாடும் பத்திரிகைகள் எழுதுகின்றன. அந்த நடவடிக்கைகளுள் பெரும்பாலானவை, அதிகாரிகளையும் அமைச்சர்களையும் நினைத்த நேரத்தில் தூக்கியடித்தவைதான். அடிமைகளைக் கொல்லும் வழக்கம் இன்று இருந்திருந்தால், அமைச்சர்கள், அதிகாரிகள் என்ற பெயரில் உலவி வந்த அடிமைகளின் கதி அதோகதியாகியிருக்கும்.

இதற்கு அப்பால், பால் விலை மற்றும் பேருந்து, மின்சாரக் கட்டணங்களைத் தடாலடியாக உயர்த்தி அறிவித்ததை; வேலை நிறுத்தம் செய்த இரண்டு இலட்சம் அரசு ஊழியர்களை ஒரே நாளில் வேலைநீக்கம் செய்ததை; தமிழின உரிமைக்காகக் குரல் கொடுப்பதை ஒடுக்கியதையெல்லாம் அவரது துணிச்சலாக, திறமையாகச் சொல்லுகிறார்கள். குரூரமான மனோநிலை கொண்டவர்கள்தான் மக்களின் மீதான பாசிச ஒடுக்குமுறைகளைத் துணிச்சல், திறமை என்று பாராட்ட முடியும்.

ஜெயா, பார்ப்பன சாதியில், மேட்டுக்குடி குடும்பத்தில் பிறந்து, வளர்ந்தவர். கான்வெண்டில் படித்தவர். இந்தச் சூழலில் வளரும் யாருக்கும் தான்தோன்றித்தனமும் திமிரும் கூடப் பிறந்த குணமாகவே இருக்கும். ஜெயாவிடமோ இதற்கு மேலே அதிகாரமும் இருந்தது. அவரது துணிவு இதிலிருந்துதான் கருவாகி உருவானது. சுருக்கமாகச் சொன்னால், சரளமாக இங்கிலீஷ் பேசும் மேட்டுக்குடி பார்ப்பனத்தி என்பதாலேயே ஜெயாவின் ரவுடித்தனங்களும் தான்தோன்றித்தனங்களும் துணிவாகக் காட்டப்பட்டன.

ரவுடிகளைக் கண்டு மக்கள் ஒதுங்கிச் செல்லுவதை, ரவுடியின் வீரமாக, துணிவாக மொழிபெயர்க்க முடியாது. அதுபோலத்தான் ஜெயாவின் துணிச்சல். உண்மையில், அவர் யாரையும் நம்பவில்லை. சந்தேகம், பயம் காரணமாக தனது கட்சி நிர்வாகிகள், அமைச்சர்கள், மன்னார்குடி குடும்பத்தை உளவுத்துறையைக் கொண்டு வேவு பார்த்தார். எம்.ஜி.ஆரைப் போல, ஜெயாவிற்குத் தனது உறவினர்களோடு நெருக்கம் இருந்திருந்தால், அவர்களையும் வேவு பார்த்திருப்பார். பாசிஸ்டுகள் தமது நிழலைக்கூட நம்புவதில்லை. அதைக் கண்டும் அஞ்சும் கோழைகள் அவர்கள்.

வெளிச்சத்தைப் பார்த்துப் பயந்து சந்துபொந்துகளுக்குள் மறைந்துகொள்ளும் கரப்பான் பூச்சிகள் போல, ஜெயாவும், சசியும் அச்சம், சந்தேகம், கோழைத்தனம் காரணமாக, போயசு தோட்டம், சிறுதாவூர் பங்களா, கோடநாடு எஸ்டேட்டுகளில் பதுங்கியே காலம் கழித்தனர். ஊழல் பணத்தை எண்ணிப் பதுக்கி வைக்கும் அவர்களது நடவடிக்கைகளுக்கும் இந்தத் தலைமறைவு வாழ்க்கையே வசதியாகப் போனது.

■ அறிவு

## வங்கிகள்:

# கருப்புப் பணத்தை மாற்றித்தரும் அரசாங்க ஏஜெண்டுகள்!

**கூட்டுறவு மற்றும் தொடக்க வேளாண் வங்கிகளின் வர்த்தக நடவடிக்கைகளுக்குத் தடை விதித்துள்ள மைய அரசு, கருப்புப் பணத்தை மாற்ற உதவிய தனியார் வங்கிகளுக்குத் தடை விதிக்க மறுப்பது ஏன்?**

கருப்புப் பணத்தையும், தீவிரவாதத்துக்கு நிதி அளிப்பது, போதை மருந்து கடத்தல் ஆகியவற்றையும் தனது பணமதிப்பு நீக்க நடவடிக்கை ஒழித்துள்ளது என்று பெருமைப்பட்டுக் கொள்கிறார் மோடி. ஆனால், நவம்பர் 8-ஆம் தேதிக்குப் பிறகு கடந்த 50 நாட்களில் கருப்புப்பணம் கடுகளவும் ஒழியவில்லை. கருப்புப்பண பேர்வழிகள் அஞ்சி நடுங்கிடவுமில்லை. மாறாக, ஒரு புதிய கருப்புப்பணச் சந்தை உருவாகியுள்ளதோடு, வங்கிகளின் துணையோடு கருப்பை வெள்ளையாக்கும் மோசடிதான் பெருகியுள்ளது.

கருப்பை வெள்ளையாக்குவதிலும் பணக்கடத்தலிலும் ஈடுபட்ட குற்றத்துக்காக கடந்த ஜூன் 2013-இல் ரிசர்வ் வங்கியால் ரூ.5 கோடி அபராதம் விதிக்கப்பட்ட தனியார் நிறுவனம்தான், ஆக்சிஸ் வங்கி. அப்பேர்பட்ட யோக்கியவானாகிய ஆக்சிஸ் வங்கியின் டெல்லி-சாந்தினி சவுக் கிளையில், கடந்த நவம்பர் 8-ஆம் தேதி முதலாக ஒரு வார காலத்திற்குள் போலி ஆவணங்கள் மூலம் 44 புதிய வங்கி கணக்குகளைத் தொடங்கி, அவற்றில் ஏறத்தாழ ரூ.450 கோடி அளவுக்கு பணப் பரிமாற்றம் நடந்துள்ளது. இதுதவிர, பல நூறு கோடி அளவுக்குப் பணப்பரிமாற்ற மோசடிக்கு உடந்தையாக இருந்த டெல்லி காஷ்மேரே கேட் பகுதியில் உள்ள ஆக்சிஸ் வங்கி கிளையை சேர்ந்த இரு மேலாளர்களை பொருளாதாரக் குற்றப்பிரிவு அதிகாரிகள் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட டெல்லி ஆக்ஸிஸ் வங்கி மேலாளர்கள் வினித் குப்தா, ஷஷாங்க் சின்ஹா ஆகிய இருவரையும் நீதிமன்றத்திற்குக் கூட்டிவரும் போலீசு அதிகாரிகள்.



"கோப்ரா போஸ்ட்" எனும் வலைத்தளம், நாட்டின் ஐந்து மண்டலங்களில் நடத்திய இரகசிய விசாரணையின் மூலம் ( Operation Red spider) ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி, ஹெச்.டி.எப்.சி. வங்கி மற்றும் ஆக்சிஸ் வங்கி ஆகிய தனியார் வங்கிகள் பல்வேறு வழிகளில் கோடிக்கணக்கில் கருப்பு பணத்தை வெள்ளையாக்கும் மோசடியில் ஈடுபட்டுள்ளதை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியுள்ளது.

அகில இந்திய வங்கி ஊழியர்கள் சங்கம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களின்படி, நவம்பர் 8-ம் தேதி முதல் டிசம்பர் 7-ம் தேதி வரை தமிழகத்தில் 9,000 கிளைகளைக் கொண்டுள்ள பொதுத்துறை வங்கிகளுக்கு, ஒரு கிளைக்கு ஏறத்தாழ ரூ.87 லட்சம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில், 900 கிளைகளைக் கொண்டுள்ள தனியார் வங்கிகளுக்கு, ஒரு வங்கிக் கிளைக்கு ஏறத்தாழ ரூ.6.7 கோடி வழங்கப்பட்டுள்ளது. இது பொதுத்துறை வங்கிகளுக்கு வழங்கப்பட்டதை விட 8 மடங்கு அதிகமாகும்.

பொதுத்துறை வங்கிகளில் வாடிக்கையாளர் எண்ணிக்கை அதிகமாகவும், தனியார் வங்கிக் கிளைகளில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவும் உள்ள நிலையில், இவ்வளவு பணத்தை கொண்டு தனியார் வங்கிகள் தமது வாடிக்கையாளர்களுக்கு தாராளமாக பணம் வழங்கியிருக்கலாம். ஆனால், தனியார் வங்கிகளிலும் பணம் இல்லை என்ற அறிவிப்பு அட்டைதான் பெருமளவில் தொங்கிக் கொண்டிருந்தது. இதிலிருந்தே தனியார் வங்கிகளுக்கு ஒதுக்கப்பட்ட புதிய நோட்டுகள் கருப்புப் பணப் பேர்வழிகளுக்குப் போய்ச் சேர்ந்துள்ளதை உணர முடியும். நவ.8 முதல் ஐ.சி.ஐ.சி.ஐ, ஆக்சிஸ், ஹெச்.டி.எப்.சி. ஆகிய தனியார் வங்கிகள் எவ்வளவு பழைய நோட்டுக்களை வாங்கிக் கொண்டு புதிய நோட்டுக்களை வழங்கியுள்ளன என்பதை ரிசர்வ் பாங்க் கவர்னர் தேதி வாரியாக அறிவிக்க

வேண்டும் என அகில இந்திய வங்கி அதிகாரிகள் கூட்டமைப்பு கோரி யுள்ள போதிலும், இதுவரை எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை.



பணமாற்ற மோசடி தொடர்பாக சென்னையில் கைது செய்யப்பட்ட வங்கி அதிகாரிகள்.

மாநில அரசுகளின் கட்டுப்பாட் டிலுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களிலும், மாவட் டக் கூட்டுறவு வங்கிகளிலும் பழைய நோட்டுகளை மாற்றவும், பணப் பரிமாற்றங்களுக்கும் தடை விதித்து, தமிழகம் உள்ளிட்ட எதிர்த் தரப்பு ஆளும் மாநிலங்களைக் குறி வைத்து வருமான வரித்துறையின ரைக் கொண்டு சோதனைகள் நடத் துகிறது, மோடி அரசு. ஆனால், பா.ஜ.க.வின் தலைவர் அமித்ஷாவை நிர்வாக இயக்குனராகக் கொண்டுள்ள குஜராத்தின் அகமதாபாத் மாவட்ட கூட்டுறவு வங்கி யில் ரூ.500 கோடி அளவுக்கும், குஜராத் அமைச்சர் சங் கர்பாய் சவுத்ரி தலைவராக இருக்கும் மற்றொரு கூட்டு றவு வங்கியில் ரூ.200 கோடி அளவுக்கும் பணப் பரி மாற்றம் நடந்துள்ளபோதிலும், மோடி அரசு அவற் றைக் கண்டுகொள்ளவில்லை. குஜராத் கூட்டுறவு வங் கிகளில் கமிசன் அடிப்படையில் புதிய நோட்டுக்கள் மாற்றப்பட்டு வருவதற்கான வீடியோ ஆதாரம் தன் னிடம் உள்ளதாக யாதீன் ஓசா என்கிற பாரதீய ஜனதா எம்.எல்.ஏ. மோடிக்குப் பகிரங்கக் கடிதம் எழுதியுள்ள போதிலும், இதுவரை மோடி அரசு எந்த விளக்கமும் அளிக்கவில்லை.

ஏற்கனவே, ஏடிஎம் கடவு எண்களைத் திருடும் மோசடிகள் தொடரும் நிலையில், ஒருவரது வங் கிக் கணக்கில், அவருக்குத் தெரியாமல் பணத்தைப் போட்டு எடுப்பதென்பதும் இப்போது சர்வசாதார ணமாகிவிட்டது. உ.பி. மாநிலம் மீரட்டில் வசிக்கும் ஏழைப் பெண்ணாகிய ஷீதல் ஷீதல் யாதவ் யாதவ் என்பவரது பாரத ஸ்டேட் வங்கியிலுள்ள ஜன்தன் கணக்கில் ரூ. 100 கோடி டெபாசிட் செய்யப்பட்டு, பின்னர் அது கணினிக் கோளாறினால் ஏற்பட்ட தவறா கச் சித்தரிக்கப்பட்டது. தருமபுரியி லிருந்து பாலக்கோடு செல்லும் வழி யிலுள்ள புலிகரை கிராமத்தின் இந் தியன் வங்கியில், நகைக் கடனுக்கு வட்டிக் கட்டவில்லை என்பதால் முடக்கப்பட்டிருந்த சிவகுமார் என்ற விவசாயியின் கணக்கில் 1,32,758. ரூபாய் போடப்பட்டு பின்னர் வேறு கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. வங்கி மேலாளரான பிரபாகரன், இது போல பல விவசாயிகளது வங்கிக் கணக்கில் பணத்தைப் போட்டு பின் னர் வேறு கணக்கிற்கு பல இலட்சங் களை பரிமாற்றம் செய்துள்ள மோச டியை மக்கள் அதிகாரம் அம்பலப் படுத்தியது.

இறக்குமதிக்கான கோடிக்கணக்கான தொகையை வெளிநாட்டிலுள்ள நிறுவனத்துக்கு அனுப்புவதாகக் கூறித்தான், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி - இறக்கு மதி வர்த்தகம் வாயிலாக வருடந்தோறும் பல லட்சம் கோடி கருப்புப் பணம் கருப்பணம் வெளியேறி வருகி றது. இந்த வர்த்தகத்திற்குரிய பில்கள் உள்ளிட்ட மின் னணு பரிமாற்றங்கள் அனைத்தும் வங்கிகளின் வழியா கத்தான் நடந்துள்ளன. இப்படிச் சட்டபூர்வமாக மட் டுமின்றி, சட்டவிரோத வழிகளிலும் கருப்புப் பணத் தைக் கடத்துவதற்கு இந்தியாவைச் சேர்ந்த ஹெச்.டி. எஃப்.சி. என்ற தனியார் வங்கி போதை மருந்து கடத் தல் பணத்தைக் கைமாற்றிய விவகாரமும், டெல்லியி லுள்ள பேங்க் ஆஃப் பரோடா வங்கிக் கிளையொன் றின் வழியாகப் போலியான ஏற்றுமதி ரசீதுகள் தயாரிக் கப்பட்டு, கருப்புப் பணம் கடத்தப்பட்ட விவகாரமும் வங்கிகளின் நிழல் உலகப் பின்னணியை ஏற்கெனவே அம்பலமாக்கியிருக்கின்றன.

உண்மை இவ்வாறிருக்க, மோடியும் பா.ஜ.க. கும் பலும் வங்கிகளின் வழியாக நடைபெறும் வர்த்தக நடவடிக்கைகள்தான் வெளிப்படையானவை என் றும், அதில் முறைகேடுகள் இருக்காது, இதன் மூலம் சட்டப்படியான வருமான வரியை விதிக்க முடியும், மின்னணு பரிமாற்று முறை வந்தால் கருப்புப் பணம்



ஒழிந்துவிடும் என்றெல்லாம் நாட்டு மக்களின் காதுகளில் இன்னமும் பூச்சுற்றிக் கொண்டிருக்கின்றனர்.

வங்கிகள் மட்டுமின்றி, ரிசர்வ் வங்கியின் அச்சகம், ரொக்கப் பணத்தைப் பாதுகாக்கும் கருவூலம் ஆகியவற்றின் வழியாகவும் பணப் பரிமாற்றங்கள் நடந்திருக்க வாய்ப்புள்ளது என்று கூறும் முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம், இந்த இடங்களிலும் சோதனை நடத்த வேண்டுமென்கிறார். ஆனால் இதற்கு விளக்கமளிக்காத மோடி அரசோ, ஒருசில வங்கிக் கிளைகளில் மட்டும் சோதனை நடத்துவதோடு நின்றுவிட்டது. மணற்கொள்ளை மாஃபியா சேகர் ரெட்டியிடம் பிடிபட்ட புதிய ரூ. 2,000 நோட்டுகள் எந்த வங்கியிலிருந்து வந்தது என்பதை அந்த நோட்டுகளின் எண்ணை வைத்தே கண்டறிய முடியும் எனும் போது, மோடி அரசோ அது பற்றி வாய்திறக்க மறுக்கிறது. மறுபுறம், நாட்டிலுள்ள அனைத்து வங்கிக் கணக்குகளையும் சோதனை செய்து மோசடிகளைத் தடுப்போம் என்று வெற்றுச் சவடால் அடித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் வங்கிக் கணக்குகள் அனைத்தையும் சோதிக்குமளவுக்கு அடிக்கட்டுமான வசதிகளோ, போதிய எண்ணிக்கையிலான அதிகாரிகளோ இல்லை என்று வங்கி ஊழியர் சங்கங்களே இந்த வெற்று வாக்குறுதியை அம்பலப்படுத்துகின்றன.

மோடியின் பணமதிப்பு நீக்க நடவடிக்கை என்பது உலகறிந்த ஒரு மோசடி. மோடி அரசோ, இன்றைய கிரிமினல் முறையிலான அரசுக் கட்டமைப்பைக் கொண்டே இதனைச் சாதிக்க முயற்சிக்கிறது. ஆனால் பெரு முதலாளிகளும் கருப்புப் பணப் பேர்வழிகளும் தங்களது வழக்கமான கிரிமினல் நடவடிக்கைகளால், மோடியின் ஊதிப் பெருக்கப்பட்ட கருப்புப்பண ஒழிப்புத் திட்டத்தின் காற்றைப் பிடுங்கிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

■ குமார்



## பணமற்ற பொருளாதாரம்:

# உமி கொண்டுவருபவன் அவல் தின்பான்!

ஒரு லாட்ஜ் ஓனர் இருந்தாரு. அவரு லாட்ஜுக்கு ஒருத்தர் வந்தாரு. ரூம் புக் பண்றதுக்கு முன்னாடி ரூம் எப்பிடியிருக்குதுன்னு பார்க்கணும்னு சொன்னாரு. உடனே லாட்ஜ் ஓனர், அப்பிடின்னா 500 ரூவா டெபாசிட் குடுக்கணும்னு சொன்னாரு. உடனே அந்த ஆள் ஒரு புது 500 ரூவாவை எடுத்து டேபிள் மேல வச்சிட்டு படியேறி ரூம் பார்க்க போனாரு.

லாட்ஜ் ஓனர் அந்த 500 ரூவாவை எடுத்து லாட்ஜ்ல ரூம் தொடைக்கிற அம்மாகிட்ட குடுத்து, போன மாசம் சம்பளத்துல பாக்கி வச்ச 500 ரூவா இந்தான்னாரு. அந்தம்மா அந்த 500 ரூவாவ எடுத்துக்கிட்டுப் போய் பக்கத்துல இருந்த டீக்கடையில குடுத்து, போன மாச டீ பாக்கி இந்தா வச்சிக்கோன்னு குடுத்தாங்க.

அந்த டீக்கடைக்காரரு அந்த 500 ரூவாவ எடுத்துக்கிட்டுப் போய் பால் பண்ணை முதலாளிக்கிட்ட குடுத்து, போன மாச பால் பாக்கி இந்தாங்கன்னு சொன்னாரு. பால் பண்ணை முதலாளி அந்தப் பணத்தை எடுத்துக்கிட்டுப் போய் கால்நடை மருத்துவர்கிட்ட கொடுத்து, இந்தாங்க சார், போன மாசம் மாடுகளுக்கு வைத்தியம் பார்த்தபோது, சில்லறை இல்லைன்னு 2,000 ரூவா நோட்டு வாங்கிக்க மாட்டேன்னு சொன்னீங்கல்ல, இந்தாங்கன்னு கொடுத்தார். அந்த நோட்டை எடுத்துக்கிட்டு லாட்ஜுக்கு வந்த மருத்துவர், போன மாதம் தங்கி இருந்த ரூம் வாடகை பாக்கி இந்தாங்கன்னு 500 ரூவாவை லாட்ஜ் ஓனர்கிட்ட குடுத்தாரு.

லாட்ஜ் ஓனர் அந்த 500 ரூவா நோட்டை மறுபடி டேபிள் மேல வச்சாரு. ரூம் பார்க்க வந்தவரு, எனக்கு எந்த ரூமும் பிடிக்கலை, நான் போறேன்னு 500 ரூவாவ எடுத்துக்கிட்டு கிளம்பிட்டாரு.

இப்ப 500 ரூவா வந்த இடத்துக்கே திரும்பிப் போயிடுச்சி. ஆனா போற வழியில சம்பள பாக்கி, டீக்கடை பாக்கி, பால் பாக்கி, வைத்திய பாக்கி, லாட்ஜ் வாடகை பாக்கின்னு எல்லாத்தையும் சரி பண்ணிட்டுப் போயிடுச்சி, யாருக்கும் இழப்பில்லாம.

இப்ப நம்ம மோடியின் புதிய இந்தியால இந்தக் கதை என்னவாகும்?

வேலைக்கார அம்மாவோட பே டிஎம் ஆப்ல 1%, டீக்கடை ஆப்ல 1%, பால் பண்ணை ஆப்ல 1%, கால்நடை மருத்துவர் பே டிஎம் ஆப்ல 1%, லாட்ஜ் ஓனரோட பே டிஎம் ஆப்ல 1% இப்பிடி பே டிஎம் பாக்கெட்டுக்கு ரூ.5 + 4.95 + 4.90 + 4.85 + 4.80 = ரூ.24.50 போயிடும். 500 ரூவாயில ஆரம்பிச்ச ட்ரான்ஷாக்சன், லாட்ஜ் ஓனர் கைக்கு திரும்ப வரும்போது ரூ.475.50 ஆகிடும்.

(குறிப்பு : இப்போதைக்கு ட்ரான்ஷாக்சன் சார்ஜ் 2.9% வரைக்கும் இருக்கு. எளிதா கணக்குப் போடுறதுக்காக 1% ஆக எடுத்துக்கிட்டோம்.)

இதுல யாருக்கு லாபம்? யாருக்கு நஷ்டம்? இப்பவாவது புரிஞ்சிக்குங்கோ, இது யாருக்கான திட்டம்னு!

■ அன்பு

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

அரியானா, குஜராத் உள்ளிட்ட மாநிலங்களில் பல இடங்களில் வங்கிகள் சூறையாடப்பட்டன. குஜராத்தில் விவசாயிகள் சங்கத் தினர் ஒன்றிணைந்து பண மதிப்பு நீக்க நடவடிக்கைக்கு எதிராக சூரத் நகரில் பேரணி மற்றும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

இப்படி இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பண மதிப்பு நீக்க நடவடிக்கைக்கு எதிராகத் தன்னெழுச்சியாக நடைபெற்றுள்ள போராட்டங்களையும், புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டங் களையும் ஊடகங்கள் திட்டமிட்டே இருட்டடிப்பு செய்கின்றன. நெருக்கடி நிலை அமலில் இருந்த காலத் தில் தொலைக்காட்சி அரசின் கட்டுப் பாட்டில் இருந்ததைப் பயன்படுத்திக் கொண்டும், பத்திரிகைகளை அரசின் தணிக்கைக்கு உட்படுத்தியும் நெருக்கடி நிலைக்கு எதிர்ப்பே இல்லாதது போன்ற தோற்றத்தை உருவாக்கியது காங்கிரசு. இன்றோ அரசின் கட்டுப்பாடுகள் நீங்கி விட்ட சுதந்திர ஊடக யுகம் நிலவுவதா கக் கூறப்படுகிறது. ஆனால், கார்ப்பரேட் நிறுவனங்களின் பிடியில் உள்ள தனியார் ஊடகங்கள், அரசனை விஞ்சும் விசுவாசி யாக நடந்துகொண்டு, இப்போராட்டங் களை இருட்டடிப்பு செய்து வருகின்றன.

இப்போராட்டங்கள் குறித்த செய் திகளை வெளியிட்டால், அவை காட் டுத் தீயைப் போல இந்தியாவெங்கும் பரவித் தீவிரமடைந்துவிடுமோ என அரசைப் போலவே கார்ப்பரேட் ஊடகங் களும் அச்சப்படுகின்றன. மேலும், தனி யார்மயத்தின் பிறகு, ஊடகங்கள் கார்ப் பரேட் நலனை முன்னிறுத்தி மட்டுமே நடத்தப்படுவதால், அவை மோடியின் பண மதிப்பு நீக்க நடவடிக்கையைத் தமது சொந்த நலனாகவே காண்கின்றன. இவை காரணமாகவே, ஊடகங்கள் மக் களின் போராட்டங்களை அரசின் அச் சுறுத்தலோ, தணிக்கையோ எதுவுமின்றி, தாமே இருட்டடிப்பு செய்வதில் முந்திக் கொண்டு செயல்படுகின்றன.

தொழிலாளர் வைப்பு நிதியைப் பெறுவதில் பல கட்டுப்பாடுகளை மோடி அரசு விதித்தபொழுது, பெங்களூரு ஆயத்த ஆடைத் தொழிலாளர்கள் கல கத்தில் இறங்கி, அதனைத் திரும்பப் பெற வைத்தனர். 90 சதவீத இந்திய மக் களின் வாழ்வாதாரத்தை நிலைகுலைய வைத்துள்ள பண மதிப்பு நீக்க நடவடிக் கைக்கு எதிராக, பெங்களூரு போராட்டம் போன்று நாடு தழுவிய கலகங்கள்தான் தேவை.

ஆனால், ''மோடியின் நோக்கம் நல்ல தென்றும், அதனைச் செயல்படுத்திய விதத்தில்தான் கோளாறுகள் இருப்ப தாக'' ஒரு மோசடித்தனமான கருத்தைப் பொதுமக்களின் புத்தியில் ஊடகங்கள் பதிய வைத்துவிட்டதால், போராட்டங் கள் சம்பிரதாய எதிர்ப்பு என்ற வரம்பைத் தாண்டுவதில்லை. பண மதிப்பு நீக்க நட வடிக்கையை முற்றிலுமாக ரத்து செய்யக் கோருவதற்குப் பதிலாக, பணத் தட்டுப் பாட்டை நீக்கு என்பதாகப் பொதுமக் களின் கோரிக்கையும் நீர்த்துப் போயி ருப்பதால், போராட்டங்களும் போராட்ட முழக்கங்களும் மோடி அரசை அச் சுறுத்துவதாக இல்லை.

■ அழகு

பணமில்லா பொருளாதாரம் என்ற பெயரில் சில்லறை வணிகர்களை ஒழிக்கத் திட்டமிடும் மோடியின் சதித்தனத்தைக் கண்டித்துத் தமிழ்நாடு வணிகர் சங்கப் பேரவையினர் பண அட்டை மாதிரிகளைத் தீயிட்டுக் கொளுத்தி சென்னையில் நடத்திய ஆர்ப்பாட்டம்.




பணம் எடுக்கக் காத்திருந்த பொதுமக்களை வெறுங்கையுடன் திருப்பி அனுப்பிய வங்கி நிர்வாகத்தைக் கண்டித்து சென்னை-வண்ணாரப்பேட்டை பகுதியில் பொதுமக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.



மோடியின் பணமதிப்பிழப்பு நடவடிக்கையை எதிர்த்து, குஜராத்தின் சூரத் நகரில் விவசாயிகள் நடத்திய போராட்டம்.



PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/15-17. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/15-17.

